விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 21 ஞாயிற்றுக்கிழமை (03.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 046

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பிரித்தானிய அரசு ஆதரவளிக்கும்



## அமைச்சர் அலஸ்ரயர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை மீதான புதிய தீர்மானத்திற்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என அந் நாட்டின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரேரணை சாதாரண விடயமல்ல

### எச்சரிக்கிறார் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணையை கொண்டுவர முயற்சிப்பதை சாதாரண விடயமாக கருத முடியாது என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சிக் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு ஐ.நா. சபைக்கு யோசனை முன்வைக்கும் சாத்தியமில்லை என்று இலகுவாக எடுக்கமுடியாது. இந்த நிலைமையை புலம்பெயர்புலிஆதரவுமக்கள்நன்றாக பயன்படுத்திக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## விடைபெற்றார் ஹிலாரி; வருகிறார் ஜோன் ஹரி




(வாஷிங்டன்)

இலங்கை விவகாரத்தில் இறுக்கமான போக்கை வெளிப்படுத்தி வந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் நேற்றைய தினம் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இதையடுத்து, அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலாளராக ஜோன்

(02ஆம் பக்கம் பார்க்க)



## 98 யோசனைகளை இலங்கை நிராகரிக்கும்?

(கொழும்பு)

இம்முறை ஜெனிவா மனித உரிமை பேரவையின் மாநாட்டில் இலங்கை சம்பந்தமாக முன்வைக்கப்பட உள்ள 209 யோசனைகள் அடங்கிய விசாரணை அறிக்கையில் 98 யோசனைகளை நிராகரிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த 98 யோசனைகளில் இலங்கை தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள போர் குற்றங்களை விசாரணை நடத்த சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு இணங்க வேண்டும் என்பது இலங்கை

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் பெய்த சிவப்பு மழை வேற்றுகிரகவாசிகள் வாழ்வதற்கான ஆதாரம்

### நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பொலநறுவை – அரலங்கவில பிரதேசத்தில் அண்மையில் கிடைக்கப் பெற்ற விண்கல்லின் பகுதிகள் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் பெய்த சிவப்பு மழையிலும் பூமிக்கு வெளியில் உயிரினங்கள் வாழ்வதற்கான உறுதிப்பாடுகள் தென்படுவதாக நாசா நிபுணர் தெரிவித்துள்ளார்.

சிவப்பு மழை மற்றும் விண்கல் பகுதிகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள நாசா நிறுவனத்தின் நிபுணர் பேராசிரியர் சந்ரா விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவருடன் பேராசிரியர் ரிச்சட் பீ ஹூபர் ஆகியோர் நேற்று மாலை சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்கவை சந்தித்துள்ளனர்.

அதன்போது, இதுவரை இடம்பெற்ற பரிசோதனைகள் தொடர்பான முன்னேற்றம் குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சிவப்பு மழை உட்பட ஏனைய பகுதிகளில் பல வர்ணங்களில் பெய்த மழை தொடர்பில் விரிவான

(02ஆம் பக்கம் பார்க்க)

## வீடமைப்பு திட்ட குளறுபடியில் இந்தியா தலையிட வேண்டும்!



### மனோ கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

இந்திய அரசின் உதவியுடன் வடக்கில் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடி நிலைமைகளில் இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன்

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இராஜதந்திரிகளே ஜெனிவா எதிர்ப்பை சமாளிப்பர்

(கொழும்பு)

ஜெனிவாவில் பெப்பரவரி 25 தொடக்கம் மார்ச் 22 வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள புதிய தீர்மானத்தை தோற்கடிக்கும் வகையிலான பரப்புரைகளில் இராஜ தந்திரிகளை ஈடுபடுத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

[illegible]உரிமைகள் ஆணைக்குழுவின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மீது மற்றொரு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூர் கொழும்பில் வைத்து கடந்த 28 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கை மீதான இந்தப் புதிய தீர்மானத்திற்கு

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் வாகனங்கள் ஏலத்தில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் 8000 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் குறித்த வாகனங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் விட்டுச் சென்றுள்ளனர். இந்த வாகனங்கள் கிளிநொச்சியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் போக்குவரத்திற்கு தகுதியுடையதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் இருவர் கிளிநொச்சிக்கு செல்லவுள்ளனர்.

போக்குவரத்திற்கு பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளதுடன் ஏனையவற்றை உடைத்து பழைய இரும்பாக விற்பனை செய்யப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் ஏல விற்பனை தொடர்பில் கவனம் செலுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (செ-11)

## மேலதிக மொழிகற்கை நெறிகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் செயற்பாட்டில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி அபிவிருத்திக்கான புதிய வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக் கற்கை நெறிகளில் இணைந்து கொள்ளும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பித்த ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள் அன்றைய தினம் சமுகமளித்து தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ்.நிலைய இணைப்பாளர் கலாநிதி எஸ்.என்.தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுவரை விண்ணப்பிக்காத தகுதியானவர்கள் அன்றையதினம் விண்ணப்பத்தை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ள ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

## இலங்கையின்...

இந்தியாவும் ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இத் தீர்மானத்தைத் தோற்கடிக்கச் செய்வதற்கு இராஜதந்திரிகள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளை ஈடுபடுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகின்றது.

அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள புதிய தீர்மானத்தை எதிர்த்து பரப்புரைகளை மேற்கொள்வதற்கு ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தலைமை தாங்குவார் எனவும் அறியமுடிகின்றது.

ஜெனிவாவில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 வது கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை தோற்கடிக்கும் முயற்சியில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மகிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, ரவூப்ஹக்கீம் மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட பலரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆயினும் இலங்கை மீதான தீர்மானத்தை தோற்கடிக்க அவர்கள் மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையிலேயே இராஜதந்திரிகள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளைக் கொண்டு புதிய தீர்மானத்துக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது. (செ-11)

## ௰௧ யோசனை...

தேசிய பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயமாகும். இந்த நிலையில் 111 யோசனைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த மாதம் 25-ம் திகதி ஆரம்பமாக வுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான 24 நாடுகள் அமெரிக்காவுடன் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் மாநாட்டில் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப் படவுள்ள குற்றச்சாட்டாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (செ-11)

# இலங்கையில் பெய்த...

ஆய்வுகளைமேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சினால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான இயற்கைக்கு மாறான மழை வீழ்ச்சி காரணமாக பொதுச் சுகாதாரத்திற்கு பாதிப்புகள் ஏற்படுமா என்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு மழையின் நீர் மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அவற்றில் நுண்ணுயிர்கள் இருந்தமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரலங்கவில பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்ட விண்கல் பகுதிகளிலும், சிவப்பு மழையிலும் உள்ள ஒற்றுமை குறித்து நாசா நிபுணர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி சோபோன் மற்றும் காடிஸ் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுக்கு அமைய குறித்த விண்கல் மாதிரிகளில் உள்ள நுண்ணுயிர்கள் பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அழிந்து போன உயிரினங்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இது பூமிக்கு வெளியில் அண்ட வெளியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்று புகழ்பெற்ற நட்சத்திர ஆய்வாளரான ஸ்ரீமத் வெஃட்ஹெறாயில்முன் வைத்துள்ள பென்ஸ் பர்மியா அடிப்படைக் கொள்கை இதனூடாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக இலங்கை வந்துள்ள நாசா நிபுணர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றில் கடந்த 500 வருடங்களுக்குள் பூமிக்கு வெளியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் அரலகங்கவிலவில் விண்கல் பகுதிகள் வீழ்ந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளருடன் இடம் பெற்ற கலந்துரையாடலில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-11)

## விடைபெற்...

ஹரி நேற்று நண்பகல் பொறுப்பேற்றுள்ளார்.

2-வது பதவிக்காலத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அமெரிக்க அதிபர் ஒபாமா, ஜோன் ஹரியை இராஜாங்கச் செயலாளர் பதவிக்கு முன்மொழிந்திருந்தார்.

அவரது நியமனத்துக்கு அமெரிக்க நாடாளுமன்ற மேலவை அனுமதியளித்துள்ளது.

ஹிலாரி கிளின்ரன் இராஜாங்கச் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில், போருக்குப் பிந்திய நிலைவரங்கள் தொடர்பாக, இலங்கை அரசுடன் இறுக்கமானநிலைப்பாட்டைப்பேணிவந்திருந்தார்.

அதேவேளை, புதிய இராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹரி இலங்கை விடயத்தில் அந்தளவுக்கு இறுக்கமான போக்கைக் காட்டுவாரா? என்ற எதிர்பார்ப்புக்கள் இருப்பது குறிப்பிடத் தக்கது. (செ-11)


## மரண அறிவித்தல்

### திலகவதி இராமசாமி

காலஞ்சென்ற இராமசாமி (இளைப்பாறிய விதானையர்) புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகள் திலகவதி நேற்று (02.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பகவதி, திருநாவுக்கரசு, கலாவதி, விவேகவதி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஹரிதாஸ், நிதியானந்தமனுநீதி, இராசலிங்கம், வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03.02.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அன்னாரது அச்சுவேலி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
இ.திருநாவுக்கரசு

(சி-2326)

## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829




## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 - O/L வரை கணிதம் பிரத்தியேக வகுப்புக்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0771063254

(1613)

## 'ENGLISH in ACTION'

(i) Basic Level (ii) Higher Level

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

773 212 711

(1637)

## அறிவித்தல்

ஆவரங்கால் மேற்கு மயிலு - பூமணிதேவி ஆகிய எனது பெயர் தவமணிதேவி அல்ல. சகல ஆவணங்களிலும் பதிவேடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் மயிலு பூமணிதேவி என்றே பாவிக்கின்றேன்.

இப்படிக்கு
ம.பூமணிதேவி

(1646)

## ஆட்கள் தேவை

தையல் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. (BRA)

பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு கொள்ளவும்

134, இராமநாதன் வீதி, கலட்டி.

0774211551

(1638)

## மூலிகை மருத்துவத்தில் சாதனை



தெய்வீக மூலிகை மருந்துகளால் ஆண்மைக்குறைவு, குழந்தையின்மை, மூலம், சொரியாசிஸ், சிறுநீரகப்பிரச்சனை, கேன்சர், மஞ்சள்காமாலை(B), பால்வினை நோய், எடைகூட /குறைய முழுமையாக குணமாகும் அதிசயம்

இந்தியாவிலேயே No.01 வைத்தியசாலையாகச் செயல்படும் எங்களது வைத்தியசாலையில் அரசு பதிவுபெற்ற 17 சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் பணிபுரிந்து எளிதில் குணப்படுத்த முடியாது என்று கூறப்படுகின்ற நோய்களையெல்லாம் முழுமையாக குணமடையச்செய்து சாதனை புரிந்து வருகின்றார்கள். நீங்களும் பயன்பெற உடனே தொடர்பு கொள்ளவும். வைத்தியர்களை நேரில் தொடர்பு கொள்ளமுடியாதவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்ற பின் மருந்துகளை தபாலில் பெற்றுக்கொள்ளலாம். எங்களது மருந்துக்கள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பித்தரப்படுகின்றன. எங்களது ஆயுர்வேத மருந்துகள் அனைத்தும் பக்கவிளைவுகள் அற்றது.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

செல்: 0091 9842457673

இலங்கைச் செல்: 0754154364

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

E-mail: sridevisiddha@gmail.com

(சி-2324)

## NORTH LEAD — COMPUTER & ACCESSORIES WHOLESALER

Tel: 021-222 4459, 0772533390. Fax : 021-222 4460



| | | |
|---|---|---|
| 4GB Micro Sd : 475 | E 173 Mul. Dongle : 3475 | Intel D.C Processor : 8750 |
| 8GB Pendrive : 1100 | 13 M.P Webcamera : 775 | Intel I-5 M. Board : 7850 |
| 16GB Pendrive : 1850 | Headphone with Mic: 300 | 500GB Hard Disk : 8500 |
| 32GB Pendrive : 3750 | 21.M. Mul. Dongle : 4900 | 1000GB Hard Disk :13250 |
| | Optical Mouse From: 320 | 2GB Kingstan Ram : 2450 |
| | 3 Langua Keyboard : 550 | 4GB Kingstan Ram : 3550 |
| | Notebook Coolpad : 875 | Samsung Dvd Writer: 2775 |
| | Microlab Woofer : 4500 | ATX Casing : 2575 |
| | Laptop Woofer : 1400 | 1User Kaspersky : 1650 |
| | Intel I-3 LGA Fan : 875 | 1User Kaspersky : 3250 |
| | Matrix UPS Battery: 1650 | 450w Power Supply : 1550 |
| | Laptop Charger : 1675 | Flexble Keyboard : 850 |
| | D-link 4port Router: 5700 | Laptop Charger Org : 2375 |



Techfine UPS
650w: 4475
1200w: 9850
1500w:14,500
Warranty: 18 Months



19"Samsung LED Rs. 12650

19"HP LED Rs. 12800



HP Deskjet 1050 Print, Scan, Colour Photo Copy Rs. 12650 Warranty: 12 Months

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம், உங்கள் கணனிகள் அனைத்தும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். (Open 7 Days)

No: 328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட போட்டியில் அரியாலை ஐ.வி.க. வெற்றி

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில்கொண்டலடி ராஜா விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆண்களுக்கு நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. இதில் அரியாலை ஐ.வி. கழகம் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் மணியம்தோட்டம் ஐக்கிய விளையுாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:22, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டு முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.

மிக நீண்ட காலத்திற்கு பின் மீளக்குடியமர்த்தப்பட்ட மணியம்தோட்ட பிரதேச மக்கள் இம்முதல் போட்டியில் 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர் என நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (அ)

# தும்பளை லூர்து அன்னை ஆலய வருடாந்த திருவிழா

(தும்பளை)

தும்பளை புனித லூர்து அன்னை யாத்திரை திருத்தல திருவிழாவுக்கு ஆயத்த நவ நாட்கள் நேற்று பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோன் மவுலிஸ் அடிகளாரினால் புனித லூர்து அன்னையின் திருவுருவ கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நவநாள் வழிபாடுகள் திருச்செபமாலையுடன் தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து திருப்பலியும் திருமறையுரையும் நடைபெறும். திருமறை உரையை அருட்பணி ராஜ்கிளேயர் (அ.ம.தி.) நவநாட்களில் வழங்குவார்.

இறுதி நாளாகிய எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் திருமறையுரையும் திவ்விய நற்கருணை ஆராதனையும் பவனியும் நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும் 7.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆஜர் தோமஸ் சவுந்தர நாயகம் தலைமையில் கூட்டுப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து புனித லூர்து அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

இத்திருத்தலத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (அ)

# தியாகராஜா சுவாமிகளின் 166 ஆவது ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 166 ஆவது ஆராதனை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வட இலங்கை சங்கீத சபை தலைவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருமான செ.உதய குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் வை.செல்வராஜா, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலாளர் வே. தி.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களான ஆ.இராஜேந்திரன், எஸ். பிறேமகாந்தன், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார், யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# முருகன்- நளினி நேற்று சந்திப்பு

(வேலூர்)

வேலூர் சிறையில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை குற்றவாளிகள் நளினி, அவரது கணவர் முருகன் ஆகியோர் 15 நாட்களுக்கு ஒருமுறை சந்தித்து வருகின்றனர். அதன்படி நேற்று சனிக்கிழமை காலை 7.15 மணி முதல் 7.45 மணி வரை சந்திப்பு நடந்தது. வேலூர் ஆயுதப்படை டி.எஸ்.பி. தலைமையிலான பொலிஸார் முருகனை பெண்கள் சிறைக்கு அழைத்து சென்றனர். சந்திப்பு முடிந்ததும் முருகன் மீண்டும் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டார். (அ-5)

# வாரம் ஒரு தகவல்

## எது பாதுகாப்பு...?

பார்வையிழந்த முதியவர் ஒருவர் வாழ்கின்ற அதே கட்டடத்தின் இன்னொரு பகுதியில் அவரது நண்பர் வசித்து வருகின்றார்.

ஒருநாள் நண்பரிடம் சென்று பேசி விட்டு வரலாம் என நினைத்து புறப்பட்டுச் சென்றார். நண்பருடன் பேசிக் கொண்டிருந்த அவருக்கு இருண்டதே தெரியவில்லை.

உடனே தான் வசிக்கும் இடத்திற்கு செல்ல ஆயத்தமானார். அந்த நேரத்தில் "இதை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்!" என்று நண்பர் கூறினார்.

"எதை?" என்று கேட்டார்.

அவர் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். பிடித்துத் தூக்கிச் செல்வதற்கு வசதியாக அதனடியில் மூங்கில் குச்சிகள் வைத்துக் கட்டப்பட்டிருந்தன.

விளக்கை வாங்கிக் கொண்ட அந்த பார்வையற்ற முதியவர் சிரித்தார்.

"எனக்கோ... பார்வை இல்லை. என்னைப் பொறுத்தவரையில் வெளிச்சத்திற்கும் வெளிச்சமின்மைக்கும் எவ்வித வேறுபாடுமில்லை.

எனக்கு இரவும் பகலும் ஒன்றுதான். இந்த விளக்கு எனக்கு எப்படி உதவ முடியும்?" என்று கேட்டார்.

"ஆம். நீங்கள் சொல்வது சரிதான். இது உங்களுக்கு உதவ முடியாதுதான். ஆனாலும் எதிரே வருகின்றவர்களுக்கு உதவும் அல்லவா"

அவர்கள் உங்களின் மீது மோதிக் கொள்ளாமல் இருக்க பெரும் உதவியாக இருக்கும் என்று கூறினார்.

சரி அவர் சொல்வது உண்மைதான் என்று சிந்தித்தவாறு மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தார் அந்த முதியவர்.

சிறிது நேரத்தில் எதிரே வந்த ஒருவர் முதியவர் மீது மோதிக் கொண்டார். இருவருமே நிலை தடுமாறி விட்டார்கள்.

"ஐயா... பார்த்து வரக்கூடாதா...?" என்று கேட்டார்.

பாவம்... பார்வையிழந்த முதியவர் என்ன செய்ய முடியும்; கையில் விளக்கு வைத்திருக்கின்றேனே... நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கேட்டார்.

அந்த நேரத்தில்தான் அவர் பார்வையிழந்தவர் என்பதை உணர்ந்து கொண்டார் வீதியால் வந்து மோதிக் கொண்டவர். "மன்னிக்க வேண்டும்... முதியவரே! உங்கள் கையில் இருக்கின்ற விளக்கு அணைந்து விட்டது!" எதுவுமே தெரியவில்லை என்றான்.

"பழக்கமில்லாத வெளிச்சத்தை விட பழகிய இருள் பாதுகாப்பானது!" என சிந்தித்தவாறே பார்வையிழந்தவர் சென்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

03.02.2013
(தை 21, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிவரை
சப்தமி காலை 6.35 மணிவரை
அட்டமி பின்னிரவு 4.29 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.16 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
அட்டமி-நவமி

**மேடம்** புகழ் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இறை நம்பிக்கை அதிகரிக்கும், விருப்பங்கள் நிறைவேறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் வகுப்பீர்கள்.

**கடகம்** புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்து வந்த பாரம் குறையும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கல்வியில் மேன்மையுண்டு.

**சிங்கம்** அன்பு நண்பர்களின் ஆதரவு கூடும், சகோதர ஒற்றுமை மேலோங்கும், எடுத்த கருமங்களில் முன்னேற்றம் உண்டாகும், ஆதாயம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி கூடும், வியாபாரத்தை விரிவு படுத்த நினைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், வரவு திருப்திதரும்.

**துலாம்** பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிள்ளைகளுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்** சேமிப்பு உயரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், தொழில் வளர்ச்சி கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், பெண் வழிப் பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புகள் கைகூடலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், ஆரோக்கிய நலன் கருதி ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருவர்.

**மீனம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 160 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 80-100 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 260 | 250 | 250 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 70 | 100 | 100 |
| கரட் | 120 | 120 | 200 | 160 |
| பூசணி | 40 | 30 | 50 | 50 |
| புடோல் | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 75 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100-120 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 140 | 180 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 60 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 220 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 600 | -- | -- |
| போஞ்சி | 60 | 70 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | 140 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 20-30 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-45 | 40 | 45 | 40-45 |
| இராகவள்ளி | 80 | 100 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 200 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பியாட் போட்டிக்கு இருவர் தெரிவாகினர்





(யாழ்ப்பாணம்)

ஆசிய மட்டத்தில் இடம்பெறும் ஒலிம்பியாட் போட்டிக்கு வடக்கினைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியான க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற செல்வி மிதுரிகா மிகுந்தன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால மாணவனான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற செல்வன் சிவசுப்ரமணியம் பவித்திரன் ஆகிய இருவரும் பௌதி கவியல் ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவாகி இந்தோனேசிய நாட்டிற்கு பயணமாகவுள்ளனர்.

இலங்கையிலிருந்து மேற்குறித்த போட்டிக்கு 8 மாணவர்கள் தெரிவாகியுள்ள நிலையில் அதில் 2 மாணவர்கள் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)


நன்றி:- மிரர்




## இரத்ததான நிகழ்வு

(மானிப்பாய்)

யாழ்.கல்வாரி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இரத்த தான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையில் பாண்டியன் தாழ்வு புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

உயிர்காக்கும் இவ் உன்னத பணியில் பங்கு கொள்ள வருமாறு கல்வாரி ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.(அ-5-23)

## பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய திறப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலக்கம் 3, ஐயனார் தெரு, மகாத்மா வீதியில் அமைக்கப்பட்டுள்ள இத்தியான நிலையத்தை பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழக வர்த்தக தொழிற்றுறை பிரிவு நிர்வாக அங்கத்தவர் சகோதரி தீபா பெஹலஜ் குல்ரஜ்னி திறந்து வைக்கவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து ஆளுமை விருத்தி-எட்டு வழிகள் என்ற தொனிப் பொருளினாலான இவரின் கருத்துரை இடம் பெறவுள்ளது. (அ-5)

# வேதனைகள் ஊடாக இலட்சியத்தை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்

## பொப்பிசை பாடகர் நடிகர் ஏ.இ.மனோகரன்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திரைப்படத்தில் நடிப்பதென்பது சொர்க்கத்தின் வாசலல்ல நரகத்தின் வாசலே. தேநீர் குடிப்பதற்கு கூட பணம் இல்லாமல் கஷ்டப்பட்டேன் என்கிறார் யாழ்.மண்ணின் புகழ் பெற்ற பொப்பிசைப் பாடகர் தென்னிந்திய திரைப்பட நடிகர் ஏ.இ.மனோகரன். யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு யாருடைய உதவிகளையும் எதிர்பார்க்காதீர்கள். சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தொடர்ந்து அதில் ஈடுபாடு செலுத்துங்கள். கலையாக இருந்தாலும் சரி வேறு எந்த தொழிலாக இருந்தாலும் சரி தொடர்ந்து செய்யாமல் விட்டால் அதற்கு சாவு மணி அடித்ததற்கு சமனாகும்.

வெற்றி பெறுவது சாதாரணமான விடயமல்ல. தொடர்ந்து அதில் ஈடுபட வேண்டும்.

அவ்வாறு ஈடுபாடு செலுத்தி வந்தால் முன்னேற்றத்திற்கு தடையில்லை.

யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட பாசறிலா என்னும் திரைப்படத்தில் முதன் முதலாக நடித்திருந்தேன். அந்தத் திரைப்படம் மறக்க முடியாத அனுபவமாக அமைந்திருந்தது.

ஆனால், தென்னிந்தியாவை பொறுத்த வரை திரைப்படத்தில் நடிப்பதென்பது இலகுவான விடயமல்ல. அது சொர்க்கத்தின் வாசலல்ல நரகத்தின் வாசலே.

எல்லாக் கலைஞனும் கலையை தொழிலாகவே செய்ய வேண்டிய நிலையுள்ளது. காரணம் பொருளாதார நிலை.

இந்தியாவுக்கு சென்றபோது உடனடியாக எந்த வாய்ப்புக்களும் எனக்கு கிடைக்கவில்லை. பல வருடங்களாக வாய்ப்பினை எதிர்பார்த்து அலைந்து திரிந்தேன்.

தேநீர் குடிப்பதற்கு கூட பணம் இல்லாமல் பிறருடைய உதவியை எதிர்பார்த்து காத்திருந்தேன்.

சுராங்கனி பாடல் 45வருடங்களாக பேசப்படுகின்றது. நிலைத்து நிற்கிறது. ஆனால், அதற்காக நான் பட்ட கஷ்டங்களும் அவமானங்களும் வார்த்தைகளால் கூற முடியாதவை.

இந்தியாவில் எந்தத் துறையிலும் வாய்ப்புக்கள் என்பது உடனடியாக கிடைக்காது. அதுவும் திரைப்படத்துறையில் வாய்ப்பு என்பது மிகவும் கடினமானது.

நான் 50 ஆயிரம் பாடல்கள் பாடவில்லை.இருப்பினும் என்னுடைய ஒரு பாடல் 45 வருடங்களுக்கு மேலாகவும் பேசப்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.

இந்தியாவில் இலங்கையர்களுக்கு வாய்ப்பு கிடைப்பது எவ்வளவு கஷ்டமான விடயம் என்பதை நொந்து நூலான என்னைப் போன்றவர்களுக்குத்தான் தெரியும்.

வேதனைகளும் இழப்புக்களும் அவமானங்களும் இல்லாமல் எதுவும் கிடைக்காது.



இருப்பினும் இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டும்.

இலங்கையிலிருந்து சென்று இந்தியாவில் 200 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளேன். பல மொழிப் படங்களிலும் நடித்துள்ளேன். சில படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள்ளேன்.

தனியொரு மனிதனாக வாய்ப்புக்கள் கிடைக்காத இந்தியாவில் சாதிக்க முடிந்ததை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

எதிர்காலத் தலைமுறை உருவாக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மண்டான் நாச்சிமார் வீதியை புனரமைக்க கோரிக்கை

மண்டான் நாச்சிமார் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் அவ்வீதியால் செல்வோர் பெரும்சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மண்டான் கிராமத்திலுள்ள 4 வீதிகளில் 3 வீதிகள் புனரமைக்கப்பட்டபோதிலும் மேற்குறித்த வீதியே புனரமைக்கப்படவில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் இவ்வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறும் மின்விளக்குகளை இவ்வீதிக்கு பொருத்தி இரவு வேளையில் விபத்துக்களை குறைப்பதற்கு உதவுமாறும் அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-74)

# வடமாகாணம் கல்வியில் பின்தங்கிவிடவில்லை

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெறுவதற்கு எமது ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் அர்ப்பணிப்புத்தான் காரணம் என வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையில் சிறந்த பெறுபேற்றினை பெற்ற மாணவர்களினை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து காண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கி விடவில்லை என்பதற்கு சான்றாக எமது மாணவர்கள் தமது திறமையினை வெளிக்காட்டியுள்ளனர்.

இதற்கு எமது ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் கடின உழைப்பும் அர்ப்பணிப்புமே காரணமாகும்.

எதிர்காலத்தில் இப்பெறுபேறுகளினை விட தேசிய ரீதியில் எமது மாணவர்கள் சாதனை படைக்க வேண்டும்.

விசேட பயிற்சி வகுப்புக்கள், பாடசாலை மாணவர்களிற்கு தேவையான ஊக்குவிப்புக்கள் என்பவற்றினை ஆளுநர் உட்பட அனைவரும் [illegible] உழைப்பும் முயற்சியும் இருந்தால் நாம் உலக ரீதியில் மிளிர முடியும் என்றார். (அ-4)

# குடமியன் இந்துமயானத்தை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன் இந்துமயானம் சடலங்களை உரிய முறையில் எரியூட்டக்கூடிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மயானத்தை கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக நாவற்காடு, குடமியன், வரணி, இயற்றாலை ஆகிய பகுதிகளிலுள்ள 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சடலங்களை எரியூட்டுவதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

[illegible] சடலங்களை வைத்து எரியூட்டக் கூடிய [illegible] அமைக்கப்படவில்லை. அத்துடன் மழை காலங்களில் சடலங்கள் நனையாதவாறு தகனம் செய்யக்கூடிய கொட்டகை வசதிகள் எவையும் இல்லை. இதனால் வெறும் நிலத்திலேயே எரிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

இந்த மயானத்திற்கு செல்லும் வீதியும் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உள்ளதுடன் இம் மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள கிணறும் பழுதடைந்துள்ளது.

இந்த மயானத்தில் இளைப்பாறும் மண்டபமும் இல்லை. எனவே இந்த விடயத்தினை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து குடமியன் இந்துமயானத்தை புனரமைத்துதருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1540

E-mail : valampuriijaffna@gmail.com










நிரந்தர வைப்புக்கான கவர்ச்சிகரமான வட்டி வீதம்

| வைப்பீட்டுத் தொகையின் பெறுமதி | 15 மாதங்கள் | | | | 18 மாதங்கள் | | | | 2 வருடங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | |
| | % | வ.வ.வீ | % | வ.வ.வீ | % | வ.வ.வீ | % | வ.வ.வீ | % | வ.வ.வீ | % | வ.வ.வீ |
| 50,000.00 | 14.25 | 14.01 | 12.90 | 13.69 | 14.30 | 13.82 | 13.15 | 13.97 | 14.40 | 13.49 | 13.30 | 14.14 |
| 100,000.00 | 14.20 | 13.96 | 12.75 | 13.52 | 14.25 | 13.77 | 13.00 | 13.80 | 14.30 | 13.40 | 13.15 | 13.97 |
| 200,000.00 | 14.75 | 14.50 | 13.40 | 14.25 | 14.80 | 14.29 | 13.65 | 14.54 | 14.90 | 13.93 | 13.80 | 14.71 |
| 300,000.00 | 14.75 | 14.50 | 13.30 | 14.14 | 14.80 | 14.29 | 13.60 | 14.48 | 14.90 | 13.93 | 13.75 | 14.65 |
| 500,000.00 | 12.85 | 12.66 | 11.45 | 12.07 | 12.90 | 12.51 | 11.70 | 12.35 | 13.00 | 12.25 | 11.85 | 12.52 |
| 1,000,000.00 | 10.95 | 10.81 | 9.60 | 10.03 | 11.00 | 10.71 | 9.85 | 10.31 | 11.10 | 10.54 | 10.00 | 10.47 |
| 2,000,000.00 | 10.25 | 10.12 | 8.90 | 9.27 | 10.35 | 10.09 | 9.15 | 9.54 | 10.45 | 9.95 | 9.30 | 9.71 |

ISO 9001:2008 தரத்தில் தர முகாமைத்துவ ஒழுங்கமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்ட இலங்கையின் முதல் நிதி நிறுவனமாகும்.

PEOPLE • PLANET • PROFIT

"எலாயன்ஸ் இல்லம்", இல.84, வார்ட் பிளேஸ், கொழும்பு 07.

தொலைபேசி - 0112 673 673 தொடர் இணைப்பு - 128/280/281/282/283 தொலைநகல் - 0112 691 090

E-mail : deposits@alliancefinance.lk Web : www.alliancefinance.lk

இலங்கை மத்திய வங்கியின் நிதித்தொழில் சட்டம் 2011 இல.42 இன் கீழ் அனுமதி பெற்றது | RAM BBB/P2 தரப்படுத்தப்பட்டது வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக 1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி நிறுவப்பட்டது

1956 இல் இருந்து

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

நம்பிக்கையினால் கட்டியெழுப்பப்பட்ட புத்தாக்கச் சக்தி

கம்பனி இல. PQ93

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 0774-773680 | சிலாபம் | 0770-106414 | நீர்கொழும்பு | 0777-699755 | யாழ்ப்பாணம் | 0771-090148 | கண்டி | 0773-660875 | வவுனியா | 0774-773678 | கதுருவெல | 0770-106461 | ஹொரண | 0773-501416 |
| அம்பலாந்தோட்ட | 0773-660876 | கலேவெல | 0773-098752 | அனுராதபுரம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible]-647533 | காலி | 0773-936170 | மாத்தறை | 0777-761300 | புத்தளம் | 0773-660910 |
| திருகோணமலை | 0771-090105 | கிளிநொச்சி | 0771-090144 | ஜாஎல | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible]3-098744 | கணேமுல்ல | 0777-761666 | குளியாப்பிட்டி | 0774-773727 | கொழும்பு | 0770-118567 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, தென்மராட்சி, மடு, கிளிநொச்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள் சேவைக்கால அடிப்படையில் வேறு வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடமாற்றம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடமாற்றம் பெறும் ஆசிரியர்களினதும் அவர்கள் இடமாற்றம் செய்யப்படும் கல்வி வலயத்தினதும் விபரம் வருமாறு,

**வவுனியா தெற்கு வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடமாற்றம் பெறுவோர்**

திருமதி ஜே.தயாநிதி (வவு/கந்தபுரம் வாணி வித்தி.), திருமதி ஆர்.யூட் நேசராஜா (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி கௌரி நளினி தியாகராஜா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.), திருமதி வி.ராஜலிங்கம் (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.), திருமதி பி.சுதர்சன் (வவு/சமலங்குளம் அ.த.க.பா.), திருமதி கே.ராஜேந்திரன் (வவு/கரும்பனிச்சன்குளம் அ.த.க.பா.), திருமதி ஆர்.சிவகுமாரன் (வவு/சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை), திருமதி வி.முருகானந்தன் (வவு/திருஞானசம்பந்த வித்தி.), திருமதி ரி.பரமேஸ்வரி (வவு/அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி), திருமதி ஏ.நந்தகுமார் (வவு/மூன்றுமுறிப்பு அ.த.க.பா.), திருமதி யு.வில்வாநந்தா (வவு/தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தி), திருமதி ஜி.அருலிங்கம் (வவு/தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தி), ரி.ஜனநாதசிவம் (வவு/கந்தபுரம் வாணி வித்தி), திருமதி வி.நவரட்ணராஜா (வவு/ இந்துக் கல்லூரி)

**வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்வோர் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி வி.மகேசன் (வவு/கனகராயன் குளம் மகா வித்தியாயலம்), திருமதி ஏ.சிவாநந்தம் (வவு/கனராயன் குளம் மகா வித்தியாலயம்), எஸ்.விணோத்குமார் (வவு/கனகராயன் குளம் மகா வித்தியாலயம்), ரி.கோடீஸ்வரன் (வவு/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்), எம்.முருகதாசன் (வவு/ கனகராயன் குளம் மகா வித்தியாலயம்), பி.கேதீஸ்வரன் (வவு/நெடுங்கேணி மகா வித்தியாலயம்), திருமதி கே.உதயனன் (வவு/புளியங்குளம் இந்துக் கல்லூரி), செல்வி ஆர்.பிருந்தா (வவு/பட்டிக்குடியிருப்பு அ.த.க.பா.), திருமதி வி.சிவசாந்தி (வவு/கரப்புக்குத்தி அ.த.க.பா.), வி.பெரியசாமி (வவு/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்), ரி.வசிகரன் (வவு/ஒலுமடு அ.த.க.பா.), திருமதி எஸ்.தெய்வேந்திரன் (வவு/ஓமந்தை மத்திய கல்லூரி), திருமதி ஏ.ஏச்.வதனகுமாரி (வவு/புதுக்குளம் மகா வித்தி), கே.சுந்தரசர்மா (வவு/புதுக்குளம் மகா வித்தி), திருமதி ஈ.ரோகினி (வவு/ புதுக்குளம் மகா வித்தி), திருமதி ரி.தயாளினி (வவு/புதுக்குளம் மகா வித்தி), எஸ்.செந்தூரன் (வவு/ புதுக்குளம் மகா வித்தி), திருமதி ஏ.நளாயினி (வவு/ புதுக்குளம் மகா வித்தி), பி.தற்பரன் பொன்கலன் வவு/புதுக்குளம் மகா வித்தி), செல்வி ரி.புஸ்பகலாராணி (வவு/புதுக்குளம் மகா வித்தி), எஸ்.சுயதீப் (வவு/சேமமடு சண்முகானந்தம் ம.வி.), திருமதி ஜே.செந்தில்பாலன் (வவு/கிடாய்ச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா.), திருமதி எம்.செல்வராசா (வவு/கிடாய்ச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா.) ஏ.திலீபன் (வவு/தவசி குளம் அ.த.க.பா.), திருமதி பி.சுபாநந்தினி (வவு/தவசி குளம் அ.த.க.பா.), செல்வி ஜி.கொலஸ்ரீனா (வவு/பன்றிகெய்தகுளம் அ.த.க.பா.), திருமதி எஸ்.யோகேஸ்வரி (வவு/வேடர் மகிழன்குளம் அ.த.க.பா.), திருமதி கே.சண்முகரட்னம் (வவு/பம்பைமடு அ.த.க.பா.), என்.தவரூபன் (வவு/பம்பைமடு அ.த.க.பா.), கே.சந்திரகுமார் (வவு/பூம்புகார் கண்ணகி வித்தி), எஸ்.தில்லைவாசன் (வவு/பூம்புகார் கண்ணகி வித்தி), திருமதி ஜே.கவிதா (வவு/சுந்தரபுரம் அ.த.க.பா.), திருமதி கே.வாணி (வவு/ சுந்தரபுரம் அ.த.க.பா.), திருமதி எஸ்.சிவனேஸ்வரி (வவு/தரணிக் குளம் கணேசா வித்தி), செல்வி என்.கமலநாயகி (வவு/ தரணிக்குளம் கணேசா வித்தி), எஸ்.சுரபாஸ்கரன் (வவு/தரணிக்குளம் கணேசா வித்தி), திருமதி பி.கதிர்வாணன் (வவு/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி), திருமதி பி.செல்வரஜனி (வவு/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி), திருமதி ஈ.நவரட்ணமலர் (வவு/மறவன்குளம் பாரதிதாசன் வித்தி), திருமதி வி.சுஜாதா (வவு/மறவன் குளம் பாரதிதாசன் வித்தி), திருமதி எம்.சசிகலா (வவு/மறவன்குளம் பாரதிதாசன் வித்தி), பி.ரகுநாதன் (வவு/மறவன்குளம் பாரதிதாசன் வித்தி), திருமதி கே.சிலோஜினி (வவு/புதுக்குளம் ஜூனியர் பாடசாலை), செல்வி வி.சுவர்ணா (வவு/பன்றிகெய்தகுளம் அ.த.க.பா.), ஆர்.பகீரதன் (வவு/கல்மடு மகா வித்தியாலயம்), திருமதி எஸ்.பழனிகேதன் (வவு/நெடுங்கேணி ம.வி.), எம்.தவரூபன் (வவு/ மதியாமடு விவேகானந்தா வித்தி),திருமதி வி.பவானந்தசர்மா (வவு/கனகராயன்குளம் ம.வி.), கே.குகதீபன் (வவு/கனகராயன்குளம் ம.வி.), நித்தியானந்தக் குருக்கள் பவானந்த சர்மா (வவு/கனராஜன் குளம் ம.வி.)

**முல்லைத்தீவு வலயத்தில் இருந்து இடமாற்றம் பெறுவோர்**

திருமதி பி.தர்மபாலன் (மு/முல்லைத்தீவு மகா வித்தி), எஸ்.ஜெயபாலன் (மு/முல்லைத்தீவு மகா வித்தி, ஏ.வத்சலன் (மு/முல்லைத்தீவு மகா வித்தி), கே.மோகனராஜன் (மு/வித்தியானந்தாக் கல்லூரி), கே.சுபாஸ்கரன் (மு/வித்தியானந்தாக் கல்லூரி), கே.கணேந்திரன் (மு/வித்தியாணந்தாக் கல்லூரி), பி.கேசவன் (மு/செம்மலை மகா வித்தி, பி.கேதீஸ்வரன் (மு/முல்லியவளை தமிழ் வித்தியாலயம்), செல்வி ஆர்.கமலவேணி (மு/தண்ணீரூற்று ஏச்.பி .ரி.எம்.எஸ்.), செல்வி கே.விஜிதா (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), செல்வி எஸ்.சுபாசினி (மு/இரணைப்பாலை றோ.க. மகாவித்தி), எஸ்.சிவரூபன் (மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.), திருமதி எம்.செல்வகரன் (மு/உடையார்கட்டு மகா வித்தி, திருமதி எஸ்.பேரின்பவதனி (மு/உடையார்கட்டு மகா வித்தி), திருமதி எம்.சிறிதரன் (மு/ உடையார் கட்டு மகா வித்தி), பி.கமலக்கண்ணன் (மு/ வள்ளிபுனம் இரண்டாம்தர உயர்தர பாடசாலை), பி.பாலகிருஷ்ணன் (மு/விசுவமடு மகா வித்தி), பி.முரளிதரன் (மு/விசுவமடு மகா வித்தி, திருமதி பி.சர்மிளா (மு/விசுவமடு மகா வித்தி, திருமதி பி.சிவசுப்பிரமணியம் (மு/பாரதி வித்தி), திருமதி எம். ஜி.டி.இருதயநாதர் (மு/மந்துவில் அரசரட்னம் வித்தி, திருமதி பி.குமாரவேலு (மு/தேராவில் தமிழ் வித்தி, எஸ்.வசந்தகுமார் (மு/புதுக்குடியிருப்பு றோ.க .வித்தி, என்.நவரத்தினகுமார் , வை.முகுந்தன் .

**தென்மராட்சி வலயத்தில் இருந்து இடமாற்றம் பெறுவோர்**

திருமதி எஸ்.ஸ்ரீகணேசன் (டிறிபேக் கல்லூரி), திருமதி ஐ.கஜேந்திரன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), திருமதி எஸ். ஞானதேவன் ( நாவற்குழி ம.வி.), கே. குகதாசன் ( உசன் இராமநாதன் ம.வி.), திருமதி எஸ். விக்னேஸ்வரன் (வரணி மகா வித்தியாலயம்), திருமதி எஸ். லோகதாஸ் (வரணி மகா வித்தியாலயம்), திருமதி கே. சிவகரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), திருமதி ரி. அலெக்சாண்டர் (கச்சாய் அ.த. க.பா.), திருமதி எஸ். சிவதாசன் (மட்டுவில் தெற்கு அ.மி. த. க.பா.), ஆர். அகிலஜெயம் (கைதடி சேது காவலர் வித்தியாயலம்), எம். சிவகுமார் (போக்கட்டி அ.மி.த.க.பா.), திருமதி ஆர். நரேந்திரன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வி எம். சேனாதிராஜா (யா/நாவற்குழி ம.வி.), திருமதி எஸ்.சரவணநாதன் (யா/அல்லாரை அ.த.க.பா.), செல்வி பி. தர்மலிங்கம் (யா/மட்டுவில் தெற்கு அ.மி. த.க.பா.), திருமதி ரி. சபேசன் (யா/கல்வயல் சிறி சண்முகானந்தா வித்தி), எஸ். தவராஜா (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை)

**மடு வலயத்திலிருந்து இமாற்றம் பெறுவோர்**

திருமதி ஏ.ஜெனித்தா(அடம்பன் ம.ம.வி.), திருமதி டி.ஜே.வி.குரூஸ் (அடம்பன் ம.ம.வி.), என்.முருகவேள்(ஆண்டான்குளம் றோ.க. த.க.பா.), எஸ்.கொலஸ்ரின் (ஆண்டான் குளம் றோ.க. த.க.பா.), எஸ்.றஞ்சன் பாபு (இலுப்பைக்கடவை ம.வி.), பி.இரவீந்திரன் (இலுப்பைக் கடவை ம.வி), திருமதி ஏச்.ஐ.யூட் புனிதராஜ் (வட்டகண்டல் அ.த.க.பா.), திருமதி ஏ.இமெல்டா மாரதி (கன்னாட்டி றோ.க. த.க.பா.), எஸ்.சசிதரன் (சின்னப்பன்றிவிரிச்சான் அ.த.க.பா), ஜி.ஈஸ்வரி (பெரியபன்றி விரிச்சான் ம.வி.), எம்.சுசீந்திரன் (பெரியபன்றிவிரிச்சான் ம.வி.), திருமதி எஸ்.ஜெயமலர் (கட்டையடம்பன் றோ.க. த.க.பா.), திருமதி அன்னமேரி அல்வின் டெபேறா (தம்பானைக்குளம் அ.த.க.பா.), டனிஸ்ரன் விஜயகுமார் (சின்னப்பன்றிவிரிச்சான் அ.த.க.பா.)

**யாழ்ப்பாணம் வலயத்திலிருந்து இடமாற்றம் பெறுவோர்**

ஏ.றமேசன் (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி), திருமதி ஏ.சுதாரஜினி ( யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சசீலன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), திருமதி வி.சுரேஸ் (யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), திருமதி வி.ஜயகணேசன் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), திருமதி கே.சுதர்சினி (யா/நவக்கிரி அ.மி.த.க.பா.), ஏ.சடாச்சரலிங்கம் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.வேதநாயகம் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ஏ.றொபின்சன் (யா/பாசையூர் சென்.அன்ரனீஸ் மகளிர்வித்தி,எஸ்.அண்ணாமலை(யா/சென்.சாள்ஸ் ம.வி.), ஜி.கோவிந்து (யா/இருபாலை சீ.சீ.த.க.பா.), ஜெ. ஜெயஞானமோகன் (யா/ஆவரங்கால் நடராஜராமலிங்கம் வித்தி.), திருமதிஏ.ஜே.அனிற்மரிடா (யா/சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி), திருமதி ஏ. நேமிநாதன் (யா/நவக்கிரி அ.மி.த.க.பா.), திருமதி ஏ.கேமராஜீ (யா/அச்செழு மெ.மி.த.க.பா.), பி.சுமதிலா (பெரியபுலம் ம.வி.), பி.கிரிசங்கர் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எஸ். அஜந்தன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி கே.நளிந்தினி (யா/அரியாலை கிழக்கு அ.த.க. பா.), ரி.அனித்தா (யா/அரியாலை கிழக்கு அ.த.க.பா.), திருமதி எஸ். சிவானந்தன் (யா/கல்வியங்காடு இ.த.க.பா.), திருமதி ஜி.விஜயதர்சினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), திருமதி எஸ். பிரதீபன் (யா/சென்.சார்ள்ஸ் ம.வி.), தனுஜா தவயோகராஜா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி பி. பிரதீபா (யா/ அச்செழு சீ.சீ. த.க.பா.), திருமதி பி.தீபன் (யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தி)

**துணுக்காய் வலயத்திலிருந்து இடமாற்றம் பெறுவோர்.**

எம்.தேவகாந்தன் (புதுக்குளம் மகா வித்தி, திருமதி ரி.மணிகுமார் (பாலிநகர் ம.வி.), திருமதி எம்.செல்வநாயகம் (பாலிநகர் ம.வி), திருமதி எம்.ஐங்கரன் (பாலிநகர் ம.வி), எஸ்.சசிகரன் (வன்னிவிளாங்குளம் அ.த.க.பா.), பி.காண்டீபன் (மல்லாவி மத்திய கல்லூரி), எஸ். ஜெயச்சந்திரன் (மல்லாவி மத்திய கல் லூரி), திருமதி ஜே.தர்மதாஸ் (கல்விளான்குளம் அ.த.க.பா.), கே.சசிகரன் (ஆலன் குளம் அ.த.க.பா.), திருமதி ஐ.வின்சனா (அனிஞ்சியன் குளம் த.க. வித்தி), திருமதி ஆர்.குமுதினி (புத்துவெட்டுவான் அ.த.க.பா.), வி.கனேந்திரன் (புத்துவெட்டுவான் அ.த.க.பா.), ரி.நவநீதன் (தென்னியன்குளம் அ.த.க.பா.), திருமதி எஸ்.கேதீஸ்வரநாதன் (ஆரோக்கியபுரம் தமிழ் வித்தி), பி.தர்மபூபதி (ஐயங்கன்குளம் அ.த.க.பா.), திருமதி எஸ்.சுதாஸ்கரன் (துண்டுவன் அ.த.க.பா.), திருமதி எஸ்.ஜீவாஜினி (ஒதியமலை அ.த.க.பா.), திருமதி ஐ.விக்னேஸ்வராஜா (ஒட்டுசுட்டான் ம. வி.), வி.மதிய ழகன் (ஒட்டுசுட்டான் ம. வி.), ரி. செந்தில்நாதன் (ஒட்டுசுட்டான் ம. வித்தி), திருமதி இராஜதுரை ரமணி (மாங்குளம் ம.வி.), பி.தயாளன் (மாங்குளம் ம.வி), ஆர்.பேரின்பநாதன் (கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பா.), ஐ.இராஜமதன் (கற்சிலைமடு அ.த.க.பா.), வி.சற்குணசீலன் (கூழாமு றிப்பு அ.த.க.பா.), திருமதி ஜெ. ஜெயதீஸ்வரி (கூழா முறிப்புஅ.த.க.பா.), திருமதி ஜெ.சுதாமதி (கூழாமுறிப்பு அ.த.க.பா.), கே.மதனராஜ் (முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.), திருமதி ரி.சந்திரலதா (புளுமச்சிநாதகுளம் அ.த. க.பா.), திருமதி ஜெ.தயாநிதி (புளுமச்சிநாதகுளம் அ.த.க.பா.), திருமதி ஆர்.அகவேனியம் (பனிக்கன்குளம் அ.த.க.பா.), திருமதி எஸ்.ராகுலன் (திருமுறிகண்டி இந்து வித்தி), திருமதி வி.சிவகணேஸ் (திருமுறிகண்டி இந்துக் வித்தி), ஏ.சூசைநாதர் (திருமுறிகண்டி இந்து வித்தி, திருமதி யு.புஸ்பராணி (ஈஸ்வரன் வித்தி), திருமதி எஸ்.ராம்குமார் (சண்முகரட்ணம் வித்தி

**கிளிநொச்சி வலயத்திலிருந்து இடமாற்றம் பெறுவோர்.**

திருமதி எம்.வாமினி (கிளிநொச்சி மத்தி கல்லூரி), திருமதி யு.கோவிதாஸன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), திருமதி வை.மயில்வாகனம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), வி.பிரபாகரன் (வட்டக்கச்சி மகா வித்தி, பி.பரமேஸ்வரன் (வட்டக்கச்சி மகா வித்தி, திருமதி ஜி.வசந்தகுமார் (வட்டக்கச்சி மகா வித்தி), திருமதி கே.திவ்யகுமார் (உருத்திரபுரம் மகா வித்தி), திருமதி பி.பாரதி (கனகபுரம் மகா வித்தி, எம்.நாகராசா (கனகபுரம் ம. வி.), திருமதி எஸ்.சுதாகரன் (இராமநாதபுரம் மேற்கு அ.த. க.பா.), அருட்சகோதரி மேரிறோசி (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.),எஸ். நேதாஜி (சென்.பாத்திமா றோ.க.த.க. பா.), திருமதி எம்.பால கிருஷ்ணன் (சென்.பாத்திமா றோ.க.பா.), எக்ஸ்.வோசிங்டன் (கோணாவில் அ.த.க.பா.), கே.அகலியா (கோணாவில் அ.த.க.பா.), ரி.விக்னே ஸ்வரி (கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.), எஸ்.திருநாவுக்கரசு (கனகாம்பிகைக் குளம் அ.த.க.பா.), திருமதி ஏ.சிவசெல்வன் (சென்.அன்ரனீஸ் றோ.க.பா),திருமதிஜி.சிவகுமார்(சென்.அன்ரனீஸ் றோ.க.பா.), எம்.தவலிங்கம் (சிவபாத கலையகம் அ.த.க.பா.), திருமதி எஸ்.சகுந்தலாதேவி (ஐயனார்புரம் அ.த.க.பா.), எஸ்.முத்துக்குமார் (விவேகானந்தா வித்தி), கே.உதயகாந்தன் (முருகானந்தா கல்லூரி),ரி.உதயசூரியன் (கண்டாவளை ம.வி), திருமதி எல்.பத்மகரன் (கண்டாவளை ம.வி.), ஜி.இளையதம்பி (முரசுமோட்டை அ.த.க.பா.), எஸ்.சுபாங்கன் (புன்னைநீராவிஅ.த.க.பா.), என்.குணரூபன் (புன்னைநீராவி அ.த.க.பா.),திருமதி ஈ.சுதர்சன் (முருகானந்தா ஆரம்ப வித்தி), திருமதி ரி.அச்சுதன் (பளை மத்திய கல்லூரி), திருமதி எஸ்.சதீசன் (பளை மத்திய கல்லூரி), திருமதி கே.சிவானந்தன் (பளை மத்திய கல்லூரி), திருமதி ஐ.நித்தியானந்தராஜா (பளை மத்திய கல்லூரி), எஸ்.பாலதயாகரன் (பளை மத்திய கல்லூரி), எஸ்.சின்னமணி (இயக்கச்சி அ.த.க.பா.), கே.விஜயகரன் (கிளாலி றோ.க.த.க.பா.), திருமதி ஜே.கனகரத்தினம் (பளை றோ.க.த.க. பா.), ஆர்.மதுமதி (சோரன்பற்று கணேச வித்தி), ஆர்.யோகேந்திரம் (தர்மக்கேணி அ.த.க.பா.), கே.அருளானந்தகுமார் (முழங்காவில் மகா வித்தி, செல்வி எஸ்.ரங்கலா (முழங்காவில் ம.வி), ஜே.ஜெயந்தரன் (நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்.), ஏ.கருணாகரன் (நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்.), பி.சசிக்குமார் (வலைப்பாடு றோ.க.த.க. பா.), ஜி.கார்த்திகேயன் (பூநகரி மகா வித்தி, ஐ.லோகேஸ்வரி (பூநகரி மகா வித்தி), திருமதி கே.பாஸ்கரன் (பூநகரி மகா வித்தி), ஏ.ரி.திலீசன் (பூநகரி மகா வித்தி), என்.ஜெயரூபன் (பூநகரி மகா வித்தி, எஸ்.தினேஸ் (ஞானிமடம்), கே.நந்தகுமார் ( கறுக்காய்த்தீவு மகா வித்தி, கே.ஸ்ரீஸ்கந்தராசா (கறுக்காய்த் தீவு மகா வித்தி), எஸ்.கலைவாணன் (பூநகரி நல்லூர் ம.வி.), கே.துஸ்யந்தன் பூநகரி நல்லூர் ம.வி), ரி.சிறிகரன் (சுனாவில் அ.த.க.பா.), எஸ்.உதயபவன் (முக்கொம்பன் அ.த.க.பா.), திருமதி ஜி.தட்சாயினி (கிளி/ஜெயபுரம் ம.வி.), திருமதி ஐ.நித்தியானந்தன் (கிளி/பளை ம.க.), திருமதி எம்.றெமியஸ் (கிளி/பரந்தன் இ.ம.வி.)

**வலிகாமம் வலயத்திலிருந்து இடமாற்றம் பெறுவோர்**

திருமதி ஆர்.ஸ்ரீதரன் (யா/இராமநாதன் கல்லூரி), திருமதி ஆர்.பரதன் (யா/இராமநாதன் கல்லூரி), கே. ஜெயகாந்தினி (யா/இராமநாதன் கல்லூரி),திருமதி எம்.கிருபாகரன் (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), திருமதி பி. ஜோதிலக்சுமி (யா/இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி என். அகிலினி (யா/இணு வில் இந்துக்கல்லூரி), திருமதி ஜே.ஞானக்குமார் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), திருமதி எஸ். உதயகுமார் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), திருமதி ஆர்.சேந்தன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), திருமதி எஸ். ராகவன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), ஆர். நந்தகுமார் (யா/இணுவில் மத்திய கல்லூரி), என்.யசோதா (யா/இணுவில் மத்திய கல்லூரி), திருமதி எஸ்.பிரகதீஸ் (யா/ குப்பிளான் விக்னேஸ்வரா ம. வி.), செல்வி.எம்.அன்புசிபோகினி (யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), திருமதி கே.முரளிமோகன் (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வி.), திருமதி எம்.ஜெயகுமார் (யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி), திருமதி. ஆர்.கேசவன் (யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வி.),ஆர். ஆனந்த சொரூபன் (யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வி.), ஏ.அஜந்தினி ( யா/ சங்குவேலி அ.த.க.பா), திருமதி கே. ராகவன் (யா/உடுவில் மான்ஸ் த. க. பா.),ரி.ஸ்ரீஹரன் (யா/ஈவினை அ. த.க. பா.),திருமதி ஆர்.சுகேந்தன் (யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வி.), செல்வி. கே. பிரியா (யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வி.), திருமதி எஸ்.அட்சயன் (யா/புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வி.), எஸ். திருக்குமரன் ( யா/வட்டு இந்துக்கல்லூரி- நவோதயா),திருமதி ரி.சுலோஜினி (யா/வட்டு இந்துக்கல்லூரி- நவோதயா), இ. கவிதா (யா/வட்டு இந்துக்கல்லூரி- நவோதயா), என்.நளாயினி ( யா/வட்டு இந்துக் கல்லூரி- நவோதயா),

(23 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(தும்பளை)

யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-19)

* * * * * *

(இருபாலை)

யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் எவ்.எக்ஸ் அன்ரன் தலைமையில் நாவாந்துறை சென்.மேறிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய பதில் கல்விப் பணிப்பாளர். க.சத்தியபாலன், கௌரவ விருந்தினராக மாவட்ட செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் க.சிவசந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி. ஜி.சத்தியபாலன் வழங்கி வைப்பார். (அ-9-136)

# தனது ஏகபோக அதிகாரங்கள் அரசுக்கும் இருக்கும் என பிரபாகரன் நம்பியிருந்தார்

## ஜயந்த தனபால கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

உள்நாட்டு அரசியல் சூழ்நிலைமைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விளங்கிக் கொள்ளவில்லை என சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகரனுக்குக் காணப்படும் ஏகபோக அதிகாரங்கள் ஏனையோருக்கும் இருக்கும் என அவர் எதிர்பார்க்கின்றார். அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க எதிர்நோக்கி வரும் அரசியல் நெருக்கடி நிலைமைகளை பிரபாகரன் புரிந்து கொள்ளவில்லை என தனபால தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோருடன் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நடத்திய சந்திப்பின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டட் இந்த குறிப்பினை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறைகளை கண்டித்து ஓகஸ்ட் 19 ஆம் திகதி அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட கருத்துக்கு நன்றி தெரிவிப்பதாக தனபால தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட விருப்பமாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம் நோக்கி மக்களை நகர்த்தும் பணி அரசியல் பொறிமுறைமையின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் துரித கதியில் சமாதான பேச்சுவார்த்தைக்கு திரும்பாவிட்டால், அதனை ஜே.வி.பி.பயன்படுத்திக் கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் முஸ்லிம் மக்களை ஜே.வி.பியினர் பயன்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும் என ஜயந்த தனபால குறிப்பிட்டுள்ளார். சமாதான பேச்சுக்களைத் தொடர முடியும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 151 ஆவது ஜெயந்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இல17,மருதனார் மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எழுந்திரு விழித்துக்கொள் எனும் தலைப்பிலான வில்லிசை நிகழ்வு, தியாகிகள் படை வேண்டும் எனும் தலைப்பிலான கவியரங்கம், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் உரைகள், சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார் எனும் தலைப்பிலான சி.சிவமோகனின் உரை ஆகியன நடைபெறவுள்ளன. (அ-9)

# பிரதேச வளங்கள் அப்பிரதேச மக்களுக்கே சொந்தமானது

## ராஜீவ விஜேசிங்க எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதேச வளங்கள் அப்பிரதேச மக்களுக்கே சொந்தமானது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள அழிவுகளை கடந்த மூன்றாண்டுகளாக நாம் கவனிக்கக் கூடியதாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் வளங்களானது அப்பகுதி மக்களுக்கே சொந்தமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக குறித்த பிரதேச மக்களின் திறமைகளையும் தகுதிகளையும் அதிகரித்துக்கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக பிரதேசத்தின் இளம் தலைமுறையினருக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆட்கடத்தல் நடவடிக்கையுடன் இலங்கைக்கு தொடர்பில்லை

## ஆஸி.அரசாங்கம் அறிவிப்பு

(சிட்னி)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் இலங்கை அதிகாரிக்கு தொடர்பில்லை என அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை கடத்தும் நடவடிக்கையுடன் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

அவுஸ்திரேலியாவின் முன்னணி ஊடகமொன்று அந்நாட்டு புலனாய்வுப் பிரிவை ஆதாரம் காட்டி இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டிருந்தது எனினும் அந்நாட்டு அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது.

இலங்கை அதிகாரி இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டமைக்கு எவ்வித சாட்சியங்களும் கிடையாது என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும் பேச்சாளருமான பொப் காரின் தெரிவித்துள்ளார்.சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறான விரும்பத்தகாத குற்றச் சாட்டுக்களைத் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஆதனவரி செலுத்த கால நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இவ் ஆண்டிற்கான ஆதனவரி செலுத்தும் பொது மக்களின் நன்மைகருதி ஆண்டுவரியினை முழுமையாகச் செலுத்துவோருக்கான 10 % (பத்துவீத) கழிவு வழங்கும் கால எல்லையினை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார். (அ-9)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா: 21<br>தகைமை/தொழில்: A/L, PHI<br>தொ.இ: B -1104 | பிறப்பு: 1985 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம்: 5'10"<br>கி.பா: 28.5, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: B.Sc (HON) Demontrator<br>தொ.இ: G -987 |
| பிறப்பு: 1982 இந்து (KO)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5'8"<br>கி.பா: 18, 7 இல் செவ்.<br>தகைமை/தொழில்: (O/L) சாரதி<br>தொ.இ: B -1106 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 3<br>உயரம்: 5'<br>கி.பா.:54, 2 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G-711 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: A/L சாரதி (விற்பனை பிரதிநிதி)<br>தொ.இ: B -1107 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பீா: 23 , 4இல் செவ.<br>தகைமை/ தொழில்: பட்டதாரி பயிலுநர் (Bsw)<br>தொ.இ: G -714 |
| பிறப்பு: 1966 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, (பெயின்ரர்)<br>தொ.இ: B -1109 | பிறப்பு: 1979 இந்து (KO)<br>நட்சத்திரம்:-அவிட்டம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா.:45, 7 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L(அரச)<br>தொ.இ: G -1116 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் கற்கும் கல்வியை முழுமையாக கற்றால் போதும்

## வவு. மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல்நிலை பெற்ற மாணவி



(வவுனியா)

பாடசாலை கல்வியினை முழுமையான முறையில் பயின்றால் பரீட்சையில் உயர்பெறுபேற்றினை பெறமுடியும் என கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதல்நிலை பெறுபேறு பெற்ற வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி செல்வி சர்மினா பாரூக் கூறினார்.

தனது வெற்றி குறித்து அவர் கூறுகையில்,நான் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதில்லை. எனது பாடசாலையில் நடைபெறும் வகுப்புக்களுக்கு ஒழுங்காக சென்று கல்வி கற்றேன்.

எனது பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் எமக்கு பிரத்தியேக வகுப்புக்களை ஒழுங்கு செய்து கல்வி புகட்டினார்கள்.

எனது அப்பா,அம்மா எனக்கு உறுதுணையாகவிருந்து நான் இந்த சிறந்த பெறுபேறு பெறுவதற்கு வழிவகுத்தனர்.

எதிர்காலத்தில் எனது துறையில் சிறந்த பேராசிரியராக வர வேண்டும் என்பதே என்னுடைய இலக்கு என்றார் அவர். (அ-4)

# தன்னம்பிக்கையே வெற்றிக்கு வழி

## யாழ். மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல்நிலை பெற்ற மாணவி



(யாழ்ப்பாணம்)

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம் என க.பொ.த.உயர்தரத்தில் கலைப் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதல் நிலைப்பெறுபேறு பெற்ற யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியான மதுஷா சிவ நேசன் தெரிவித்தார்.

தனது வெற்றி குறித்து அவர் கூறுகையில்,

நான் எனது ஆரம்பக்கல்வியை யாழ்.நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியினை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும் தொடர்ந்தேன்.

எனது கல்விக்கு உறுதுணையாக எனது அம்மாவும் அப்பாவும் ஆசிரியர்களும் இருந்தனர்.இத்தகைய பெறுபேற்றினை பெற்றதற்கு நான் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

கடவுள் பக்தியுடன் எல்லா மாணவர்களும் இருத்தல் வேண்டும். அன்று நடைபெற்ற பாடங்களை அன்றே படிக்கவேண்டும்.

எதிர்காலத்தில் நான் ஒரு அரசாங்க அதிபராக உயர்ந்து எனது சமூகத்திற்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றவே நான் விரும்புகின்றேன்.

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கடவுள் பக்தியும் இருந்தால் வெற்றி உங்கள் பக்கம் என அவர் கூறினார். (அ-4)

# டொல்பின்கள் மரணம் குறித்து 15 பேருக்கு விளக்கமறியல்

(கற்பிட்டி)

கற்பிட்டி -பத்தலகுண்டு கடற்பரப்பில் டொல்பின்கள் மரணமான சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 15 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கற்பிட்டி பொலிஸாரால் நேற்று முன்தினம் கற்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பத்தல குண்டு கடற்பரப்பில் அண்மையில் பெருமளவான டொல்பின்கள் மரணமாகியமை தொடர்பில் விசாரணை நடத்தி கற்பிட்டி பொலிஸார் 15 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

அத்துடன் மீன்பிடிக்க பயன்படுத்திய பயிலா வலை, என்ஜினுடன் 6 மீன்பிடி படகுகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றினர். (அ-2)

# க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப்பரீட்சை 2012 இற்கான பெறுபேறுகள் அவ்வப்பாடசாலை அதிபர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வரு மாறு,

**யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

**கலைப்பிரிவு**

சொ.தருமதன்- 3 ஏ, கீர்த்தனா-2ஏ பி, க.கஜானா- ஏ2பி ,அன்ரனி பிரதீஸ்- ஏபிசி, ச.தர்ஜினி -3 பி, ம.கோகுலன்- ஏ2பி, சு.நஜீபன்- 2ஏசி ,ச.பார்த்தீபா- ஏபிசி.

**வணிகப்பிரிவு**

செ.தர்சினி -3ஏ, இ.கஜனி- 3ஏ, தி.லகிதா-2ஏபி,அசுஞ்சீவன்-2ஏபி,ம.அபிவர்ஹினி- 2ஏசி.

**கணிதப்பிரிவு**

சுஜீந்தன்- ஏ2சி, சி.சுயந்தன்- பி2சி.

**யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

ர.ரஜிந்தா- 3ஏ, ச.லக்சனா- 2ஏபி, தே.சுதர்சினி- ஏ2பி,கு.சுமன் -ஏபிசி, இ.விதுஷன் ஏ2சி

**கலைப்பிரிவு**

கெ.கிரிசாந் -2ஏபி ,கெ.ஆன்டொலினா-2ஏசி ,த.மயூரியா- ஏபிசி, க.ஜெயரூபினி- ஏபிசி ,ந.பரந்தகன் -ஏபிசி, பா.ராஜினி- ஏ 2சி.

# வடக்குக்கிழக்கு மக்களுக்கு 90 மில்லியன் ரூபா நிதியுதவி

## ஜப்பான் வழங்கியது

(கொழும்பு)

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு ஜப்பான் உதவிகளை வழங்கியுள்ளது. ஜென் எனும் ஜப்பானிய தன்னார்வ தொண்டு நிறுவனமே இந்த உதவிகளை வழங்கியுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மீள்குடியேறிய வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.சுமார் 90 மில்லியன் ரூபா உதவிகள் வழங்கப்பட்டடுள்ளன.

நீர் பம்பிகள் ,விதைகள், கன்றுகள் போன்றவற்றை கொள்வனவு செய்து விவசாயத்தை மேம்படுத்த இந்த உதவிகள் பயன்படுத்தப் படும்.

பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த உதவிகளை ஜப்பான் வழங்கியுள்ளது. (அ-2)

# இல. சுற்றுலாத்துறைசார் கட்டணங்கள் அதிகரிப்பாம்

## ரஷ்ய தூதுவர் வருத்தம்

இலங்கையில் சுற்றுலாத்துறைசார் கட்டணங்கள் உயர்வாகக் காணப்படுவதாக ரஷ்ய தூதுவர் அலெக்சாண்டர் கார்சோவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய ஆசிய பிராந்திய நாடுகளை விடவும் இலங்கையில் சுற்றுலாத் துறை தொடர்பான விலைகள் மற்றும் கட்டணங்கள் உயர்வாகக் காணப்படுகின்றன.

இதனை முறைப்பாடாக தெரிவிக்கவில்லை எனவும் நட்பு ரீதியான ஆலோசனையாகவே இதனைக் குறிப்பிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாத்துறையை பொறுத்தமட்டில் இலங்கைக்கு மிகவும் முக்கியமான இடம் காணப்படுகின்றது.அத்துடன் முக்கியமான சுற்றுலாத்தளமாக இலங்கை திகழ்கின்றது.

எனினும் இலங்கை விடுதிகளின் கட்டணங்கள் மிகவும் உயர்வாகக் காணப்படும் அதேவேளை தரமான சேவைகள் வழங்கப்படுவதில்லை. ஒப்பீட்டளவில் அறவீடு செய்யப்படும் கட்டணங்களுக்கு நிகரான சேவைகள் வழங்கப்படுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென ரஷ்யத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

தொழிற்சங்க வரலாற்றில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும் தோழர் பாலா தம்புவின் வகிபாகமும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு டி.எம்.எஸ். தனியார் கல்வி நிறுவனத்தில் ஏ.சி ஜோர்ச் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் ஆற்றவுள்ளார்.

இதில் தொழிற்சங்கம் சார்ந்தோர், நண்பர்கள் மற்றும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது. (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப்பிரேரணைக்கு பிரிட்டனும் ஆதரவு

(கொழும்பு)

ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணைக்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய உரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனீவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ள இரண்டாவது நாடு பிரித்தானியாவாகும். (அ-2)

# பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் எமக்கே அதிக அக்கறை உண்டு

## ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கைக்கே அதிகளவு கரிசனை இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளை விடவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை காத்திரமாக அமுல் படுத்த வேண்டுமென அரசாங்கம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் இலங்கையுடன் கபடமற்ற உறவைப் பேணினால், சகல துறைகளிலும் அது வெளிப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் அல்லது வேறு விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் உலகின் அனைத்து நாடுகளுக்கும் ஒரே விதமாக அமைய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பகத்தன்மையுடன் சமநிலையான வகையில் இந்தப் பிரச்சினைகள் அணுகப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உடல், உள திடகாத்திரம் இருக்கும் வரை சேவை

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பதவி விலகும் எண்ணமில்லை, உடல், உள திடகாத்திரம் இருக்கும் வரையில் மக்களுக்கு சேவையாற்ற முடியும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பதவிகள் என்பது ஆடைகளைப் போன்று எந்தநேரத்திலும் களைய முடியும். எனினும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதிகள் பதவி கிடைத்தாலும் இல்லாவிட்டாலும் சேவையாற்றுவர். நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவளிக்கப்படும். ஓய்வு பெறுவது தொடர்பில் நம்பிக்கையில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார். (அ-2)

# போதைப்பொருட்களுடன் புத்தளத்தில் இருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 23 ஆயிரத்து 340 சிகரெட் தொகையுடன் இரு சந்தேக நபர்களை புத்தளம் வலய குற்றத் தடுப்புப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

புத்தளம் நகரில் உள்ள மொத்த விற்பனை நிலையமொன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை கஞ்சா கலந்த போதைத்தூள் 46 பக்கெட் என்பனவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இவை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக தெரியவந்துள்ளது. குறித்த சந்தேக நபர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (அ-2)

# போலிக் கச்சேரி நடத்தியவர் கைது

(குருநாகல்)

குருநாகல் மணிக்கூட்டு கோபுரச் சந்தி யில் போலிக் கச்சேரி ஒன்றை நடத்தி வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சந்தேக நபர் போலி பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், திருமண பதிவுச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல ஆவணங்களை சட்டவிரோதமான முறையில் செய்து வந்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 62 வயதுடைய ஒருவர் என தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யும் போது இவரிடமிருந்த அரச அதிகாரிகளின் இறப்பர் முத்திரைகள், அரச ஆவணங்கள் மற்றும் பிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்றும் குருநாகல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் நேற்றைய தினம் குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (அ-2)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University of Jaffna

இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி
Diploma in Journalism - 2013/2014

புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்காக (2013/2014) புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் (Yes) தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சி வழங்கப்படும் துறைகள்
1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)



பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்
1. செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
2. றேடியோ மற்றும் ரீ.வி.நிகழ்ச்சிகள் தயாரிப்பு
3. ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
4. சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
5. ஆவணப்பட தயாரிப்பு
6. சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்

கற்கைக் காலம் - 2 ஆண்டுகள் (முழுநேரம்)
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 15.02.2013

கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. | 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. | 1000.00 |
| மொத்தம் | ரூ. | 22 500.00 |

விண்ணப்பப் படிவங்களை இல.84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய:
தொ.பே.இல.: 021 222 9873

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சி-2321)



உடனடி வேலைவாய்ப்பு
COMPANY VACANCIES
சவுதி அரேபியா
கட்டார்

| விபரம் | கட்டார் றியால் | ரூபா |
|---|---|---|
| Mason மேசன் | 1200-1400 | 44400-51800 |
| Carpenter தச்சு வேலை | 1200-1400 | 44400-51800 |
| Pipe Fabricator குழாய் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Steel Fixer கம்பி கட்டுவோர் | 1200-1300 | 44400-48100 |
| Electrician மின் இணைப்பாளர் | 1300-1500 | 48100-55500 |
| Aluminium Fabricator அலுமினியம் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Tinker டின்கர் | 1400-1500 | 51800-55500 |
| Mechanic (Diesel/ Petrol) மெக்கானிக் (டீசல் / பெற்றோல்) | 1500-1700 | 55500-62900 |
| Mechanical Engineers மெக்கானிக்கல் இன்ஜினியர் | 3000-5000 | 111000-185000 |
| Helpers/Labours உதவியாளர்கள்/ சுத்திகரிப்பாளர்கள் (அனுபவம் தேவையில்லை) | 700 + 200 | 25200 + 7200 |

நிபந்தனைகள்: - இலவச தங்குமிட வசதி, வைத்திய வசதி, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள், இரண்டு வருட ஒப்பந்தகாலம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :- சுதாகரன் 0779580588

Mantek Enterpries No:- 535/2/1, Galle Road, Wellawatte, Colombo-06
Labow Lic No: 1449
T.P.NO:-011-4375911, Fax:- 0114510549, E.Mail mantek.enterprises@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீராதி வீரன்



முன்பு ஆனந்தபுரத்தை நித்யானந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ராஜேஸ்வரி என்ற ஒரு மகள் இருந்தாள்.

ராஜேஸ்வரி நல்ல அழகி. ராஜகுமாரர்கள் ஒவ்வொரு வரும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள எண்ணினார்கள். ஆனால் அவள் அடுத்த நாட்டரசன் வீரமார்த்தாண்டனை எமபுரிக்கு அனுப்பும் வீராதிவீரனைத்தான் நான் மணப்பேன் என்று அப்பாவி டம் தெரிவித்தாள்.

நித்யானந்தன் மிகுந்த மகி ழ்ச்சி அடைந்தான். சமீபத்தில் இருக்கும் இறலித்தீவை ஆளும் வீரமார்த்தாண்டன் மிகவும் கொடியவன், பலவான் என்பது உலகம் அறிந்த விடயமாக இருந்தது. அவன் இறப்பதும் மகளுக்கு மணமாவதும் நித்யானந்த னுக்கு விருப்பமாக இருந்தது. ஆகையால் வீரமார்த்தாண்டனை வென்றவனுக்குத் தன் மகளைக் கொடுத்துக் கல்யா ணம் செய்கிறேன் என்று பறை சாற்றினான். அவ்வளவுதான்! ராஜகுமாரர்கள் அனைவரும் இறலித்தீவிற்குப் புறப்பட்டார்கள்.

இறலித்தீவு ஒரு சிறிய ராஜ்யம். ஆனந்தபுரத்திற்கும் அந்தத் தீவிற்கும் மத்தியில் ஒரு சிறிய சமுத்திரக்கால்வாய்தான் குறுக்கு. அந்தத்தீவு அரசனான வீரமார்த்தாண்டன் மகாபலசாலி. அவன் வீணாக வேறு அரசனின் மேல் படையெடுக்கமாட்டான். தன் தீவிற்கு வலிய வருபவர்களையும் இலேசாக விடமாட்டான்.

வீரமார்த்தாண்டனைப் பற்றி நன்றாகக் கேள்விப்பட்டவர்கள்கூட ராஜேஸ்வரியை மணக்க இறலித்தீவிற்குப் புறப்பட்டார்கள். இறலித்தீவிற்கு இந்தக் கரையில் ஒரு சிறிய துறை முகம் இருந்தது. ராஜகுமாரர்கள் சமுத்திரக்கால்வாய் கடந்து இறலித்தீவிற்கு வந்து இறங்க ஆரம்பித்தார்கள். முதன்முதலில் வீரமார்த்தாண்டன் அல்லிபுர ராஜகுமாரனுடன் போர் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இறலித்தீவிற்கு இந்தக் கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் உடன் நித்தியானந்தனும் ராஜகுமாரியும் ஆவலுடன் அல்லிபுர ராஜகுமாரனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இறலித்தீவிற்குப் போன இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் அல்லிபுர ராஜகுமாரன் இந்தத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தான்.



மக்களும் மன்னனும் என்ன நடந்தது என்று கேட்பதற்கு முன் அவன் என் சுண்டுவிரலை வெட்டிவிட்டான் பாவி. இங்கு வைத்தியர்கள் யாரும் இல்லையா? என்று அலறி கதற ஆரம்பித்தான்.


## அம்புலிமாமா கதைகள்

பின்பு சிறிது நேரத்திற் கெல்லாம் வீரமார்த்தாண்டன் என்ன செய்தான் என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. இறலித்தீவில் அல்லிபுர ராஜகுமாரன் இறங்கியதும் இறங்காததுமாக வீர மார்த்தாண்டன் வாள் போரில் அவனைத் தோல்வியடையச் செய்து ஏனைய ராஜகுமாரர் களுக்கு எச்சரிக்கையாக அவ னது வலது சுண்டுவிரலை அறு த்துக்கொண்டு அவனை உயிருடன் விட்டுவிட்டான்.

விரலை வெட்டிவிட்டான். கழுத்தை வெட்டவில்லை என்று அங்கிருந்த மக்கள் ஏளனமாகச் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார்கள். பின்பு இன்னொரு தேசராஜகுமாரன் இறலித்தீவிற்குப் புறப்பட்டான். அவனுக்கும் இதேகதிதான் நேர்ந்தது.

இந்தவிதமாகப் பத்துப் பதினைந்து நாட்களுக்கெல்லாம் வீரமார்த்தாண்டன் நாடு, நாடுக ளில் இருந்து வந்து கொண்டிரு ந்த ராஜகுமாரர்களின் சுண்டுவி ரல்களை அறுத்து அனுப்பிக் கொண்டிருந்தான். எந்த ராஜகுமாரனின் கையைப் பார்த்தாலும் ஐந்து விரலுக்குப் பதில் நான்கு விரல்கள் காணப்பட்டன. நிலைமை இப்படி மாறவே நித்யானந்தன் திகில் அடைய ஆரம்பித்தான். ராஜேஸ்வரி கல வரம் அடைந்தாள்.

ஒருநாள் அவர்கள் இருவரும் என்ன செய்யலாமென்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு வாலிபன் ராஜதரிசனத்திற்காக அங்கு வந்தான். மகாராஜா! நான் ராஜகுமாரன் அல்ல. நான் ஒரு உழவன். ஒரு வேளை நான் வீரமார்த்தாண்டனை வென்றால் எனக்குத் தங்கள் மகளைக் கொடுத்து கல்யாணம் செய்வீ ர்களா? என்று கேட்டான். அரசன் மந்திரியின் பக்கமும் மகளின் பக்கமும் பார்த்தான். சரி என்பதற்கு அறிகுறியாக அவர்கள் தலையை அசைக்கவே வீரமார்த்தாண்டனை வெல்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவன் வீராதிவீரன்தான். ஆகையால் அவனுக்கு என் மகளைக் கல்யாணம் செய்கிறேன் என்றான்.



வந்த உழவன் விடைபெற்றுக் கொண்டு போனான். வீர மார்த்தாண்டனால் தோல்வியடைந்த ஒவ்வொருவரும் வலது கைக்கு நான்கு விரல்கள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு தடவை சமுத்திரத்தைக் கடந்து அந்தத்தீவிலிருந்து வலது கையில் ஐந்து விரல்களுடன் இக்கரைக்கு வந்தால் அவன் அந்த வீரமார்த்தாண் டனை வென்ற வனைப் போலத்தான் என்று மன்னனும் மக்களும் எண்ணினார்கள்.

இதையெல்லாம் நன்றாக அறிந்திருந்த உழவன் அரி வாளைத் தவிர மற்றப்படி கத்திபிடிக்க கையாலாகா விட்டாலும் தைரியமாக வீரமார்த்தாண்டன் மேல் யுத்தத்திற்குப் புறப்பட்டான். ஆயிரக்கணக்கான மக்களும் மன்னனும் அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினார்கள்.

உழவன் இறலித்தீவிற்குப் போய் இறங்கியதும் வீரமார்த்தாண்டன் பளபளக்கும் கத்தியுடன் எதிர்ப்பட்டான்.


சுண்டுவிரலை அறுத்து அனுப்பிக்கொண்டிருந்தால் கூட இன்னும் இந்தத் தீவிற்கு வந்து கொண்டேதான் இருக்கிறார்கள். இனி ஆளையே கொன்று குவித்து விட்டால் கொஞ்சம் நிம்மதியாவது ஏற்படும் என்று எண்ணினான்.

அப்பொழுது உழவன் பய பக்தியுடன் மகாராஜா! நான் உங்கள் மேல் சண்டைக்கு வரவில்லை. என் சுண்டு விரலை தயவுசெய்து அறுத்துக் கொள்ளுங்கள். நான் போய்விடுகிறேன் என்றான்.

வீரமார்த்தாண்டனுக்கு இவ்வார்த்தைகள் ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தன. யுத்தம் செய்யாமல் சுலபமாக உழவனின் வலதுகை சுண்டு விரலை அறுத்துக்கொண்டு திரும்பிப் பார்க்காமல் போய் விடு என்றான்.

உழவன் கவலைப்படுவதற்குப் பதில் சந்தோசமடைந்து படகேறி இக்கரைக்கு வந்தான். படகு கரைக்கு வருவதற்கு முன்பு வலது கையில் ஒரு பெரிய கத்தியை எடுத்துப் பிடித்துக்கொண்டு வீரமார்த் தாண்டன் தோல்வியுற்றான் பாருங்கள் என் விரல்களை என்று தன் வலது கையை உயர்த்தி ஐந்து விரல்களைக் காண்பித்தான்.

அங்கே கூடியிருந்த மக்கள் எல்லோரும் வீராதி வீரனுக்கு ஜே! என்று கத்த ஆரம்பித்தார்கள். உடனே ராஜகுமாரி ராஜே ஸ்வரி அவனுக்கு மாலை சூட்டினாள்.



யுத்தம் செய்யாமலேயே யுக்தியுடன் வீராதிவீரனான அந்த உழவனுக்குத் தன் பெண்ணைக் கொடுத்து வைபவத்துடன் கல்யாணம் செய்வித்தான் நித்யானந்தன். ஆனால் உழவன் முதலில் தன் வலது கையில் ஆறுவிரல்கள் இருந்ததை அவன் என்றும் வெளியில் சொல்லிக் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**34**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

மந்தையில ஒக்காந்து சுழியன் பண்ற அதிகாரத்துல சும்மா அட்டணம்பட்டியே கதி கலங்குது.

"ஏண்டா! சிங்கம் சீக்குல கெடக்குன்னு நரியெல்லாம் கூடி நாட்டாமை பண்றீகளா? டீ- நாலு ரூவாயா? வடை ரெண்டம்பதா? சீயம் மூணு ரூபாயா? எங்கிட்ட ஒங்க பருப்பு வேகாதுறி. ஒரு நியாய தர்மம் வேணாமா ஊருல? கடைசியா ஒரு ரூபாய்க்கு டீ குடிச்சவன் நானு. நான் பழைய காசுதான் கொடுப்பேன்; நீ பழைய டீயே கொடு போதும்."

"போகப்போற நாளையில புது மாப்ள .வேசம் பாரு" முனக்கிக் கிட்டே டீய ஓங்கி ஆத்திக் கொடுத்தான் பால்பாண்டி.

'ஏலே! ஒன் பேர்லதான் பால் இருக்கு- டீயில இல்லடா'ன்னு வந்து பண்ணிக் கிட்டே பத்து ரூவாயக் கொடுத்தவரு டீயக் குடிச்சு முடிச்சிட்டு இன்னொரு பத்து ரூவாய எடுத்து நீட்டுனாரு.

"கோவணத்தில காசு இருந்தாக் கோழி கூப்புடப் பாட்டுவருதா கெழவனுக்கு. ஏற்கனவே கொடுத்துட்டீகல்ல. எதுக்கு இன்னொரு பத்து...?"

பளிச்சின்னு பொறிதட்டுது சுழியனுக்கு.

"முந்தி மாதிரி நெனவு நிக்க மாட்டேங்குதுப்பா. மறந்து மறந்து போயிருது கழுத" சில்லரைக் காசை வாங்கிச் சேப்புல போட்டுக்கிட்டு நெஞ்சை நிமித்தி நடந்து போகுது பெருசு.

"பாரப்பா! கட்டையில போக வேண்டியது கடை வீதியில போகுது" ஊரே வேடிக்கை பாத்து வினயம் பேசுது.

✼

"மீன் குழம்பு வச்சிருக்கேன்; சாமைச் சோறு ஒரு உருண்டை இருக்கு. சாப்புடறீகளா?" எதார்த்தமாத்தான் கேட்டா சிட்டம்மா; சீறிட்டாரு சுழியன்.

"சொறி நாயி திங்குமா உன் சோத்த? அண்ணன் பொண்டாட்டி அரைப் பொண்டாட்டி; தம்பி பொண்டாட்டி தம்பொண்டாட்டின்னு சொல்லுவாக. ஒரு பொழுதாச்சும் உன் புருசன் திங்கிற சோத்தப் போட்டிருப்பியா எனக்கு? என் தட்டுல ஒரு நல்ல மீன்ல நடுத்துண்டம் கண்டதுண்டா? எம்பிள்ளை முத்துமணி கவனிச்சுக்கிருவான். செத்த மீன நீங்களே தின்னுட்டுப் புருசனும் பொண்டாட்டியும் ஒத்தக் கட்டில் போட்டு ஒண்ணாப் படுத்துங்குங்க"

கருத்தமாயிக்கும் சிட்டம்மாவுக்கும் ஒண்ணும் புடிபடல.

"இந்தாளுக்குப் பேயிகீயி புடிச்சிருச்சா? புத்திகித்தி பெரண்டு போச்சா? திண்ணையில கெடந்த உசுரு தெருவுல நடந்து போறது சந்தோசமாத்தான் இருக்கு. ஆனா தலப் பெரட்டுப் பண்ணி அலையுதே... செருப்பு புதுசுன்னு சொல்லி அதத் தலைக்கு வச்சுப்படுக்குதே. அதிருக்கட்டும் அந்தக் களவாணிப்பய எதுக்கு இந்தாளக் கொம்பு சீவி விடறான்? சோழியன் குடுமி சும்மா ஆடாதே! சுடுகாட்டு மண்டையோட்டுல கூட நாக்கை உள்ள செலுத்தி ரத்தம் தேடுற நாயி, இந்தக் கெழவன மட்டும் ஏன் முட்டிக்கு முட்டி மோந்து பாக்குது? பெத்த தாய் தகப்பனுக்குப் பச்சைத் தண்ணிகூட மோந்து கொடுக்காத பய, நாறிப் போன பெரியப்பன் முதுகை நக்கி நக்கிப் பாக்குறான்னா என்னமோ இருக்கப்பா. இருக்கட்டும். உண்மை தெரியாமலையா போகப் போகுது? கத்தரிக்கா முத்துனா சந்தைககு; காரணம் முத்துனா சந்திக்கு"

✼

பெரியப்பனுக்கு ரேடியோப் பொட்டி ஒண்ணு வாங்கிக் கொடுத்தான் முத்துமணி. தலமாட்டுல நின்னு அது காதுக்குள்ள கத்திக்கிட்டே கெடக்கு. பாட்டுக் கேக்கலேன்னா இப்பவெல்லாம் உறக்கமே வருதில்ல.

பத்துமணிக்கு மேலதான் போடறான் பழையபாட்டு. பாகவதரும் சின்னப்பாவும் சுப்புலச்சுமியும் பெரியநாயகியும் சும்மா சண்டமாருதம் பண்ணிச் சரளிவரிசை பாடுவாக பாருங்க... காது பெறந்ததுக்குக் கவுரதி வேற என்ன இருக்கு- இவங்க பாட்டக் கேக்கறதத் தவிர.



'பக்த கௌரி' என்ற படத்தில் யு. ஆர்.ஜீவரத்தனம்.

'ரேடியோக்காரி சொன்னவுடனே வா ஆத்தா வா! வந்துட்டியா'ன்னு வரவேற்புப் படிச்சிட்டாரு சுழியன்.

"சோலையிலே ஒருநாள் என்னையே
தொட்டிழுத்தே முத்தம் இட்டாண்டி- சகியே!"

என்னையேங்கிற வார்த்தைய அந்தம்மா ஒரு அழுத்து அழுத்தி 'என்னை..ய்...ய்...யே...'ன்னு பாடி ஏகாரத்து மேல ஒரு சங்கதி போட்டுக்கமத்துல ஒரு ஆட்டு ஆட்டறபோது உசுரு போயி உசுரு வருதே... ஏ பாவி மகளே! கொன்னு குலைய அக்காதடி செத்துப் போன சீவரத்தினத்தச் செல்லமாக் கொஞ்சிக்கிட்டாரு.

கொஞ்சுன மயக்கத்துலயே குறட்டையும் விட்டுட்டாரு பாவம்.

✼

விடிய்ய்ய...

சுழியன் போட்ட பெருங்கூச்சல்ல காத்து கிழிஞ்சு கந்தலாகிப் போச்சு.

"யாத்தே... என் பையக் காணோம்"

மாடு கன்டெல்லாம் வெறிச்சு வெறிச்சுப் பாக்குதுக. பயந்து ஒடுங்குதுக பஞ்சாரத்துக் கோழியெல்லாம். வாசல் தொளிக்க வந்த சிட்டம்மா சருவச் சட்டியத் தவற விட்டுட்டு நின்ட எடத்துல நின்டுபோனா நிலையப்புடிச்சு.

"பையக் காணமப்பா... என் பையக் காணோம்" சுழியன் ரெண்டாங் கத்துக் கத்தவும் வீதியில போன ஒண்ணு ரெண்டு ஆளுகளும் வீட்டுக்குள்ள வந்துட்டாக.

"யண்ணே... என்ன பையிண்ணே?"- பதறாமத்தான் கேட்டாரு கருத்தமாயி.

"பணப்பையிடா பாவி பணப்பையி"- பதர்றாரு சுழியன்.


"பணம்னா எம்புட்டு?"

"ஒண்ணா ரெண்டா? ஒரு லச்சத்தி நாற்பத்தாறாயிரம்டா"

"லச்சமா? ஏதுண்ணே ஒனக்கு அம்புட்டுப் பணம்?"

"எம் பங்கு நிலத்த வித்த காசுடா. எடுத்தவன் அடிமாண்டுபோயிருவான். நீ எடுத்தியா?"

"நான் எடுப்பனா? அது சரி! உம்பங்கைத்தான் ஒத்தி வச்சிருந்தியே... எப்பிடி வித்த? யாருக்கு வித்த?"



"முத்தும்ணிதானப்பா வித்துக் கொடுத்தான். ஏக்கர் நாலுலச்சம். ஒண்ணே முக்காலுக்கு ஏழு லச்சம். ஒத்திக்கு அஞ்சரை போக ஒண்ணரை லச்சம் கையில கொடுத்தான் முத்துமணி. அதுல நாலாயிரம் செலவு போக மிச்சம் வச்சிருந்தேன் பையில. தலகாணிக்குள்ள வச்சுப் படுத்திருந்தேன். யாரு எடுத்திருந்தாலும் கொடுத்துருங்கப்பா. நான் சாகிற போதாவது சந்தோசமாச் சாகணும்; கும்புடறன் குடுத்துருங்க"

எல்லாரும் எல்லா இடத்துலயும் தேடுறாக; ஒண்ணும் சிக்கல.

சீதையப் பிரிஞ்ச ராமன் மரம் மட்டைய செடிகொடியெல்லாம் பாத்து, 'நீ பாத்தியா...? நீ பாத்தியா?'ன்னு கேட்ட மாதிரி, 'கருத்த மாயி! நீ பாத்த...? சிட்டம்மா! நீ பாத்த...? கோழிக்குஞ்சே! நீ பாத்த...? குட்டியாடே! நீ பாத்த...?" ன்னு கத்திக் கதறிப் பித்துப் புடிச்சுப் போனாரு சுழியன்.

"யண்ணே! எல்லா இடத்துலயும் தேடியாச்சு; இல்ல. உம்பணம் எங்கேயும் போயிராது; இங்கதான் இருக்கும். கண்டுபுடிச்சிருவோம். பணம் தான போச்சு; உசுரா போயிருச்சு? ஒக்காருண்ணே!"

திண்ணையில சாஞ்சு ஒக்காந்த சுழியன் சடார்னு சரிஞ்சாரு. கொஞ்ச நேரம் வாய் வழியா மூச்சு விட்டாரு. கண்ணுல கருப்பு முழி உள்ள ஓடிப் போயி ஒளிஞ்சு போச்சு. வெள்ளை முழி மட்டும் வெளிய தெரியத் தலை தொங்கிருச்சு. ஒருச்சாச்சு விழுந்ததுல உசுரு போயிருச்சு.

✼

ஊரே சோகமாகிப்போச்சு.

குழிக்குள்ள பொணம் தள்ளுற நேரத்துக்குத்தான் வந்து சேந்தான் முத்துமணி.

"கெழவனுக்கு மறதி இருக்குன்னுதான் பணப்பைய வாங்கிவச்சேன். நெனச்ச மாதிரியே சொல்லாமச் செத்துப்போயிட்டான். கெழவன் நிலத்த வித்த வகையில நமக்கு ஏழெட்டு லச்சம் மிச்சம். மறந்து செத்த வகையில ஒண்ணரை மிச்சம் பெரியப்பன் குழிக்குள்ள; ரகசியம் மனசுக்குள்ள. ரெண்டையும் புதைச்சிர வேண்டியதுதான்" முடிவு பண்ணிட்டான் முத்துமணி.

**செருப்பு புதுசுன்னு சொல்லி, அதத் தலைக்கு வச்சுப் படுக்குதே**

இடது புறங்கையில சின்னப்பாண்டி மண்ணுத் தள்ளி முடிக்கவும் கண்ணத் தொடச்சுக்கிட்டே கருத்தமாயும் மண்ணுத் தள்ளுனாரு.

முத்துமணி மனசுக்குள்ள ஓடுது ஒரு சுடுகாட்டுக் கணக்கு:

"மண்ணுக்குள்ள விழுந்தவன் நெலத்த வாங்கியாச்சு. மண்ணுத்தள்ளுறவன் நெலத்தையும் வாங்கிட்டா சோலி முடிஞ்சுச்சு" (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதிப் பத்திரமில்லாத துப்பாக்கிகளுடன் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் இல்லாத மூன்று துப்பாக்கிகளுடன் இருவரைக் கைது செய்துள்ளதாக முந்தல பொலிஸார் தெரிவித்தனர். முந்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி நகரில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து மதுரங்குளி நகரை நோக்கி கடந்த வியாழக்கிழமை பயணித்த கார் ஒன்றை முந்தல பொலிஸார் நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இதன்போது காரில் இருந்த அனுமதிப்பத்திரம் இல்லாத இரண்டு துப்பாக்கிகளுடன் 38 தோட்டாக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் அக்காரில் பயணித்த 45 வயதுடைய ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது மதுரங்குளி நகரில் மற்றொருவரை சந்திப்பதற்கே தான் வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரையும் கைது செய்து விசாரணை செய்தபோது அவரிடம் இருந்த மற்றொரு அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ள முந்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## அமெ.தொடர்பிலான கருத்தை ஆங்கிலத்தில் வெளியிடுங்கள்

### விக்கிரமபாகு கருணாரட்ன கோரிக்கை



புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன அமெரிக்கா தொடர்பில் விமல் வீரவன்ச தமது கருத்தை ஆங்கிலத்தில் வெளியிட வேண்டும் என்று கோரியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வந்துள்ள அமெரிக்க குழு தொடர்பில் அரசியல் அரங்கில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கே அவர்கள் இலங்கை வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 15 ஆம் திகதி ஜெனீவாவில் இடம்பெறவுள்ள யுத்தக் குற்ற விசாரணைகளுக்கு ஆதாரம் திரட்டுவதற்கே இவர்கள் இலங்கை வந்துள்ளனர். அமெரிக்கா தம்மை ஏமாற்றுவதாக விமல் வீரவன்ச கூறுகின்றார். ஆனால், அதனை சிங்களத்தில் கூறுகிறார்.

அமெரிக்கா பற்றி எதனைக் கூற வேண்டுமானாலும் விமல் வீரவன்ச ஆங்கிலத்தில் கூற வேண்டும். இவ்வாறு சிங்களத்தில் கூறுவதால் அவர்களுக்கு எதுவுமே தெளிவாகாது. எனவே, ஆங்கிலத்தில் கூறினால் இன்னமும் சிறப்பாக இருக்கும் என விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (அ-2)

## 'சீனி' அமைச்சர் இருக்கும் நாடு இலங்கை மட்டுமே

### சரத் பொன்சேகா கிண்டல்

'சீனி' அமைச்சர் இருக்கும் ஒரே நாடு இலங்கையாகும் எனவும் உலகின் வேறு எந்த நாட்டிலும் சீனி கைத்தொழில் துறைக்காக தனியான அமைச்சு கிடையாது என்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாட்டில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த ஊழல் மோசடிகளினால் மக்களே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதனால் எவ்வித நன்மையும் ஏற்படாது.

மாறாக மக்கள் மேலும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

## நாட்டின் வீதிகளில் சீனாவின் இராச்சியம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதிகளில் சுற்று வட்டப் பாதை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மூன்றாம் கட்ட பணிகளை சீன நிறுவனத்திடம் ஒப்படைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான பிரேரணையை முன்வைத்துள்ளார்.

இதன்படி கடவத்தை முதல் கெரவலப்பிட்டி வரையிலான 9.32 கிலோ மீற்றர் தூரமான பாதையை அமைக்க 66.69 பில்லியன் ரூபாவை ஒப்பந்த அடிப்படையில் சீன நிறுவனம் பெற்றுக்கொள்கிறது.

சீனாவின் ''எக்ஸிம்'' வங்கியின், நிதி உதவியில் மொத்தம் 29.22 கிலோ மீற்றர் கொண்ட சுற்று வட்டப்பாதைகள் கொழும்புக்கு வெளியே அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இலங்கை, இந்தியா இடையே விரிசலை ஏற்படுத்த முயற்சி

### பிரதமர் டி.எம்.ஜயரட்ன

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் விரிசலை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார். இந்து கலாசார திணைக்களத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறியவ்வ வருமாறு,

சிங்கள, தமிழ் மக்களுக்கு மத்தியில் இடைவெளியை ஏற்படுத்தி இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்த சில மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன.

திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தைப் பயன்படுத்தி இந்தியாவிற்கு அச்சுறுத்தல் விடுக்க சிலர் முயற்சிக்கின்றனர். வலுவான பலம்பொருந்திய நாடுகள் வறிய நாடுகளுக்கு இடையில் பிளவினை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

உலகை அழிக்கும் நோக்கில் ஆயுதம் தயாரிக்கும் இந்த நாடுகள் உலகை ஆட்சி செய்ய விரும்புகின்றன. மனித உரிமையை காரணம் காட்டி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த சில மேற்குலக நாடுகள் முயன்ற போதிலும் அவ்வாறான நாடுகளில் வன்முறைகள் குறையவில்லை.

மேற்குலக நாடுகள் உளவுப் பிரிவுகளைப் பயன்படுத்தி ஆசிய நாடுகளின் நிலைமைகளை கண்காணிக்கின்றனர். வரலாற்று காலம் முதல் சிங்கள, தமிழ் மக்களுக்கு இடையில் நட்புறவு நீடித்து வருகின்றது.

மேற்குலக நாடுகளின் சதிகளில் சிக்காது இலங்கையர் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டியது அவசியமானது. (அ-2)

## இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக நடுக்கடலில் போராட்டம்?


### அமைச்சர் டக்ளஸ் எச்சரிக்கை

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக போராட்டம் நடுக்கடலில் நடத்த நேரிடும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் போராட்டம் நடத்துவதனைத் தவிர வேறுவழியில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் நாள்தோறும் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழக மீனவர்களின் அத்துமீறல்களினால் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் காலத்துக்கு காலம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும் காத்திரமான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட சில வழிமுறைகளில் மீன்பிடியில் ஈடுபடுவதனால் இலங்கையின் மீன்வளம் பாதிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் ஐயாயிரம் மீனவர்களுடன் நடுக்கடலில் பாரியளவு போராட்டமொன்றை நடத்த நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் விரைவில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)




யாழ்.நகர் மைய றோட்டறக்கழகத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பொது அறிவு நுண்ணறிவு தேடல் பரீட்சையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள், யாழ்.நகர மைய றோட்டறக்கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகளுடன் பரிசில் பெற்றுக்கொண்ட மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

நெல்லியடி பிரதேச லயன்ஸ் கழகமும் செலான் வங்கி நெல்லியடி கிளையும் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள ஏசியன் கணனி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் இரத்த தான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்ததான பிரிவினரும் மற்றும் துறை சார் மருத்துவ நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுடனான சந்திப்பை புறக்கணித்த உலமா சபை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்கவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் தீவிர பிரசாரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் கவுன்சில் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர். அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை எனத் தெரியவருகின்றது.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சிலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு மட்டத்தை சேர்ந்தவர்களுடனும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன.

அதன் அடுத்த கட்டமாகவே எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பில் பங்கேற்காமை தொடர்பில் அறிந்துகொள்வதற்காக அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சித்த போதிலும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. (எ-11)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

டிப்பர் வாகனம்- மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் முல்லைத்தீவு- முள்ளியவளை வீதியில் உள்ள 3 ஆம் கட்டைப்பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, முல்லைத்தீவில் இருந்து முள்ளியவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனமும் முள்ளியவளையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் குமுழமுனையைச் சேர்ந்த புவனா (வயது 28) என்ற தனியார் பேருந்து சாரதியே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3)

# வெளிநாடு செல்லும் தேவைக்காக ஒரே நாளில் உ.த.பரீட்சை சான்றிதழ்

## பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

வெளிநாடு செல்லும் தேவைகளுக்காக ஒரே நாளில் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்கள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் ஜ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பயணம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் உயர்கல்வியைத் தொடர்தல் போன்ற காரணிகளுக்காக பரீட்சை சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒரே நாளில் இவ்வாறு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பெறுபேறு வெளியிடப்பட்ட தினத்திற்கு மறுதினம் தொடக்கம் இந்த ஒருநாள் சேவை அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை மீளாய்வு தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை மீளாய்வு தொடர்பான விண்ணப்பங்கள் பெறுபேறுகளுடன் அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நாளை மறுதினம் தேசிய பத்திரிகைகளில் வெளியாகும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை தொடர்பான பிரச்சினைகளுக்கு 0112784208, 0113188350 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 200 கோடி அமெ.டொலரை பெற அரசாங்கம் திட்டம்!

(கொழும்பு)

இலங்கை நடப்பாண்டுக்குள் 200 கோடி அமெரிக்க டொலர்களை முதலீடாக பெற இலங்கை எதிர்பார்ப்பதாக ஊக்குவிப்பு முதலீட்டு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை பூர்த்தி செய்து கொள்ள முதலீட்டாளர்கள் சந்திக்கும் தடைகள் நீக்கப்படவுள்ளதோடு அவர்களுக்கான வசதிகளும் அதிகரிக்கப்படுமென அமைச்சர் கூறினார்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தனது அமைச்சுப் பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று கருத்து வெளியிடும் போது இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 12 ஆயிரம் மாணவர்கள் வருடாந்தம் கல்வி நடவடிக்கைக்காக வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். இதற்கென 40 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுகிறது.

இலங்கையில் கல்விக்கான முதலீட்டு வாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் உறுதியளித்தார்.

பாரிய அளவிலான இரண்டு சீனித் தொழிற்சாலைகளை அமைக்க முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளார்கள்.

அதிவேக நெடுஞ்சாலை, புதிய துறைமுகம், விமான நிலையம் என்பன அமைக்கப்பட்டுள்ளமையினால் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலகுவாக கவர்ந்தெடுக்க முடியுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (எ-11)

# பாடமாற்றம் குறித்த கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிறப்புப் பட்டதாரிகள் (BA special), தமிழை ஒரு பாடமாகக் கற்று முதுகலைமாணி (MA), முதுதத்துவமாணி (M.Phil) பட்டத்தை தமிழ்ப் பாடத்தில் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி பட்டதாரி ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டிருப்பின் பாடமாற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு நியமனக் கடிதம், பட்டச்சான்றிதழ்களுடனும் அவற்றின் பிரதிகளுடனும் சமுகமளிக்குமாறு வடமாகாணக் கல்வி அபிவிருத்திக் குழு தலைவர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (அ-2)




★301-சீனாவில் சீமா லுன் ஜின் ஆட்சியைக் கைப்பற்றினான்.

★1377-இத்தாலியின் செசெனா நகரத்தில் பாப்பரசரின் படைகளினால் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

★1509 - போர்த்துக்கலுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.

★1690 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது காகித நாணயம் மசாசு செட்சில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1876-பராகுவே ஆஜென்டீனாவுடன் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

★1783-ஐக்கிய அமெரிக்காவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.

★1807- பிரித்தானியப் படைகள் சர்சாமுவேல் ஒஷ்முட்டி தலைமையில் உருகுவேயின் தலைநகர் மொண்டேவிடியோவைக் கைப்பற்றினர்.

★1894-யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

★1916-கனடாவில் ஒட்டாவாவில் நாடாளுமன்றக் கட்டடம் தீயினால் அழிந்தது.

★1919-சோவியத் படையினர் உக்ரேனை பிடித்தனர்.

★1930-வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.

★1931-நியூசிலாந்தில் நேப்பியர் என்ற இடத்தில் இடம்பெற்ற 7.9 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 258 பேர் கொல்லப்பட்டனர்.

★1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா மார்ஷல் தீவுகளை கைப்பற்றியது.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் ஆயிரம் விமானங்கள் பேர்லின் மீது குண்டுகளை வீசின.

★1966- சோவியத் விண்கலம் லூனா 9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையை பெற்றது.

★1969-யசீர் அரபாத், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக தெரிவானார்.

★1984- சலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்கா ண்ட்லெஸ், றொபேட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன் முதலாக விண் வெளியில் சுயாதீனமான முறையில் நடந்து சாதனை படைத்தார்.

★1989-பராகுவேயில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து 1954 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி அல்பிரெடோ ஸ்ட்ரோயெஸ்னர், பதவி இழந்தார்.

★2006-அல்சலாம் 98 என்ற எகிப்திய பயணிகள் கப்பல் ஒன்று செங்கடலில் ஆயிரத்து 721 பேருடன் மூழ்கியதில் 435 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.

### பிறப்புகள்

★1898-அல்வார் ஆல்ட்டோர், கட்டடக் கலைஞர் (இ.1976)

★1948- கார்லொஸ் பெலோ, நோபல் பரிசு பெற்ற கிழக்கு திமோர் அரசியல்வாதி (இ.1976)

★1976-ஜெ.ராம்கி, எழுத்தாளர்

### இறப்புக்கள்

★1855-டானியல் புவர், அமெரிக்க இலங்கை மிஷனின் மூத்த முதல்வர் (பி.1789)

★1915- ஜோன் சிலம்புவின் ஆபிரிக்க விடுதலைப் போராளி (பி.1871)

★1924-வூட்றோ வில்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க ஜனாதிபதி (பி.1856)

★1969-சி.என்.அண்ணாதுரை, தமிழ் நாட்டின் ஆறாவது முதலமைச்சர் (பி.1909)

★2005-எர்ணஸ்ட் மாயர் , உயிரியலாளர் (பி.1904)

### டானியல் புவர்

அமெரிக்க இலங்கை மிஷனின் மூத்த முதல்வரான புவர் 1789 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார்.

இவர் ஒரு கிறித்தவ சமய மதகுரு ஆவார். இலங்கை மற்றும் இந்தியாவில் பல கல்விச் சாலைகளை நிறுவி நிர்வாகம் செய்தார். இவர் 1855 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி உயிர் நீத்தார். இவரின் நினைவாக மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நூலகம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனிவா... சோதனைக் களம்

மீண்டும் ஒருமுறை ஜெனிவாவை நோக்கி, பலரது கவனமும் திரும்பத் தொடங்கியுள்ளது. அடுத்தமாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22வது கூட்டத்தொடர் இலங்கைக்கு சவால்மிக்கதாகவே இருக்கும் என்ற கருத்து பல மாதங்களாகவே அடிபட்டு வந்தது தான்.

இப்போது எதிர்பார்க்கப்பட்டதைவிட இன்னமும் கடினமான இறுக்கமான சூழல் இருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

19வது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை, இலங்கை மதித்து நடந்துகொண்டதா, அதை நிறைவேற்றியதா என்பதை விளக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கைதான், இறுக்கம் நிறைந்ததாக இருக்கும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இப்போது அதற்கும் மேலாக, இன்னொரு புதிய தீர்மானத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு, இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தைத் தாமே கொண்டுவாரப் போவதாக அமெரிக்கா முன்கூட்டியே பகிரங்கமாக அறிவித்திருப்பதுதான், இந்த விவகாரத்தில் புதியதிருப்பம்.

வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரும் என்ற பேச்சு சில வாரங்களாகவே அரசியல், ஊடக வட்டாரங்களில் பேசப்பட்டபோதும், ஒபாமாவின் இரண்டாவது பதவிக்கால வெளியுறவுக் கொள்கை பற்றிய சந்தேகங்களால், அதற்கான சாத்தியங்கள் குறித்த கேள்வி பலரிடம் இருக்கவே செய்தது.

ஆனால், ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலத்தில் இலங்கை தொடர்பான கொள்கையில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்த சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்தான் அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இரண்டாவது பதவிக்காலத்துக்காக ஒபாமா தெரிவு செய்யப்பட்ட போதிலும், அமெரிக்க இராஜாங்கச் செயலராக ஹிலாரி கிளின்டன் தொடர்ந்து பதவி வகிக்கப்போவதில்லை. ஏற்கனவே ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகிவிட்ட போதிலும், இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனின் பதவிக்காலம் இன்னமும் முடிவடையவில்லை. அவர் வரும் வெள்ளிக்கிழமையுடன்தான் ஓய்வு பெறப்போகிறார்.

அவரையடுத்து ஜோன் கெரி புதிய இராஜாங்க செயலாளராக பதவியேற்கப்போகிறார். ஜோன்கெரியைப் பொறுத்தவரையில், இலங்கை தொடர்பான கொள்கையில் ஹிலாரியைப் பின்னபற்றமாட்டார் என்றே இலங்கை அரசாங்கம் உறுதியாக நம்பியிருந்தது.

ஆனால், ஜோன் கெரி பதவியேற்க முன்னதாவே, ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகியது. இது இலங்கை அரசு க்கு சோதனையாகத் தான் அமையப்போகிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரப் பிரிவின் பிரதி உதவிச் செயலாளர் நிலையில் உள்ள மூன்று அதிகாரிகள் அண்மையில் கொழும்பு வந்திருந்தனர். விக்ரம்சிங், ஜேம்ஸ் மூர், ஜேன் சிம்மர்சன் ஆகிய இந்த மூன்று பிரதி உதவிச் செயலார்களும் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம், இலங்கைக்கான எச்சரிக்கையை விடுப்பதற்கே என்பது உறுதியாகியுள்ளது. முன்னெப்போதும், இப்படி மூன்று பிரதி உதவிச் செயலாளர்கள் இலங்கைக்கு ஒருசமயத்தில் வந்தது கிடையாது.

ஓரிடத்தில் பணியாற்றும் ஒரே நிலை அதிகாரிகள்- அதுவும் ஒன்றாகவே பயணம் மேற்கொள்ளும்போது, அமெரிக்கா கூடிய அக்கறை செலுத்துகிறது என்றே அர்த்தம். ஆனால், அமெரிக்க அதிகாரிகள் மூவரினதும் பயணத்தை இலங்கை அரசாங்கம் அலட்சியமாகவே கருதியிருந்தது.

"கடந்தமாதம், நடந்த காலி கடல்சார் கருத்தரங்கில் ப்ங்கேற்க வருவதாக அவர்கள் கூறியிருந்தார்கள். பின்னர் அந்தப் பயணத்தை பிற்போட்டனர்; இப்போது வருகின்றனர்" என்று இவர்களின் வருகை குறித்து கேள்வி ஒன்றுக்கு பதில் கூறியிருந்தார் இலங்கையின் பாதுகாப்புச் செயலர்.

ஆனால், அரசாங்கத்துக்கு அமெரிக்க அதிகாரிகளின் பயண நோக்கம் முன்னரே தெரிந்திருந்தது.

ஏனென்றால், கடந்த திங்கட் கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம்பற்றி ஏற்கனவே இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்க செயலர் ஜேம்ஸ் மூர் தெரிவித்திருந்தார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் இத்தகையதொரு அபாய நிலையில் தாம் இருப்பதாக காட்டிக்கொள்வதைத் தவிர்த்தது.

ஆனால், அமெரிக்க உயர் மட்டக் குழு, இலங்கைக்கு எதிராக அமெ ரிக்கா ஜெனிவாவில் தீர்மானம் கொண்டு வரப்போவதாக வெளிப்படையாக அறிவித்து விட்டது. இதனை அரசாங்கம் எதிர் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

ஏனென்றால் அமெரிக்க இராஜாங்கச் செயலராக ஜோன் கெரி இன்னமும் பதவியேற்காத நிலையில், இது பற்றிய தீர்மானம் வெளிப்படையாக அறிவிக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் நம்பியிருக்கவில்லை.

அடுத்து, அமெரிக்கா இப்படி முன்கூட்டியே தமது முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய சூழலும் இருக்கவில்லை.

கடந்த ஆண்டு மார்ச்மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்தபோது, அது குறித்து ஜெனிவா கூட்டத்துக்கு முன்னர் கொழும்பு வந்திருந்த தெற்கு, மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான உதவிச் செயலர் றொபேட் ஒபிளேக்கோ அல்லது மனித உரிமைகள், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் ஜனநாயகத்திற்கான கீழ்நிலைச் செயலர் மரியா ஒரேரோவோ உறுதியாகக் கூறவில்லை.

ஆப்போ, பொதுப்படையாக- இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்று தான் சொல்லப்பட்டுவந்தது. ஆனால், இலங்கை அரசாங்கத்துக்கு முன்னமே எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

இதனால், ஜெனிவாவில் தீர்மானத்தை முன்வைக்கப் போவது அமெரிக்காவா அல்லது வேறு நாடா என்ற கேள்வி கடைசி நேரம் வரை இருந்து கொண்டேயிருந்தது.

ஆனால் இம்முறை, நிலைமை அப்படியில்லை. தாமே தீர்மானத்தை முன்வைக்கவுள்ளதாக அறிவித்து விட்டது அமெரிக்கா.

இது கடந்த ஆண்டில் இருந்த நிலையைவிட இறுக்கமான நிலையில் அமெரிக்கா உள்ளது என்பதற்கான ஆதாரம்.

அதுவும் கடந்தமுறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரும் வகையில் பொதுப்படையாக வலியுறுத்தப்பட்டது. இம்முறை கொண்டு வரப்படும் தீர்மானம், போர்க்குற்ற விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறை, தீர்மானத்தில் போக்குற்ற விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுப்பது உள்ளிட்ட சில விடயங்களை, இந்தியாவின் ஆலோசனையின் பேரில் நீக்குவதற்கு அமெரிக்கா இணங்கியிருந்தது. ஆனால், இந்தமுறை நேரடியாகவே போர்க்குற்ற விவகாரங்களை ஜெனிவாவில் முன்னிலைப் படுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இது சர்வதேச அரங்கில் இலங்கைக்கு இன்னும் அதிக நெருக்கடியையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தக் கூடியது. எனினும், கடந்தமுறை ஜெனிவாவில் ரஷ்யாவும், சீனாவும் இலங்கைக்குப் பக்கபலமாக இருந்தன. இம்முறை இந்த நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்காதது இலங்கைக்குப் பெரும் இழப்பாகவே இருக்கும்.

ஜெனிவாக் களத்தில் இலங்கை அரசாங்கம் இம்முறை கூடுதல் அழுத்தங்களைச் சந்திக்கவுள்ளதற்கு தனியே போர்க்குற்றங்கள் மட்டும் காரணமல்ல. பிரதம நீதியரசர் பதவியில் இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை அரசாங்கம் பதவி நீக்கியதும், அமெரிக்காவின் இந்த இறுக்கமான முடிவுக்கு மற்றொரு காரணம். இதனை அமெரிக்க உயர்மட்டக்குழு கொழும்பில் தெரிவித்துள்ளது. இந்தவகையில் பார்க்கப்போனால், அரசாங்கம் தனது தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுள்ளது என்றுதான் அர்த்தம்.

ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்ட விவகாரத்திலும் சரி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விவகாரத்திலும் சரி- இலங்கை அரசாங்கம் தனக்கான குழியை, தானே வெட்டிக்கொண்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 35 சதவீதமே நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இதில் முக்கியமான பரிந்துரைகள் இடம்பெறவில்லை. இது போதுமானதல்ல- இன்னும் அதிகம் செய்தாக வேண்டும் என்கிறது அமெரிக்கா.

ஆனால், அரசாங்கமோ ஓரளவுக்குமேல் பணிவதில்லை என்பதில் உறுதியாகவே இருக்கிறது. அதனால் தான் கடந்த ஆண்டு மார்ச்மாதம் ஜெனிவா கூட்டத்தொடர், முடிவுக்கு வந்தகையுடன் ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பி விட்டிருந்தது இலங்கை. இந்த நாடுகளுடன் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி ஜெனிவாவில் தனக்கான பாதுகாப் புக்கவசம் ஒன்றை உருவாக்க முற்பட்டது.

இந்த நிலையில்தான், ஜெனிவாவில் அடுத்த தீர்மானம் வரப்போவது உறுதியாகிவிட்டது. அதை எதிர்கொள்ளத் தாமும் தயார் என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. இந்த நிலையில் கடந்த முறையைவிட இம்முறை ஜெனிவாக் களம் சூடானதாவே இருக்கப் போகிறது. அதேவேளை இந்தியாவின் நிலை என்னவென்பது இன்னமும் கேள்விக்குரியதாகவே உள்ளது.


## பெரும் சவாலாகிறது இலங்கைக்கு



-நன்றி: இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## எறும்புகள்


எங்குமே கொட்டித் தீர்க்காத
கடும் மழையின் பின்னர்
அந்த எறும்புகளின் இருப்பிடங்கள்
தொலைந்திருக்கின்றன
பல எறும்புகள்
காணாமல் போயிருக்கின்றன
எறும்புகளின் இருப்பிடங்கள்
புதைகுழியாய் மாறியிருக்கின்றன
இழப்புக்களோடும் வலிகளோடும்
எறும்புகளின் மீள்குடியேற்றம்
புதியவகை எறும்புகளின்
ஆக்கிரமிப்பின் மத்தியில்
இந்த எறும்புகள்
இருப்பிடத்தைத் தேடியபடி...
இருண்டுபோன வானம்
மழை வருவதற்கான
அறிகுறி... ஆனால்
இங்கோ எப்போதுமே
வானம் இருண்டபடியே
இருக்கிறது...

ஆ.முல்லைதிவ்யன்

## பாரதியுடன்

காணி நிலம் வேண்டும்- பராசக்தி
காணிநிலம் வேண்டும்- மஹாகவி
பாரதியும் காணி நிலம் கேட்டான்
காணிநிலம் வேண்டும்
எங்கள் காணி நிலம் வேண்டும்
கத்திக் கத்தி நாமும் கேட்டோம்
தொண்டைத்தண்ணீர் வத்திப்போச்சு
காணி நிலம் வேண்டும்- எங்கள்
காணி நிலம் வேண்டும்
தூணிலழகியதாய்- நன் மாடங்கள்
துய்ய நிறத்தினவாய்- அந்தக்
காணி நிலத்திடையே
ஓர் மாளிகைபோல் வீடு
கண்ணுக்குப் புலப்படாத தூரத்தேயிருந்து
எய்தவனின் துப்பாக்கிக் குண்டால்
துண்டு துண்டாய்- தூர்ந்து போனது- பராசக்தி
எங்கள் வீடு போனது
ஓலைக்குடிசையில் ஒதுங்கி வாழ்வோம்
காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணிநிலம் வேண்டும்

பாரதி பக்தன்



## உயிரே உனக்காக

என் சின்னஞ்சிறிய உலகின் தேவதை நீ!
என் கவிதைகளின் இளவரசி நீ!
என் ஆசைகளின் முதற்புள்ளி
என் எழுத்துக்களின் பொருட் சொல்
ஒரு ஜன்னலின் கதவுகளை திறந்து
உலகின் பரந்த வெளிக்கு என்னை
அழைத்துச் சென்றவள் நீ!
ஒவ்வொரு நொடியும் வாழும் கலையினைக்
கற்றுக் கொடுத்தவள் நீ!
மரணித்துக் கொண்டிருந்த மனதொன்றை
அன்பெனும் மருந்திட்டு
காப்பாற்றியவள் நீ!
என் காலங்களில் வசந்தமாய் கோடையாய்
குளிராய் என் அனைத்து மாற்றமும் நீ!
என் இதயத்தின் கடைசி துடிப்பு
மூச்சுக்காற்றின் இறுதித்துளிக்காற்று!
கண் நினைக்கும் கனவுகள் என் அனைத்துமே
நான் இல்லை நீ

பா.கங்கா
வண்ணார்பண்ணை

## இமயம் தொட...

உருமாறிய அன்புதனை
உதறியெறி
திடமான தடம் பார்த்து நடைபயிலு
மனிதனோ மிருகமோ
அன்பின் வெளிப்பாடு ஒன்றுதான்
உண்மை அன்பை
புரியாத மனங்கள்
மனங்கள் அல்ல
அவர் மனிதரும் அல்ல

மாவை. நா. கஜேந்திரன்

## நடப்பவை

பாடும் பறவைகள் ஒலி
கோயில் மணியோசை
புலர்ந்த பொழுதுகள்
தொலைபேசி ஒலியில்
விடிகின்றன
நிஜங்களை உறங்கவைத்து
நிழல்கள் உலாவுகின்றன
கலைகள் கலாசாரங்கள்
திரைமறைவில் விழாக்களில்
கைதட்டுதலில் வாழ்கின்றன
செய்தி ஒளிபரப்பில்
தொலைக்காட்சி ஒய்வு
தொலைக்காட்சி நாடகங்களில்
கண்ணீரை வீணாக்கும் சமூகம்
கூடிவாழ்ந்த வாழ்க்கை
கூடுகலைந்து போனது
இடுகாட்டில் மட்டும்தான்
நிம்மதியாய் தூங்குகின்றனர்

இணுவில் வாகீசன்

# மௌனத்தின் தேடல் - 141



## தளராத பயணம்

சுதந்திரத்தின் தேடலில்
சொந்தங்கள் தொலைந்திட
எஞ்சிய- உன்
சின்ன உறவைச்
சுமந்தபடி
விடியலைத்தேடி விரையும்
உனக்கு
கலியுகத்திலே
சவால்கள் அதிகம்- தளராதே
நாளை உலகம்
உன்கையில்

இ.சரண்யா
தாவடி

## ஓயவில்லை...

மண்ணாசை பேய்களினால்
கூடிவாழ்ந்த கூடிழந்தோம்
குழைத்து சோறூட்டிய
தாயிழந்தோம்
துள்ளித்திரியும் வயதினிலே
தாவித்திரியும் தங்கையை
தோளில் சுமக்கின்றேன்
சமர்காலம் ஓடியது- எங்கள்
பசிக்காலம் ஓயவில்லை

து.இந்திரமதி

## எல்லோருக்கும் ஆனந்தம்

அண்ணாவின் முதுகினிலே
அமர்ந்துவர ஆனந்தம்
தங்கைதனை முதுகேற்ற
தமையனுக்கு ஆனந்தம்
இரு உள்ளம் இணைந்துவர
எல்லோருக்கும் ஆனந்தம்
பரிசுத்த உளம் காண
பரமனுக்கும் ஆனந்தம்

வி.றபின்சன்
புன்னை நீராவி

## புரிந்து நட

இன்று உன்னை சுமை
என நினைக்காது தாங்கும்
உன் அண்ணனுக்கு- என்றும்
நீ சுமை ஆகி விடாதே
தங்கா

பொ.இளவரசி
பருத்தித்துறை

## உணர்வு

காலத்தின் கோலத்தால்
உறவுகளை இழந்து
அநாதையாக்கப்பட்ட எனக்கு
நீ என் உயிராய் வந்தாய்
என் இறுதி மூச்சு உள்ளவரை
உன்கூட நான் வருவேன்
உன்மீது நான்
கொண்ட அன்பினால்

வி.கிஷோர்
சுதுமலை

## எவ்வளவு காலம்

உன் தங்கையை முதுகில்
சுமக்கின்றாய்
எவ்வளவு காலமென் நீ முதுகில்
சுமக்கப்போகிறாய்
போராட்டம் நிறைந்த
மனித வாழ்க்கையில்
தங்கையை முதுகில்
சுமப்பதும் ஒரு போராட்டம்தான்

திசா, பளை

## சொந்தம்

சிட்டுக்குருவிகள் ரெண்டு
சிறகு இழந்து தவிக்கிறது
பட்டமரக்கிளையிலே!
வெட்டவெளி வானிலே!
வட்டமிட்டுப் பறக்கவே! அவை
தத்தித் தத்திப் பார்க்குதடி!
இப்பாரினிலே! சொந்தமென்று
யாரும் இல்லை என்றே!

த.கஜூதரன், நாவற்குழி

## அன்புச்சுமை

அன்புகொண்டு அண்ணன் உனை
அணைத்திருக்கும் தங்கைதனை
அரவணைத்து வரும்
வழித்தடைகளை உடைத்து
வாழவைக்கும் வரை
அன்பு என்ற சுமைமைய
நீயும் சுமந்திரு

சு. துஷாந்தி

## வசந்தகாலம் நோக்கி

கால்நடக்கமுடியா
தங்கை நிலையுணர்ந்த பின்பு
மனம் சலிக்கா உன் நிறைவான
ஒற்றுமை நிலை புரிகிறது எமக்கு
இருந்தும்- உன்
கால் இடறா குறி உணரும்
உன் பார்வை அர்த்தங்கள்- நாளை
உதயமாகும் வாழ்வின் வசந்தங்களே

ம.அருள்யோன்சன், கிளிநொச்சி

## பாசம்

பாசம் பாசாங்காகப் போகும்
இப்பாரினில்
பாசத்தின் சுமையை
பாசத்தோடு
சுமக்கும் நீ
உள்ளத்தால்
உயர்ந்தவனடா

கெ.நிவேதா
யாழ்ப்பாணம்

## வலிகளே வரங்களாய்

வாழ வந்த வாழ்வில்
வலிகள்தான் சொர்க்கமாய்- பிள்ளை
உள்ளம் மாறுமுன்னே
உடன் பிறந்தவள் சுமை
வதையென்று எண்ணாதே
வரங்களாய் ஏற்றிடு!- நாளை
தரணியில் உனை
தாயாய் தாங்கும் தங்கையாவாள்!

சு.அனுசா, வற்றாப்பளை

## சுமைதாங்கி

அம்மாவும் நானடா
அப்பாவும் நானடா
ஆசைதீர உன்னை
அலுக்காமல் சுமப்பேனடா!

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## சகோதரப் பண்பு

அன்புத் தந்தையை அண்ணன்
தன் முதுகில் சுமக்கிறான் பாசத்தோடு
இன்பம் பொங்கமகிழுமிவர் போல்
என்றும் இனிதே வாழ நாமும்
துன்பமான இன பேதங்களை மறந்து
ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல்
ஒன்றுபட்டு வாழ்ந்தால் மண்ணில்
மலர்ந்திடும் சகோதரப் பண்பு


துரை
தென்மட்டுவில்

## கவனம்

ஒருவருக்கொருவர்
உப்புமூட்டை தூக்கி
சந்தோசமாய் விளையாடும்
இளம் பிஞ்சுகளே என்றும்
எச்சரிக்கையாயிருங்கள்
உங்கள் வாழ்வைச் சீரழிக்க
குறிவைத்துக் காத்திருக்கின்றது
காமுகர்கள் கூட்டம்

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -142



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 08.02.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண விநியோகத்தில் முறைகேடு; நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

## சிவசக்தி எம்.பி முகாமைத்துவ அமைச்சருக்கு கடிதம்

(வவுனியா)

வெள்ளதால் பாதிக்கப்பட்ட மன்னார் மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரண உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரித்து சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கத் தயார் நிலையிலிருந்த உலர் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்திருந்த அதிகாரிகள் மீது உடன் சட்ட நடவடிக்கையிணை மேற்கொள்ள வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவினை அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் அமைச்சருக்கு கடந்த 31 ஆம் திகதி கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மன்னாரில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படவிருந்த அரிசி, கிழங்கு, வெங்காயம், பருப்பு,கருவாடு என்பன பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வழங்கப்படவில்லை.

அதன் படி 140 மூடை அரிசி ,70 மூடை பருப்பு ,ரின்மீன் 1200 ,சீனி 40 மூடை ஆகியன மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வைக்கப்பட்டிருந்தன. இதேசமயம் பாவனைக்குதவாத பழுதடைந்த உருளைக் கிழங்கு ,வெங்காயம் மற்றும் கருவாடு என்பன இரண்டு உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டு வீசப்பட்ட சம்பவமும் இங்கும் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தினை மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவைச் சேர்ந்தோர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்திற்கு நேரில் சென்று விசாரித்தறிந்த வேளை இப் பொருட்கள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் பழுதடைந்தவை ட்ரக்டர்களில் எடுத்துச் செல்லப்பட்டு வீசப்பட்டிருந்ததையும் அவர்கள் கண்டறிந்தனர்.

மேலும் மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டவை. பழுதடைந்த பொருட்களின் தொகை மற்றும் இவை உரிய காலத்திற்குள் வழங்கப்படாததன் காரணம் முதலானவற்றின் விபரங்களை வழங்குமாறு கோரியும் மன்னார் பிரதேச செயலாளருக்கு பிரஜைகள் குழு கடிதம் அனுப்பியுள்ளது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு வேளை உணவிற்காக அவதிப்பட்ட வேளையில் அவர்களுக்கென வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் பதுக்கப்பட்டு பழுதடைந்து நிலையில் வீசப்பட்டதானது கண்டிக்கப்பட வேண்டிய பாரதூரமான குற்றமாகும்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையை அமைச்சு மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு முறைகேடு இடம் பெறாமல் தடுக்க முடியும்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை பதுக்கி வைத்ததற்கு உடனடியாக விசாரணைக்கு உத்தரவிடுவதோடு பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருட்களை சீராக விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ-2)

# நான்கு கடைகள் எரிந்து நாசம்

(கம்பளை)

கம்பளை புப்புரஸ்ஸவில் நான்கு கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இக்கடைகளிலிருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று கம்பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரும்பு கடைகள் மற்றும் சில்லறை கடைகளே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளபோதிலும் அந்த கட்டடத்தில் இருந்த 12 குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் விஹாரையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# மலையக யுவதிகளும் இராணுவத்தில் இணைய சந்தர்ப்பம் தர வேண்டும்

## இ.தொ.காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதியை சேர்ந்த யுவதிகள் போல் மலையக யுவதிகளும் இராணு வத்தில் இணைய சந்தர்ப்பத்தை வழங்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கில் தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைத்து கொள்ளப்பட்டதன் மூலம் வடக்கு கிழக்கில் அமைதியை பாதுகாக்க சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்த இது உதவியாக அமையும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தை சேர்ந்த யுவதிகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மலையக இளைஞர், யுவதிகளுக்கு இராணுவத்தில் இணைய சந்தர்ப்பம் வழங்குமாறு கோ[illegible] ஜனாதிபதி கடிதம் அனுப்ப உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவசரமான சந்தர்ப்பங்களில் மலையகத்தின் பாதுகாப்பு கடமைகளில் இவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் சட்டத்தையும் அமைதியையும் இலகுவாக உறுதிப்படுத்த முடியும்.

மேற்படி கோரிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானினால் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆடம்பர கார் இறக்குமதி பற்றி விசாரணை வேண்டும்

## பிரதான எதிர்க்கட்சி வலியுறுத்தல்

(கொழும்பு)

ஆடம்பரகாரான றோல்ஸ் றொய்ஸ் கோஸ்ட் இறக்குமதி செய்யப்பட்ட விதம் பற்றி விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட கார் தொடர்பில் றோல்ஸ் றொய்ஸ் நிறுவனத்தின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட விலைக்கும் சுங்கம் வெளிப்படுத்தலில் குறிப்பிடப்பட்ட விலைக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதனால் இது பற்றி விசாரணை நடத்த வேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்,

இந்த ஆடம்பர வாகனம் ஒரு இலட் சத்து 75 ஆயிரம் அமெரிக்கடொலர் பெறுமதியானது என வாகன இறக்குமதியாளர் தனது வெளிப்படுத்தலில் கூறியிருப்பதன் அடிப்படையில் சுங்கவரியாக 61 மில்லியன் ரூபாவை மட்டும் அறவிட்டுக் கொண்டு சுங்கத்திணைக்களம் வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதித்தது.

ஆனால் இந்த காரின் விலை 3 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்கடொலர் என்று இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் இரண்டு மடங்கு வரி அறவிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு வரி அறவிடப்படவில்லை.அது தொடர்பில் ஒரு வெளிப்படையான விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்றார். (அ-2)

# இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசரின் இலங்கைக்கான பயணம் இரத்தானது

## த ஹிந்து நாளேடு தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு நேற்று முன்தினம் பயணிக்கவிருந்த இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ். வர்மா தமது பயணத்தை நிறுத்தியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட குற்றவியல் பிரேரணையின் சட்ட ஒழுக்கங்கள் தொடர்பில் ஆராயும் சர்வதேச விசாரணைக்குழுவுக்கு தலைமை தாங்கியே வர்மா இலங்கைக்கு பயணிக்கவிருந்தார்.

எனினும் தாம் தமது பயணத்தை நிறுத்தி விட்டதாக அவர் த ஹிந்து நாளேடுக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விசா இரத்து செய்யப்பட்டதாக வெளியான தகவல் குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது அவ்வாறான பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை என்று வர்மா குறிப்பிட்டுள்ளார்.

வர்மாவின் தலைமையிலான குழு சர்வதேச சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் அனுசரணையின் கீழ் இலங்கைக்கு வரவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




அன்பே சிவம் அமைப்பினால் வறிய குடும்பங்களை சேர்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கென தையல் பயிற்சி நிலையம் ஒன்று பரந்தன்- முல்லை வீதியில் அமைந்துள்ள முரசுமோட்டையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜும்மா தொழுகையில் ஈடுபட்டோர் மீது நேற்று குண்டுத்தாக்குதல்

## 15 பேர் பலி; 20 பேர் படுகாயம்

ஜும்மா தொழுகையில் ஈடுபட்டோரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 15 பேர் உயிரிழந்ததோடு மேலும் 20 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர்-போக் துங்வா மாகாணம் ஹாங்கு நகரில் உள்ளபட்டஜும்மசூதியில்நேற்றுவெள்ளிக்கிழமை தொழுகையை முடித்து விட்டு பொதுமக்கள் வெளியேறிக் கொண்டிருந்த போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியதில் பலர் தூக்கி வீசப்பட்டனர்.


இந்த தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டதுடன் 20 பேர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று ஹாங்கு மாவட்ட பொலிஸ் தலைவர் மியான் முகமது சயித் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பு தகவல் அறிந்த பொலிஸாரும் மீட்பு குழுவினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்திற்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை என கூறப்படுகிறது. இதே வேளை கடந்த சில ஆண்டுகளில் ஹாங்கு மாவட்டத்தில் இதுபோன்ற பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# அமெரிக்க இராஜாங்கத்திலிருந்து ஓய்வு பெற்றார் ஹிலாரி கிளின்டன்

## சரித்திரத்தில் தலைசிறந்தவர்– ஒபாமா புகழாரம்




அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அமைச்சர்பதவியில் இருந்து ஹிலாரி கிளின்டன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விலகினார்.

ஒரு மாணவர் தலைவராக தனது பொதுவாழ்க்கையை ஆரம்பித்த ஹிலாரி, உலகம் அறிந்த ஒரு அரசியல் தலைவராக உயர்ந்து பல்வேறு பொறுப்புகளில் பரிமளித்துள்ளார்.

1992 இல் பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக ஆன நேரத்தில் அவருடைய மனைவியாக உலக அரங்கில் ஹிலாரி முன்னிலைக்கு வந்தார். கல்லுப் என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பில் உலகத்தில் அதிகம் பேர் மதிப்புக்கும் விருப்பத்துக்குமான பெண் பிரமுகராக தொடர்ந்து பதினேழு வருடங்களாக இவர் முதலிடத்தில் வந்துள்ளார்.


ஜனாதிபதியின் மனைவி என்ற ஸ்தானத்திலும் பின்னர் நாட்டின் இராஜாங்க அமைச்சர் என்ற ஸ்தானத்திலும் ஏராளமான உலக நாடுகளுக்கு ஹிலாரி சென்றுள்ள இதே வேளை கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ஹிலாரி 112 நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

அவருக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவு பற்றிய கருத்து கணிப்பில் 70 சதவீத ஆதரவை ஹிலாரி பெற்றுள்ளார். இந்நிலையில் அமெரிக்க சரித்திரத்தில் தலைசிறந்த இராஜாங்க அமைச்சர்களில் ஒருவராகத் ஹிலாரி திகழ்வதாக ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

ஸ்மார்ட் பவர் என்று சொல்லப்படுகின்ற புத்திசாலித்தனமாக அதிகாரம் செலுத்தும் உத்தியை சர்வதேச அரங்கில் அமெரிக்கா கையாள வேண்டும் என்ற கொள்கைகளை வகுத்து செயற்படுத்தியவர் ஹிலாரி ஆவார்.

தற்போது ஹிலாரி பதவி விலகினாலும் இன்னும் நான்கு ஆண்டுகளில் நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடுவாரா என்ற சந்தேகம் உள்ள நிலையில் தாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லைஎனஅண்மையில்ஹிலாரி கிளின்டன் உறுதிப்படத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# தலிபான்களின் அதிரடி தாக்குதலில் படையினர், போராளிகள் உட்பட 34 பேர் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நேற்று தலிபான் போராளிகள் நடத்திய தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டதுடன் 30 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவே நடத்தப்பட்டதாக தலிபான் செய்தி தொடர்பாளர் இஷானுல்லா இஷான் தெரிவித்துள்ளார்.

வடமேற்கு பாகிஸ்தானில் வர்ஜிஸ்தான் பகுதியில் பாகிஸ்தான் படையினர் இருந்த சோதனைச் சாவடியில் போராளிக் குழுவினர் கையெறி குண்டுகளை வீசினர். தொடர்ந்து துப்பாக்கிச்சண்டையும் நடந்தது. இதில் 12 போராளிகளும் பாகிஸ்தான் படையினர் 8 பேரும் மற்றும் பொதுமக்கள் 11 பேரும் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் தலிபான் தற்கொலை படையினர் 3 பேர் இறந்தனர்.

4 மணி நேரம் தொடர்ந்து இந்த சண்டை நீடித்ததுடன் தொடர்ந்து சாவடி அருகே இருந்த ஒரு வீட்டின் மீது ரொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் குறித்து தலிபான்கள் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தனர். இந்தத் தாக்குதலுக்கு நாங்களே பொறுப் பேற்கிறோம். சமீபத்திய அமெரிக்க இராணுவ தாக்குதலில் தலிபான் கமாண்டர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர். இதில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் இராணுவத்தினர் உதவி செய்தனர். இதற்கு பழி தீர்க்கவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என கூறப்பட்டுள்ளது. (அ-5)

### சாலமோன் தீவுகளில் நிலநடுக்கம்

சாலமோன் தீவு கடற்கரை பகுதிகளில் இன்று காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.7 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந் நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. (அ-5)

# கொலம்பியா விபரீதம் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தது நாசா

## வெளியாகியது அதிர்ச்சி தகவல்

அமெரிக்காவின் நாசா அனுப்பிய கொலம்பியா விண்கலம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி பூமியை நோக்கி வந்த போது வெடித்துச் சிதறியது.


இதில் இருந்த இந்திய வம்சாவளி கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 விஞ்ஞானிகளும் இறந்தனர்.

இது நடந்து கடந்த முதலாம் திகதியுடன் 10 ஆண்டு கள் நிறைவுற்ற நிலையில் கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறி விடும் என்பது நாசா விஞ்ஞானிகளுக்கு முன்பே தெரியும் என்ற தகவல் வெளியாகி சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர். ஆனால், பூமி சுற்றுப் பாதைக்கு வந்த அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் விண்கலம் வெடித்து சிதறி கல்பனா சாவ்லா உட்பட 7 விண்வெளி வீரர்களும் பலியாகியிருந்தனர். (அ-5)

## உலக தரிசனம்



தென்கொரியா சியோலில் உள்ள பல்கலைக்கழக தலைவர் மியன்மார் எதிர்க்கட்சி தலைவர் ஆங்சாங் சூகிக்கு டாக்டர் பட்டம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# சமதர்ம இயக்க பெண் மீது 10 கொலை வழக்கு பதிவு

## 500 பக்க குற்ற பத்திரிகை தயார்

நவீன நாஜி இயக்கத்தைச் சேர்ந்த பியேட் ஷேப் என்பவர் மீது பத்து கொலை வழக்குகளை பொலிஸார் பதிவு செய்துள்ளதோடு இப்பெண் மீது 500 பக்க குற்றப் பத்திரிகை தயாராகி உள்ளது.

தீ வைத்தல், தேசிய சமதர்ம இரகசிய இயக்கத்தை தோற்றுவித்தல், கொள்ளையில் பங்கேற்றது எனப் பல வழக்குகள் அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சமதர்ம இரகசிய இயக்கம் வெளிநாட்டில் இருந்து வந்து ஜேர்மனியில் கொலை செய்ததுடன் ஒரு பெண் பொலிஸாரையும் கொலை செய்துள்ளது.

இந்த இரகசிய இயக்கத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொலை, கொள்ளை, தீ வைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டனர்.

இவர்களில் இப்போது ஷேப் மட்டும் உயிருடன் இருக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (அ-5)

# வீரச்சிறுமி மலாலா யூசுப் நோபல் பரிசுக்கு பரிந்துரை

பாகிஸ்தான் வீரச்சிறுமி மலாலா யூசுப்சாய் 2013 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவியான மலாலா தனது சமூக வலைத்தளத்தில் தலிபான்களுக்கு எதிராக பெண் கல்விக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி பாடசாலைப் பேருந்தில் தலிபான்களால் சுடப்பட்டார்.

இதில் படுகாயமடைந்த மலாலா இங்கிலாந்தில் சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ளார்.

இதற்கிடையில் நோர்வேயில் ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும் அமைதிக்கான நோபல் பரிசுற்காக முந்தய ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றவர்கள் சில பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், பல நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில குறிப்பிட்ட உலகளவிலான அமைப்புகள் உள்ளடங்கிய பல்லாயிரக்கணக்கானோர் இந்த நோபல் பரிசுக்காக பரிந்துரை செய்யலாம்.

இவ்வாறு பரிந்துரை செய்தவர்கள் தங்களால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் பற்றிய விபரங்களை வெளியிடலாம்.

அந்த வகையில் பிரெஞ்சு, கனடா மற்றும் நோர்வே நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலாலாவை பரிந்துரைத்தது தெரிய வந்துள்ளது.

மேலும் பெலாரசின் அலெஸ் பெல்யாட்ஸ்கி மற்றும் ரஷ்யாவின் லூத்மிலா அலெக்ஸேவா போன்ற மனித உரிமை போராளிகளின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதனால் அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்படும் என்பதை ஊகிக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஆவது ஆண்டு நிறைவில் பொது அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலக சனசமூக நிலையம் 11 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொது அறிவுப் போட்டியை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இப்போட்டியில் பொதுஅறிவு, பொது உளச்சார்பு, மொழித்திறன் ஆகிய பாடங் களே நடைபெறவுள்ளன. இதில் வலிகாமம் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலையில் தரம் 5 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களும் வெளிவாரி மாணவர்களும் பங்குகொள்ள முடியும்.

இப்பரீட்சையானது ஆரம்பப் பிரிவு (தரம் 5,6 பரீட்சைக் கட்டணம் 15 ரூபா), கீழ்ப்பிரிவு (தரம் 7,8 பரீட்சைக்கட்டணம் 15 ரூபா), மத்திய பிரிவு (தரம் 9,10,11 பரீட்சைக்கட்டணம் 20 ரூபா), மேற்பிரிவு (தரம் 12,13 பரீட்சைக் கட்டணம் 30 ரூபா) ஆகிய 4 பிரிவுகளிலும் முதலிரு பிரிவுகளுக்கும் 45 நிமிடங்களும் இறுதி இரு பிரிவுகளுக்கும் ஒரு மணித்தியாலமும் பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை நூலகத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-21)

# மண்டையோடுகள் 136; எலும்புக்கூடுகள் 142

## மாத்தளையில் மீட்பு

(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இருந்து இதுவரையில் 136 மனித மண்டையோட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த இடத்தில் இருந்து 142 மனித எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் குறித்து விசாரணை நடத்த மேலதிக குழுவொன்றும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் மண்டையோடு மற்றும் எலும்புக்கூடுகள் குறித்த முழுமையான தகவல் வெளியிடப்படவில்லை. (அ-2)

# தஞ்சை மாவட்ட மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

## இந்திய ஊடகம் தகவல்

தஞ்சை மாவட்ட மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள மல்லிப்பட்டிணத்தைச் சேர்ந்தவர் பைசல் கான் இவருக்கு சொந்தமான படகில் ஜெகதா பட்டிணத்தைச் சேர்ந்த கணேசன், பூவரசன், முருகன், புதுக்கோட்டை மாவட்டம் மீமிசலை சேர்ந்த தங்கராசு ஆகிய 4 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் மல்லிப்பட்டிணத்தில் இருந்து 25 மைல்கள் தொலைவில் இந்திய எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு இலங்கை கடற்படை கப்பல் வந்தது. அதில் இருந்த இலங்கை கடற்படை வீரர்கள் ஜெகதாபட்டிணம் மீனவர்களை உருட்டு கட்டையால் சரமாரியாக தாக்கினார்கள்.

மேலும் மீனவர்கள் தங்களது படகில் வைத்திருந்த சாப்பாடு, மீன், வலை ஆகியவற்றை பிடுங்கி கடலுக்குள் வீசினர். இதன் மதிப்பு 2 1/2 இலட்சம் ரூபா ஆகும். மேலும் மீனவர்களின் லைசென்சு, படகின் உரிம கார்டுகளையும் இலங்கை கடற்படையினர் பறித்துச் சென்றனர். தாக்குதலில் படுகாயம் அடைந்த 4 மீனவர்களும் நேற்று காலை அதிராம்பட்டிணம் திரும்பினார்கள். அங்குள்ள கடலோர காவற்படையினரிடம் தாங்கள் தாக் கப்பட்டது குறித்து புகார் தெரிவித்தனர்.

பின்னர் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (அ-2)

# கைப்பேசியில் உரையாடியபடி வாகனம் செலுத்தும் சாரதிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சில தனியார் பேருந்து சாரதிகள் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு பேருந்தை செலுத்துவதால் பயணிகள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுமோ? என்ற அச்ச நிலையுடன் பயணிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.55 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தை செலுத்திச் சென்ற சாரதி நந்திக்கடல், வட்டுவாகல் பாலத்தடியில் சென்று கொண்டிருக்கும் போது தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனத்தை செலுத்திச் சென்றார்.

குறிப்பிட்ட பாலத்தினூடாக ஒரு வாகனம் மட்டுமே பயணிக்க முடியும். 2 வாகனங்கள் ஒரே நேரத்தில் பயணிக்க முடியாது.

எனவே, குறித்த பேருந்தில் குழந்தைகள், அரச ஊழியர்கள் உட்பட பல தரப்பட்ட பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தனர். வாகனம் பாலத்தினுள் தடம்புரண்டால் உயிர் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கும்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு வாகனத்தை செலுத்தும் போது தொலைபேசியில் உரையாடுவதை நிறுத்தி உயிர் ஆபத்தை தடுக்க முன்வர வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# ஸ்ரீ கல்கி பகவானின் 64 ஆவது ஜன்ம தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கல்கி பகவானின் ஜன்ம தினத்தையொட்டி நேற்று தொடக்கம் ஆரம்பமான பாதபூஜை நிகழ்வு சற்சங்கங்கள் வாயிலாக நடைபெற்று முக்திக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தீட்சையும் பகவானின் அனுக்கிரகத்துடன் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இல .38, புதுத்தோட்டம் வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டியில் இராஜகோபால் யோகாம்பிகை இல்லத்தில் பாதபூஜை நடைபெறுமென யாழ்.மாவட்ட சற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ-9)

# 144745 மாணவர்கள் பல்கலைக்கு தகுதி; 9057 பேர் மூன்று பாடங்களில் ஏ தர சித்தி

## பரீட்சை திணைக்களம் தெரிவிப்பு

2012 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்தின் கீழ் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 809 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களில் 8 ஆயிரத்து 540 பேர் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சைக்குத் தோற்றிய 2 இலட்சத்து 7 ஆயிரத்து 910 பேரில் 61.35 வீதமானவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 16 ஆயிரத்து 538 பேர் அனைத்துப் பாடங்களிலும் குறைந்த மதிப்பீட்டைப் பெற்று சித்தியடையத் தவறியுள்ளனர்.

அதேநேரம் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றிய 25 ஆயிரத்து 724 மாணவர்களில் 15 ஆயிரத்து 936 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 513 பேர் மூன்று பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 947 பேர் அனைத்துப் பாடங்களிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடையத் தவறியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 313 பேர் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றிருப்பதுடன் பௌதீக விஞ்ஞானத்தில் 443 பேரும் வர்த்தகத்துறையில் 6 ஆயிரத்து 471 பேரும் கலைத்துறையில் ஆயிரத்து 313 பேருமாக 8 ஆயிரத்து 540 பேர் அனைத்து மூன்று பாடங்களிலும் ஏ [illegible]திகளைப் பெற்றுள்ளனர்.

பழைய பாடத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 72 பேரும் பௌதீக விஞ்ஞானத்துறையில் 47 பேரும் வர்த்தகத்துறையில் 234 பேரும் கலைத்துறையில் 160 பேரும் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)



கடந்த 2012 இல் நடைபெற்ற க.பொ.த. உ/த பரீட்சையில் மாவட்ட நிலைகளில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற 24 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலைப்பிரிவில் 3 ஏ சித்திபெற்று மாவட்ட நிலையில் நான்காம் இடத்தினைப் பெற்ற சுன்னாகம் வாழ்வக மாணவன் சொர்ணலிங்கம் தர்மதன் விருந்தினர்களால் கௌரவிக்கப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன், என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸிற்கு எதிராக நாம் செயற்படுவோம்

## டி.ராஜேந்தர் சூளுரை

வருகிற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கெதிரான அணியில் இலட்சிய தி.மு.க செயற்படும் என்று அதன் தலைவர் விஜய டி.ராஜேந்தர் கூறியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கள்ளக்குறிச்சி தொகுதியில் இலட்சிய தி.மு.க சார்பில் அதன் தலைவர் விஜய டி.ராஜேந்தர் போட்டியிட்டார்.

தே.மு.தி.க ஒன்றிய செயலாளர் சின்னசாமி தலைமையில் 6 பேர் கொண்ட கும்பல் விஜய டி.ராஜேந்தரை வேட்பு மனு வாபஸ் பெறுமாறு மிரட்டியதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக சின்னசேலம் பொலிஸ் நிலையத்தில் விஜய டி.ராஜேந்தர் கொடுத்த புகாரின் பேரில் ஒன்றிய செயலாளர் சின்னசாமி, குமார், கோபி என்கிற கோபிநாத், சூர்யா, தாமோதரன், அறிவு என்கிற அறிவழகன் ஆகியோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதன் விசாரணை தொடர்பாக நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் மஜிஸ்திரேட்டு ஜெகதீசன் முன்னிலையில் விஜய டி.ராஜேந்தர் ஆஜரானார்.



அப்போது இந்த வழக்கில் சமாதானமாகி வழக்கை முடித்துக் கொள்வதாக மஜிஸ்திரேட்டிடம் கூறினார்.

வழக்கு விசாரணை முடிந்து 11.40 மணியளவில் மஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த விஜய டி.ராஜேந்தர் நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில்,

கள்ளக்குறிச்சியில் தேர்தல் பிரசாரத்தின்போது ஒரு புகார் மனு கொடுத்தேன்.

உணர்ச்சிவசப்பட்டு, ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு எனக்கு எதிராக சிலர் நடந்து கொண்டனர்.

நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன். எனவே மறப்போம். மன்னிப்போம் என்ற அடிப்படையில் அந்த வழக்கை சமாதானம் செய்து முடித்துக் கொண்டேன்.

வருகிற நாடாளுமன்ற தேர்தலில்எங்களின்ஜனநாயககடமையை ஆற்ற முற்படுவோம். இன்றைக்கு மத்தியில் நடைபெறுகிற காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் நிறைந்துள்ளது.

மக்கள் விரோத போக்குடன் டீசல், பெற்றோல் விலை உயர்த்தப்படுகிறது. உலக வரலாற்றில் பல முறை பெற்றோல், டீசல் உயர்த்தியது இந்த ஆட்சியில் மட்டும்தான் இருக்கும்.

இதற்கு பாடம் புகட்ட வேண்டும் என்று எப்போதெல்லாம் மத்திய அரசுக்கு எதிராக போராட்டம் நடக்கிறதோ அப்போதெல்லாம் இலட்சிய தி.மு.க போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது.

அந்த அடிப்படையில் வருகிற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரசுக்கெதிராக செயற்படக்கூடிய அணியில் இலட்சிய தி.மு.க இருக்கும். அதற்கான முயற்சியை மேற்கொள்ளும் என அவர் கூறினார். (அ-5)

# கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டம் தொடர்பில் சோனியா கருத்து



கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் நிதி தவறான முறையில் கையாளப்படுவதையும் ஊழல் நடப்பதையும் தடுக்க வேண்டியது அவசியமாகும். அதுபோல கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டங்களில்பெண்கள்பங்கேற்பதில்உள்ள இடையூறுகளை களைய வேண்டியதும் அவசியமாகும்.

இவ்வாறு கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் தொடர்பான கூட்டத்தில் நேற்று பங்கு கொண்ட காங்கிரஸ் தலைவர் சோனியா கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது நமது நாட்டின் கனவாகும். அந்த கனவை நனவாக்குவதில் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் பெரிய அளவில் முக்கிய பங்காற்ற முடியும் [illegible] தெரிவித்தார்.

விழாவில் க[illegible] கொண்ட பிரதமர் மன்மோகன் [illegible] கூறுகையில், கிராமப்புற வேலை[illegible]வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வா[illegible] கணக்குகளை தொடங்கினால் கி[illegible]மப்பகுதி மக்களிடம் நேரடி மா[illegible]ரிய உதவியை அமுல்படுத்த மிக [illegible]ளிதாகவும் உதவியாகவும் இருக்[illegible]ம் என்றார். (அ-5)

## பாரதச் செய்தி

# பிரம்மபுத்திரா நதியில் அணை கட்டுகிறது சீனா

## முறையீடு செய்தது இந்தியா



திபெத் நாட்டிலிருந்து பாயும் பிரம்மபுத்திரா நதியில் சீனா அணை கட்டும் திட்டத்திற்கு இந்தியா, சீன அமைச்சரகத்தில்புகார்அளித்துள்ளது.

சீனா தனது எல்லைப் பகுதியில் உள்ள பாகு, ஜியாச்சா மற்றும் ஜியாக்சூ ஆகிய 3 இடங்களில் புதிதாக 3 அணைகளைக் கட்டுவதற்கு நேற்று தனது அமைச்சரவையில் ஒப்புதல் அளித்துள்ளது.

எனினும் பிரம்மபுத்திரா நதி பாயும் இந்தியப் பகுதிகளைக் கருத்தில் கொள்ளாமல் புதிதாக 3 அணைகளைக் கட்டுவதற்கு சீனா தயாராகியுள்ளதோடு இவ்விடயம் குறித்து இந்திய தரப்பினருக்குத் தகவல் தெரிவிக்கவில்லை.

எனவே சீன அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதற்கு கண்டனம் தெரிவித்து இன்று பீஜிங்கில் அந்நாட்டு அமைச்சரவையிடம் இந்தியா புகார் மனு அளித்துள்ளது. (அ-5)

# பெண்கள் மீதான வன்முறைக்கு கடும் தண்டனை நிறைவேற்றம்

## ஒப்புதல் அளித்தது மத்திய அரசு

பெண்களுக்கெதிராக குற்றம் புரிந்தவர்களுக்கு கடும் தண்டனை விதிக்க வகை செய்யும் அவசர சட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நீதிபதி ஜே.எஸ்.வர்மா குழுவின் அறிக்கை அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களில் திருத்தம் செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

பெண்களுக்கெதிரான குற்றங்களை தடுக்கும் வகையில் புதிய சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் அவரது இல்லத்தில் மத்திய அமைச்சரவை நேற்றிரவு முன்தினம் கூடி ஆலோசித்தது.

நீதிபதி ஜே.எஸ்.வர்ம குழு அறிக்கையின் அடிப்படையில் சுமார் ஒன்றரை மணி நேரம் மத்திய அமைச்சர்கள் விவாதித்தனர்.

இதன் முடிவில் நீதிபதி வர்மா குழு அளித்த பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்ட மத்திய அமைச்சரவை அவற்றை உடனே செயற்படுத்த வசதியாக இதனை அவசர சட்டமாக பிரகடனம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதன்படி வன்புணர்வு குற்றங்களுக்கு அதிகபட்ச தண்டனை 7 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பெண் வல்லுறவுக்குட்படுத்தி கொல்லப்பட்டாலோ அல்லது பெண்ணுக்கு நிரந்தர பாதிப்பு ஏற்பட்டாலோ குற்றவாளிக்கு குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் முதல் வாழ்நாள் முழுவதும் சிறை அல்லது மரண தண்டனை விதிக்க முடியும் என கூறப்படுகின்றது.

குற்றவாளிக்கு இதுபோன்ற கடும் தண்டனை அளிப்பதன் மூலம் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அமைச்சர் அஸ்வின் குமார் நம்பிக்கை தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்கே சென்று பெண் பொலிஸ் அதிகாரி சாட்சியம் பெற வேண்டும் என்றும் சாட்சியத்தை வீடியோ செய்ய வேண்டியது கட்டாயமில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டியதில்லை.

இதேவேளை, தற்காப்பு முயற்சியில் தாக்குபவரை கொலை செய்தாலும் அந்த பெண்ணை விடுவிக்க இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (அ-5)



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக சட்டப்பேரவைக்கு முதல்வர் ஜெயலலிதா வருகை தந்தபோது நிதியமைச்சரும் அவை முன்னவருமான பன்னீர்செல்வம் மலர்க்கொத்து வழங்கி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# இராமர் பாலத்தை சேது சமுத்திர திட்டத்தால் தகர்க்க முடியாது

## சுப்பிரமணியசுவாமி தெரிவிப்பு

வால்மீகி எழுதிய இராமாயணம் தான் உண்மையான இதிகாசம். ஆனால் கால ஓட்டத்தில் இராமாயணத்தில் உண்மையான இதிகாசம் நமக்கு கிடைக்காமல் போய்விட்டன என சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நம் நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள் இராமாயணத்தை அழித்தனர். இராமாயணத்தின் முழு இதிகாசம் கிடைத்தால் இராமர் ஒரு கற்பனைக் கதாபாத்திரம் இல்லை என்பதை நிரூபிக்க முடியும்.

நம்முடைய இதிகாசங்களில் கூறியிருப்பது அனைத்தும் உண்மை என்பது அறிவியலால் இப்போது



நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இப்போது இலங்கையில் 32 இடங்களை இராமாயணத்துடன் தொடர்புபடுத்தி அவை சுற்றுலா இடமாக மாற்றப்பட்டு வருகிறது.

இதைப்போன்றுதான் இராமேஸ்வரத்தில் இருக்கும் இராமர் பாலமும். இராமர் பாலத்தை தகர்க்க ஹாலந்தில் இருந்து கப்பல் வரவழைக்கப்பட்டது. ஆனால் அதுவும் பழுதடைந்தது. அந்தக் கப்பலை மீட்க வந்த கப்பலும் பழுதடைந்தது.

இப்போது தெரிகிறதா இராமர் பாலம் எவ்வளவு உன்னதமானது என்று? இராமர் பாலம் பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையாகும்.

ஒரு காலமும் சேது சமுத்திரத்தின் மூலமாக இராமர் பாலத்தை தகர்க்க முடியாது என்றார். (அ-5)

# ஒரே நேரத்தில் 2ஆயிரத்து 100 தம்பதிகளுக்கு திருமணம்

சதீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் ஒரே நேரத்தில் 2 ஆயிரத்து 100 ஜோடிகளுக்கு திருமணம் நடைபெற்றது.

முதலமைச்சர் ராமன்சிங் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மணமக்கள் அனைவருக்கும் அவரவர் பாரம்பரிய முறைப்படி திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

இதற்கான மொத்த செலவையும் சதீஸ்கர் அரசே ஏற்றுக் கொண்டதுடன் ஏழ்மையினாலும் வரதட்சனை பிரச்சினை காரணமாகவும் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவும் வகையிலேயே இத்தகைய திருமண நிகழ்ச்சி நடத்தப்படுவதாக ராமன்சிங் தெரிவித்தார்.

பல்வேறு இனத்தைச் சேர்ந்த மணமக்களின் உறவினர்களும் இந்த பிரமாண்டமான திருமண விழாவில் கலந்து கொண்டிருந்தனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலுக்கும் எனக்கும் தனிப்பட்ட பிரச்சினை இல்லை



**- முன்னாள் நடிகையும் தற்போதைய முதலமைச்சருமான ஜெயா.**

கமலுக்கும், எனக்கும் தனிப்பட்ட பகை இல்லை. விஸ்வரூபம் திரைப்படத்தை திரையிடுவதன் மூலம் தமிழகத்தில் சட்டம்,ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே, அப்படத்துக்கு தடை விதிக்கப்பட்டது என்று முன்னாள் நடிகையும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா கூறினார். சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கமல்ஹாசன் நடித்த 'விஸ்வரூபம்' திரைப்படம் தடை செய்யப்பட்டுள்ளதை சிலர் அரசியலாக்குகிறார்கள். தொலைக்காட்சி ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் பலவிதமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக விளக்கம் அளிப்பது அவசியம் என்று கருதுகிறேன். சட்டம் , ஒழுங்கை பராமரிப்பது அரசின் கடமையாகும்.

இப்படம் தொடர்பாக பல்வேறு முஸ்லிம் அமைப்புகளைச் சேர்ந்த 24 பிரிவினர் அரசிடம் மனு கொடுத்து அந்த படத்தை தடை செய்ய வேண்டும் என்றனர். இதற்காக ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தினர். படம் திரையிடப்பட்டால் வன்முறை ஏற்படும் என்று உளவுத்துறை மூலம் அறியப்பட்டது. இதன் காரணமாகவே கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக, முன்னெச்சரிக்கையாக பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரச்சினையில் சில அரசியல் தலைவர்கள் தலையிட்டு தூண்டி விடுகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கை மூலமே வன்முறை போன்ற சம்பவங்களை தடுக்க முடியும் என்பதால் மூலம் 144 பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறிப்பாக படத்தை ஜெயா டி.வி.க்கு விற்பதில் பிரச்சினை ஏற்பட்டதாக விமர்சிக்கப்பட்டது. ஜெயா டி.வி. என்பது அதிமுக ஆதரவு தொலைக்காட்சிதான். அந்த டி.வி.க்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதில் நான் பங்குதாரரும் இல்லை. ஜெயா தொலைக்காட்சி நிறுவனம் விஸ்வரூபம் படத்தை குறைந்த விலைக்கு கேட்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் கமல்ஹாசனுக்கும், எனக்கும் தனிப்பட்ட பகையும் எங்கள் இருவருக்கும் இல்லை. கமல் பற்றி எம்.ஜி.ஆருக்கு நான் கடிதம் எழுதியதாக கூறியுள்ளனர். எம்.ஜி.ஆருக்கு கடிதம் எழுத வேண்டிய தேவையும் இல்லை. அப்படிப்பட்ட நிலையும் எனக்கு வரவில்லை என்றார்.

## ஜெயா ரீவிக்கு உரிமை வழங்கப்படாததுதான் காரணமா...?

இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் விஸ்வரூபம் திரைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டும் திரையிடப்படவில்லை. இதற்கு காரணம், ஜெயா டி.வி.க்கு விஸ்வரூபம் படத்தின் உரிமையை தரவில்லை என்பதா அல்லது மத்திய அமைச்சர் சிதம்பரத்திற்கு ஆதரவாக பேசியதா என்பது தெரியவில்லை. இருப்பினும் விஸ்வரூபம் படம் தடை செய்யப்பட்டதிற்கு அரசியல்தான் காரணம் என விஜயகாந் முழங்கியுள்ளார்.

## சிதம்பரத்தை ஆதரித்தது காரணமா...?

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அடுத்த பொறுப்புக்கு வரப்போவதாக சொல்கிறார்கள். அவர் அந்த உயரிய பொறுப்புக்கு வர வேண்டும் என்பதுதான் எனது ஆசையும் கூட. அவர் விரைவில் அப்பொறுப்புக்கு வர வேண்டும் என நடிகர் கமல்ஹாசன் சமீபத்தில் சென்னையில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

இதுதான் விஸ்வரூம் விவகாரத்தில் கமலுக்கு எதிராக தமிழக அரசு மிகக் கடுமையான நிலையைமேற்கொண்டதற் கான காரணமாக அமைவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.






## இந்துக்களைக் கொச்சைப்படுத்துகிறதா ஆதிபகவன்?

விஸ்வரூபம் படத்தைத் தொடர்ந்து ஆதிபகவன் படத்திற்கும் சர்ச்சை எழுந்துள்ளது. ஆதிபகவன்' படத்தில் இந்துக்களை அவமதிக்கும் காட்சிகள் இருக்கும் என சந்தேகிப்பதாகவும் எனவே படத்தை தணிக்கை குழுவுக்கு அனுப்பும் முன் இந்து அரசியல் கட்சிகள் மற்றும் இந்து அமைப்பினருக்கு திரையிட்டு காட்ட வேண்டும் என்றும் பொலிஸ் அதிகாரியிடம் சட்டத்தரணிகள் புகார் அளித்துள்ளனர்.

இது குறித்து படத்தின் தயாரிப்பாளர் அன்பழகன் கூறுகையில், படம் யாருக்கும் எதிரானதல்ல. ஆதிபகவன் ஒரு நேர்மையான பொழுதுபோக்குப் படம். மதக் காட்சிகள் எதுவும் இதில் இல்லை. 'ஆதி பகவன்' என்பது கதையில் வரும் இரு பாத்திரங்களின் பெயர். திருக்குறளில் இடம்பெற்ற 'ஆதிபகவன்' வார்த்தையையே படத்துக்கு தலைப்பாக்கி இருக்கிறோம். ஆக்ஷன், காதல் கலந்த படம். இப்படத்தை முடக்க பார்க்கிறார்கள். காரணமே இல்லாமல் எதிர்க்கின்றனர். சுயநலத்துக்காகவும், விளம்பரத்துக்காகவும் எதிர்ப்பு கிளப்புகின்றனர். இந்தப் படம் பெப்ரவரியில் திட்டமிட்டபடி வெளியாகும் என்றார்.

ஜெயம் ரவி, நீது சந்திரா ஜோடியாக நடித்துள்ள படம் 'ஆதிபகவன்'. இப்படத்தை அமீர் இயக்கியுள்ளார். திமுக எம்எல்ஏ ஜெ.அன்பழகன் தயாரித்துள்ளார்.


படம் : சரவணப் பொய்கை

விஸ்வரூபம் தடைசெய்யப்பட்ட பின் நடிகர் கமல்ஹாசன் சென்னையி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களில் சில வருமாறு,

### சொத்துக்கள் மீது கடன்

இந்த படத்தின் மீது முழு நம்பிக்கை வைத்து, நிறைய முதலீடு செய்து இருக்கிறேன். முதலீடு செய்த பணம் திரும்ப கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன். மற்றவர்களைப் போல் நான் நிறைய சேர்க்கவில்லை. இருக்கிற சொத்துக்களை விட, அதிகம் கடன் வாங்கி முதலீடு செய்து இருக்கிறேன்.ரசிகர்கள் மீதும், படத்தின் மீதும் உள்ள நம்பிக்கையில், சொத்துக்களை வைத்து விளையாடி இருக்கிறேன். சரியான நேரத்தில் பணத்தை கட்டவில்லை என்றால், சொத்துக்களை தனதாக்கிக் கொள்ளலாம் என பணம் கொடுத்தவருக்கு எழுதிக் கொடுத்துள்ளேன்.

படம் இன்னும் தள்ளிப்போனாலோ அல்லது முடக்கப்பட்டாலோ, நான் எழுதிக் கொடுத்துள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் பெயருக்கு மாற்றிக் கொள்வார்கள். அதன்பிறகு, இந்த வீடு எனது அல்ல.இந்த வீட்டில்தான் நான் நடனம் பயின்றேன். பல தடவை பத்திரிகையாளர்களை இந்த வீட்டில்தான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். நீதிமன்றத்தில் தீர்ப்பு எப்படி வருமோ தெரியாது. இதுவே இந்த வீட்டில் நான் நடத்தும் கடைசி பத்திரிகையாளர் சந்திப்பாக கூட இருக்கலாம். என்ன இவன், இதை சிரித்துக் கொண்டே சொல்கிறானே என்று நீங்கள் நினைக்கலாம். என் குடும்பமே அப்படித்தான். எனக்கு பணம் முக்கியம் அல்ல.

### நாட்டின் ஒற்றுமை

தனி மனிதனின் பணத்தை விட, நாட்டின் ஒற்றுமைதான் முக்கியம் என்று நீதிபதி சொன்னது, என் மனதை உறுத்தியது. என் சொத்துக்களை எடுத்தால்தான் நாட்டில் ஒற்றுமை ஏற்படும் என்றால், தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்.நான் குழந்தையாக நடிகையர் திலகம் (சாவித்ரி) கையில் இருந்தவன். காதல் மன்னன் ஜெமினிகணேசன் கையைப்பிடித்து நடை பயின்றவன். நடிகர் திலகம் சிவாஜியின் மடியில் அமர்ந்தவன். 'ஆனந்த ஜோதி' படத்தில் எம்.ஜி.ஆரின் தோளில் ஏறி அமர்ந்தவன். அப்படி வளர்ந்த பிள்ளை நான். எனக்கு பயம் இல்லை.

### 30 -60 கோடி வரை இழப்பு

விஸ்வரூபம் படத்துக்கு தடை விதிக்கப்பட்டதால் எனக்கு ரூ.30 முதல் ரூ.60 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. என் படத்தில் முஸ்லிம்களை மோசமாக காட்டவில்லை.யாருடைய உணர்வுகளையும் நான் புண்படுத்தவில்லை. இந்நாட்டில் வாழும் அனைவரும் என் சகோதரர்கள். தவறான தகவல்களால்தான் இந்த சர்ச்சை எழுந்திருக்கிறது. இந்த நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று நான் கோபத்தில் கூறி விட்டேன். அதற்காக அப்படி செய்வேன் என்று அர்த்தமில்லை. அதே சமயம், இதேபோன்ற பிரச்சினைகள் மீண்டும் ஏற்படுமானால், நான் நிச்சயமாக நாட்டில் இருந்து வெளியேறுவேன்.

### சோலை ஆவேன்

தனி மனிதன்தானே, வீழ்த்தி விடலாம் என்று நினைக்க வேண்டாம். நான் ஒரு விதை விதைத்து இருக்கிறேன். அது மரமாகும். அந்த மரத்தில் பல பறவைகள் வந்து அமரும். அந்த பறவைகள் பல விதைகளை விதைக்கும். தனி மரம் தோப்பாகும். சோலையாகும். அதில், சுதந்திர காற்று வீசட்டும்."இவ்வாறு கமல்ஹாசன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தந்தை தம் பிள்ளைக்கு விட்டுச் செல்லும் சொத்துக்களில் நல்லொழுக்கத்தைவிட மேலான சொத்து எதுவும் கிடையாது. -நபிகள் நாயகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உலக நாடுகளின் அழுத்தம் இலங்கை மீது அதிகரிப்பு!

## மாற்றம் இல்லையேல் மண்கௌவல்தான்-பாஸ்கரா

உரிமைக்கு குரல் கொடுத்தோரின் குரல் வளையினை நசுக்க நசுக்க உலக நாடுகள் இலங்கையினை நசுக்க ஆரம்பித்துள்ளன என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், உதாரணமாக வன்னி நிலைவரங்களை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீதான அழுத்தம் மற்றும் உணர்வுகளை வெளியிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல், கைது என நீடித்த பட்டியலின் உச்சக்கட்டமாக உரிமைக்காக குரல் கொடுத்தோர் தமது தாளத்திற்கு ஏற்ப செயற்படாதோர், நிதி, நிர்வாகம் என சகலதையும் சார்ந்தோர் நசுக்கப்பட்டு இறுதியாக பிரதம நீதியரசர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு, மதவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் ஊக்குவிக்கும் செயற்பாடு தண்டவமாடிகொண்டிருக்கையில், உலக நாடுகள் தமது தாளத்தை மாற்ற தொடங்கியுள்ளன.

உதாரணமாக அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தமது அதிருப்தியை வெளிப்படையாகவே வெளியிட்டுள்ளன.

உலகம் உருண்டை என்பதற்கு அமைய முன்பு இலங்கைக்கு சார்பாக செயற்பட்ட உலக நாடுகள் இன்று தமது நிகழ்ச்சி நிரலை மாற்றியமைத்து இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும்போது, தமிழ்த் தரப்பு தமது உள்ளார்ந்த கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து உரிமைகளைபெறவழியமைக்க வேண்டும்.

இவ்வேளையில் இலங்கைப் பொருளாதாரமானது வீழ்ச்சியடைந்து கொண்டு மக்களின் வாழ்வாதாரமே மோசமடைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், இலங்கை மீதான பொருளாதார தடை ஏற்படாதென்றும் ஏற்பட்டால் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்றும் அ[illegible] கூறுவ தானது இலங்கை மீதான பொ[illegible]தாரத் தடைப் பயம் தொற்றிக் கொண்[illegible]பது புரிகின்றது.

அதற்கான புறச்சூழ்[illegible]லைகளை உடனடியாக நீக்காதவிடத்து [illegible]ங்கை மீதான உலக நாடுகளின் அழுத்[illegible] உச்சமடையும்.

எனவே, மாற்றங்க[illegible] ஏற்படுத்தப்பட வேண்டிய வேளை மா[illegible]ங்கள் ஏற்படாது விடில், மறுமலர்ச்சி என்[illegible] மண் கௌவும் நிலை ஏற்படும் எனத் தெ[illegible]வித்தார். (செ-11)

## எங்கள் வாழ்வில் நிஜமாகும் தொடர் நாடக கற்பனைகள்

பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவது எங்கள் பண்பாட்டுக்கு உடன்பாடானதா? என்ற வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் பாலியல் கல்வி என்பது இன்னமும் பெற்றோர் மத்தியில் வெறுப்பானதாகவே இருக்கின்றது.

அதேநேரம் இளம் சமூகம் எதிர்கொள்கின்ற பாலியல் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணம் பாலியல் கல்வி இன்மை என்பது மருத்துவர்களினதும் உளவியலாளர்களினதும் கருத்தாகும்.

பாலியல்சார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது எங்கள் இளம் சமூகத்துக்கு சவாலாக உள்ளதென்ற உண்மையை மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இல்லை.

ஆக, எங்கள் இளம் சமூகம் எதிர்கொள்கின்ற பாலியல் பிரச்சினைகளுக்கு தீர்வுதான் என்ன என்ற கேள்வி எழுகின்றபோது பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துங்கள் என ஒரு தரப்பினர் கூறலாம்.

பாலியல் கல்வியை அறிமுகப்படுத்தல் என்பதற்கு பலத்த எதிர்ப்பு எழும் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே, இவ்விரு முரண்பாட்டுக்கும் இடையில் பாலியல் கல்வியை முன்வைப்பதென்பதில் மேலைநாட்டு நடைமுறைகளை பின்பற்றுவது எங்கள் இளம் சமூகத்தில் பலத்த ஆபத்துக்களை ஏற்படுத்தி விடும்.

எனவே தமிழர்களின் பண்பாட்டியலில் பாலியல் என்பது தெய்வீகத்தன்மையுடன் ஒழுக்கவியல் கோட்பாட்டால் வரையறுக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கவும் அறியவும் தவறியுள்ளோம்.

பத்தினித் தெய்வமாக விளங்கும் கண்ணகி வழிபாடு முதல் ஆலய கோபுரங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விக்கிரகங்கள்வரை பாலியல் என்ற உடலியல் தேவையை ஆற்றுப்படுத்துகின்ற -அமைதிப்படுத்துகின்ற பணியை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

தனித்து பாலியல் கல்வியை மட்டும் பயன்படுத்த முற்படுகின்றபோது அது எங்கள் பண்பாட்டின் மூலவேராக இருக்கக்கூடிய ஒழுக்கவியலை அறுத்துவிடும்.

எனவே, எங்கள் சமூகத்தில் முதலில் ஒழுக்கத்தையும் ஆன்மீகத்தையும் போதிக்க வேண்டும். இத்தகைய போதனைகள் ஒவ்வொரு ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் கட்டாயமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.


ஒருகாலத்தில் எங்களிடம் இருந்த விரத நடைமுறைகளும் புராணபடன விரிவுரைகளும் திருமுறை முற்றோதல்களும் தியானங்களும் யோகாசனங்களும் பாலியல் தொந்தரவுகளுக்கு நல் மருந்தாக இருந்தன.

ஆனால் இன்றோ; தொடர் நாடகங்கள், அதில் நடக்கும் திருமணங்கள், மணவறையில் வைத்து மாப்பிளையை மாற்றும் காட்சிகள் என்ற கற்பனைப் பாத்திரங்கள் எம் மனங்களில் கடுமையாகப் பதிந்து கொள்ள, எங்கள் நிஜ வாழ்க்கையிலும் நாடக காட்சிகள் அரங்கேறுகின்றன.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரேவழி ஒழுக்கக் கல்வியும் ஆத்மீகக் கல்வியும் தான்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சேவற்கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்



அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள்- நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விளைவு

விளையுமிச்சையெல்லாம்வெறுத்தேயெஞ்ஞான்றும்
இளையோன் றிருப்பாத மேத்த- மழைபோற்
கருணை வருமே கருதிலங்கை நாட்டீர்
தருண மிதுகண்டீர் தான்

## இலவசத் தேவார பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் வட இலங்கை சங்கீத சபையினதும், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்திற்கு அமைய யாழ். சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் சனி, ஞாயிறு கிழமைகளில்பிற்பகல் 4.30 மணி தொடக்கம் இலவச பண்ணிசைப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

தேவார இசைமணி, கலாபூசணம், துறைசை ஆதின திருமுறைத்தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனால் இப்பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது.

இப்பயிற்சி வகுப்பில் ஆண்; பெண் ; இருபாலாரும் பெரியோர்கள்; மாணவர்கள் ஆகியோர் பங்கு பெற்ற பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (செ)

## உண்மையை உரைப்பவர்களில் நாமும் ஒருவராவோம்

நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று இயேசு கூறும் இறைவார்த்தைப் பகுதி இன்று நற்செய்தியில் நமக்குத் தரப்படுகின்றது. 32 ஆண்டுகளுக்கு முன் எல்சல்வடோர் நாட்டில் சான் சல்வடோர் நகரில் பேராயராய் இருந்த ஒஸ்கார் றொமேரா 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 காலை 7 மணியளவில் திருப்பலி நிறைவேற்றிக்கொண்டிருக்கும் போது படை வீரன் ஒருவன் குறிவைத்து சுட்டான். ஒரேயொரு குண்டு பேராயரின் இதயத்தில் பாய்ந்தது. திருப்பலியை

### பரமபிதா காட்டிய பாதை

நிறைவு செய்யாமலேயே பீடத்தின் மீது சாய்ந்து பலியானார் அவர். ஒஸ்கார் றொமேரா இறந்த பத்து ஆண்டுகளில் திருத்தந்தையாக இருந்த இரண்டாம் ஜான்போல் ஒஸ்கார் றொமேரா இறைவனின் அடியார் என்ற நிலைக்கு உயர்த்தினார்.

ஒஸ்கார் றொமேரா பேராயர் கொலை செய்யப்படுவதற்கு என்ன காரணம்? எனக்கூர்ந்து நோக்கினால் கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் பேராயர் ஒரு பொதுக்கூட்டத்தில் மக்களை அச்சுறுத்தும் வண்ணம் சுற்றிவளைத்து ஆயுதம் தாங்கி நின்றிருந்த வீரர்களைப் பார்த்து சகோதரர்களே! இங்கு நீங்கள் சூழ்ந்திருக்கும் இந்த மக்கள் மத்தியில்தான் நீங்கள் பிறந்து வளர்ந்தீர்கள். இவர்கள் உங்கள் சகோதரர்கள். உங்கள் சகோதரர்களையே நீங்கள் கொன்று வருகிறீர்கள். மக்களைக் கொல்லும்படி உங்களுக்குத் தரப்படும் எந்த ஆணையும் இறைவன் தந்துள்ள கொலைசெய்யாதே என்ற அந்தக்கட்டளைக்கு உட்பட்டதே.

இறை கட்டளையை மீறி உங்களுக்குத் தரப்படும் நெறியற்ற ஆணைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியத் தேவையில்லை. இந்த நெறியற்ற ஆணைகளுக்கு கீழ்ப்படிவதைவிட உங்கள் மனச் சாட்சிக்குக் கீழ்ப்படியுங்கள். இந்த அராஜகத்தைப் பார்த்துக்கொண்டு திருச்சபை மௌனமாய் இராது. கடவுளின் பெயரால் தினமும் விண்ணைநோக்கிக் குரல் எழுப்பும் இந்த மக்கள் பெயரால் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் உங்கள் ஆயர் என்ற முறையில் ஆணையிடுகிறேன் உங்கள் அராஜகத்தை நிறுத்துங்கள் என்று கூறினார்.

ஆயர் எடுத்துரைத்த உண்மைகள் மிகவும் கசந்திருக்கவேண்டும். அதனால் அடுத்தநாள் காலை அந்தப்படைவீரர்களில் ஒருவன் ஆயரது உயிரைப் பறித்தான். இன்று உலக அரங்கில் பல்வேறு நிலைகளில் அவரை உண்மைக்காக, நீதிக்காக உயிர்துறந்த ஒரு தலைவராகப் போற்றுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டில் மனித சமுதாயத்தை நல்வழி நடத்திய பல தலைவர்களில் ஒருவராக பேராயர் றொமேராவைக் கருதுகின்றனர். பேராயர் றொமேரா ஓர் இறைவாக்கினர். இறைவனின் வார்த்தையை, அது கூறும் உண்மைகளைக் கலப்படமில்லாமல் எந்த வித அலங்காரமும் இல்லாமல் எடுத்துக் கூறியவர்.

மார்ட்டின் லூதர் கிங் 60 களில் அமெரிக்காவில் இறைவாக்கை எடுத்துரைத்தார். குண்டடிபட்டு இறந்தார். இறைவாக்கினர் பேசுவது பொதுவாக எல்லோரையும் சங்கடப்படுத்தும் என்பதால் அவருக்கு வரவேற்பு இருக்காது. இந்த எண்ணத்தை இயேசு இன்றைய நற்செய்தியில் தெளிவாகச் சொல்கிறார்.

இயேசு தான் வளர்ந்த ஊரான நாசரேத்துக்கு ஒரு சில உண்மைகளைச் சொல்ல ஆரம்பித்தார். அவர்கள் எல்லோருக்குமே தெரிந்த பல நெருக்கமான, அதேநேரம் சங்கடமான உண்மைகளைச் சொன்னார் இயேசு.

உண்மை உள்ளத்தை ஊடுருவிய போது பலர் மனம் திருந்துகின்றனர். பல இடங்களில் உண்மைகள் சொல்லப்பட்டபோது அந்த உண்மைகளை ஊமையாக்க உண்மை சொன்னவர்களை ஊமையாக்க அவர்கள் உயிரைப் பறித்த சம்பவங்கள் பல உண்டு.



இன்று நற்செய்தியிலும் இயேசுவுக்கு அந்த நிலைதான். இயேசு சொன்ன உண்மைகளைக்கேட்க முடியாமல் அவர்கள் கோபம் கொலை வெறியாகிறது. இந்தமுறை இயேசு தப்பித்துக் கொள்கிறார். அவர் நம்மைப் போல் ஒரு சராசரி மனிதராய் இருந்திருந்தால் இந்த

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

ஒரு அனுபவம் எனக்குப்போதும். நான் ஏன் இந்த ஊருக்கு உண்மைகளைச் சொல்லி ஏச்சும் பேச்சும் பெறவேண்டும். விட்டிருந்தால் இவர்கள் நம்மை இன்று கொன்றிருப்பார்கள். தேவையில்லை இவர்கள் சகவாசம் என்று இயேசு ஒதுங்கியிருக்கலாம். ஆனால் அன்று இறைவாக்குரைக்கத் தொடங்கிய அவரது பணி கல்வாரி பலியில்தான் முடிந்தது.

உலகத்தின் கண்களைக் கட்டிவிட்டதாய் நினைத்துக்கொண்டு நம் கண்களை நாமே கட்டிக்கொண்டு தவறுகள் செய்யும்போது உண்மை வந்து நம் கண் கட்டை அவிழ்க்கும். கட்டவிழ்க்கப்பட்டதும் அந்த ஒளியை உண்மையைக் காணமுடியாமல் நம் கண்கள் கூசி நிற்கும். உண்மை நம்மைத் தோலுரித்துக் காட்டும்.

உண்மையின் பின் விளைவுகளை இப்படி நாம் பட்டியலிடும்போது ஒரு முக்கியமான அம்சத்தையும் நினைத்துப்பார்க்கவேண்டும். உண்மை விடுவிக்கும். உண்மை மீட்பைத்தரும். எனவே உண்மையின் ஒளியில் எம் வாழ்வை மீட்பின் பாதையில் நகர்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் உலகக் கிண்ணம் – 2013

# இலங்கை முதற் போட்டியில் நடப்புச் சம்பியனை வீழ்த்தியது



இறுதிப் பந்தில் ஆறு ஓட்டங்களைப் பெற்று நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை வீழ்த்திய சந்தோசத்தில் சிறகடிக்கும் இலங்கை மகளிர் அணி.

மகளிர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்து தனது முதல் ஆட்டத்தில் இலங்கையிடம் அதிர்ச்சி தோல்வி கண்டது. இந்தியாவில் மும்பை பிரட்போர்ன் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இறுதிப் பந்தில் ஆறுஓட்டங்களை பெற்று இலங்கை வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கைப் பெண்கள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பம் முதல் இலங்கையின் சிறப்பான பந்துவீச்சுக்குத் தடுமாறிய இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களுடன் தடுமாறியது. பின்னர் வந்த வீராங்கனைகள் ஓரளவுக்கு அணிக்கு பலம் சேர்த்தனர். இறுதி 10 ஓவர்களில் 94 ஓட்டங்கள் குவிக்கப்பட, இங்கிலாந்துப் பெண்கள் அணி ஓரளவு சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜென்னி கண் 51, அமி ஜோன்ஸ் 41, ஹீதர நைட் 38, அர்ரன் பிரின்டில் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கைப் பெண்கள் அணி சார்பாக இஷானி கௌஷல்யா, சாமனி செனவிரத்ன, ஷஷிகலா சிறிவரதன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சன்டமல்லி டொலவத்த ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து இறுதிப் பந்தில் வெற்றி இலக்கை அடைந்தது.

மிகச்சிறப்பான ஆரம்பமாக முதலாவது விக்கெட்டுக்கு 103 ஓட்டங்களைக் குவித்த இலங்கை ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களை இழந்து 5 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் பின்வரிசை வீராங்கனைகள் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதி ஓவரில் இலங்கை அணியின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரின் 2 ஆவது பந்தில் சிக்ஸர் அடித்த கௌசல்யா, 4 ஆவது பந்தில் ரன் அவுட்டானார். ஆட்டத்தின் இறுதிப் பந்தில் இலங்கையின் வெற்றிக்கு ஒரு ஓட்டம் தேவைப்பட்ட நிலையில், அந்த அணியின் சுரஞ்ஜிகா சிக்ஸர் அடித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

துடுப்பாட்டத்தில் இலங்கைப் பெண்கள் அணி சார்பாக சாமரி அத்தப்பத்து 72 பந்துகளில் 62 ஓட்டங்களையும், அதிரடியாக ஆடிய இஷானி கௌஷல்யா 41 பந்துகளில் 56 ஓட்டங்களையும், யசோதா மென்டிஸ் 46 ஓட்டங்களையும், ஷஷிகலா சிறிவர்தன 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்துப் பெண்கள் அணி சார்பாக கத்தரின் பிருன்ட், ஜோர்ஜியா எல்விஸ், அர்ரன் பிரின்டில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகியாக இஷானி கௌஷல்யா தெரிவானார்.

## இப்போட்டியில் பெறப்பட்ட சாதனைகள்

- ✔ இதற்கு முன்னதாக இலங்கை பெண்கள் அணி, இங்கிலாந்துடன் 28 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தாலும், 29 ஆவது ஆட்டத்தில்தான் முதல் வெற்றியை பெற்றுள்ளது.
- ✔ மகளிர் உலகக் கோப்பையில் ஓர் அணி ஒரு விக்கெட் வித்தியாசம் மற்றும் இறுதிப் பந்தில் வெற்றி பெறுவது இதுவே முதல்முறை.
- ✔ மகளிர் உலகக் கிண்ண வரலாற்றில் இதுவரை நடைபெற்றுள்ள 79 ஆட்டங்களில் 190 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை ஓர் அணி எட்டுவது இது 2 ஆவது முறை. முன்னதாக 2009 உலகக் கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து 190 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை எட்டியுள்ளது.
- ✔ இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 5 சிக்ஸர்களை அடித்தது. இதுதான் உலகக் கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிராக ஓர் அணி அடித்த அதிகபட்ச சிக்ஸர்கள்.

# ஆஸி.அணியின் புதிய பயிற்றுவிப்பாளர்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து ஜஸ்டின் லாங்கர் பதவி விலகியதை அடுத்து மைக்கல் டி வெனுட்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்காக ஏழு சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மாத்திரம் டி வெனுட்டோ விளையாடியிருந்தார்.

அனுபவம் மிக்க மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களான மைக்கல் ஹசி மற்றும் ரிக்கி பொண்டிங் ஆகியோர் அண்மையில் ஓய்வுபெற்றுள்ள நிலையில், டி வெனுட்டோ பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்றுள்ளார்.

# பாக்.– தெ.ஆ.டெஸ்ட் தொடர் ஆரம்பம்

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாப்பிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் ஸ்மித் 24 ஓட்டங்களும், அல்விரோ பீட்டர்சன் 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய ஹாசிம் ஆம்லா 37 ஓட்டங்களும், ஜக் காலிஸ் 50 ஓட்டங்களும், டிவிலியர்ஸ் 31 ஓட்டங்களும், டு பிளசிஸ் 41 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 253 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் சார்பில் மொகமது ஹபிஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாட தொடங்கியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய முகமது ஹபிஸ் 6 ஓட்டங்களும், நசிர் ஓட்டங்களின்றியும் களத்தில் உள்ளனர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்துள்ளது.


## ஸ்மித் சாதனை

பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியில் தலைவராக செயற்பட்ட தென்னாரிக்காவின் ஸ்மித், டெஸ்ட் வரலாற்றில் 100 போட்டிகளுக்கு தலைமைதாங்கிய முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார். இவரது பிறந்த நாளான அன்று இவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இதுவரை அதிக டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக இருந்தவர்கள் பட்டியல்:

| வீரர் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | கை.விடப்பட்டது |
|---|---|---|---|---|---|
| ஸ்மித் (தெ.ஆ.,) | 99 | 47 | 26 | 26 | 0 |
| பார்டர் (ஆஸி.,) | 93 | 32 | 22 | 38 | 1 |
| பிளமிங் (நியூசி.,) | 80 | 28 | 27 | 25 | 0 |
| பாண்டிங் (ஆஸி.,) | 77 | 48 | 16 | 13 | 0 |
| லாய்டு (மே.இ.,) | 74 | 36 | 12 | 26 | 0 |

## 13,000 ஓட்டங்களைக் கடந்தார் கலிஸ்



பாகிஸ்தானுக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீர் ஜக் கலிஸ் டெஸ்ட் போட்டிகளில் 13,000 ஓட்டங்களைக் கடந்தார். தனது 160ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் கலிஸின் டெஸ்ட் சராசரி 56.73.

இதுவரை 44 சதங்கள், 58 அரை சதங்களை பெற்றுள்ளார்.

# மும்பை மொடல் அழகி, பிரபல பாக்.கிரிக்கெட் நடுவருக்கெதிராகக் கொடுத்த பாலியல் முறைப்பாட்டை 6 மாதங்களின் பின் வாபஸ்பெற்றார்



மும்பையை சேர்ந்த மொடல் அழகி லீனா கபூர், 56 வயதான பிரபல பாகிஸ்தான் கிரிக்கெட் நடுவர் ஆசாத் ரவூப் மீது கடந்த ஓகஸ்ட் மாதம் பாலியல் புகார் ஒன்றைக்கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். தன்னுடன் பலமுறை உல்லாசமாக இருந்துவிட்டு திருமணம்செய்து கொள்ள மறுக்கிறார், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மும்பை ஓஷிவாரா பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப் படங்களையும் வெளியிட்டார். லீனா கபூரின் குற்றச்சாட்டை ஆசாத் ரவூப் மறுத்தார். இந்த நிலையில் 6 மாதங்களுக்கு பிறகு நடுவர் ஆசாத் மீது கொடுத்த புகாரை, ஓஷிவாரா பொலிஸ் நிலையத்திற்கு நேரில் சென்று லீனா கபூர் எழுத்துபூர்வமாக வாபஸ் பெற்றுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஆசாத் ரவூபுக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. பிரச்சினையில் இருந்து விடுபட முயற்சிக்கிறேன். இந்த விவகாரத்தால் நான் வேலைவாய்ப்பு உட்பட பலவற்றை இழந்து விட்டேன். இனி மேலும் எந்த சர்ச்சையிலும் சிக்க விரும்பவில்லை என்றார்.

# மீண்டும் வருகிறார் ரொஸ் ரெய்லர்



இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டிகளில் விளையாடவுள்ள நியூசிலாந்து அணிக்கு முன்னாள் அணித் தலைவர் ரொஸ் ரெய்லர் அழைக்கப்பட்டுள்ளார்.

தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து தென்னாபிரிக்க தொடரில் இருந்து ரொஸ் ரெய்லர் சுயவிருப்பின் பேரில் விலகியிருந்தார்.

இதனால் தென்னாபிரிக்காவுடனான தொடரில் நியூசிலாந்து பல சவால்களை எதிர்நோக்கியிருந்தது.

இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் சர்வதேச இருபதுக்கு-20 போட்டியுடன் எதிர்வரும் நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்;
## திருநெல்வேலி சி.சி.அணி முன்னிலை



ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 4வது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணி தெரிவுநிகழ்வில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 14 புள்ளிகளை பெற்று முன்னிலையில் உள்ளது.

யாழ்.ஜொனியன்ஸ் அணி 11.8 புள்ளிகளை பெற்று 2-வது இடத்திலும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.அணி 8.4 புள்ளிகளைப் பெற்று 3வது இடத்திலும், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ் அணி 8.2 புள்ளிளை பெற்று 4வது இடத்திலும், அரியாலை சென்றல் 6.7 புள்ளிகளை பெற்று 5-வது இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 5.9 புள்ளிகளை பெற்று 6 வது இடத்திலும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி5.4 புள்ளிகளை பெற்று 7-வது இடத்திலும் மானிப்பாய் பரிஸ் அணி, யாழ்.சென்றல் அணிகள் 2.5 புள்ளிகளைப் பெற்று 8-வது இடத்திலும், யங்ஸ்ரார்அணி2.2புள்ளிகளை பெற்று 9-வது இடத்திலும்,சென்றலைட்ஸ்புளூஸ்அணி2.1புள்ளிகளை பெற்று 10வதுஇடத்திலும் உள்ளன.

இப்போட்டியில் முதலாவது இடத்தை பெறும் அணிக்கு ஜோர்ச் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணமும் 10 ஆயிரம்பணப்பரிசிலும்வழங்கப்படும்.

இவ் வெற்றிக்கிண்ணத்தை 2010,2011 ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக அணியும், 2012 ஆண்டு கே.சீ.சீ.சீ அணியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக் கது.

மேலும் இந்நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று அணிகளும் 2014 ஆண்டில் நடைபெற இருக்கும் முக்கோணப் போட்டிக்கு தகுதி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா, தென் கொரியா அணிகள் மோதிய டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் துவக்க விழாவில் பங்கேற்று, போட்டியை கண்டுகளித்த இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா.



# ஜோன் ஹரிக்கு பீரிஸ் வாழ்த்து

அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் ஜோன் ஹரி இலங்கையுடன் நெருங்கிய தொடர்புளைப் பேணுவார் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எஸ்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு உறவுகளை சுமுகமான முறையில் பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் ஹரிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் அமெரிக்காவுடன் முழு ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கான தனது விருப்பத்தையும் தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துக்கள் அடங்கிய கடிதத்தினை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் ஹரிக்கு அனுப்பி வைத்துள்ளார். (செ-11)

# 10 ரூபாய் சேஷ்டை

இளம் பாடசாலை ஆசிரியை அவர் தம் தாயாருடன் இருக்கும்போது தனியார் பேருந்து நடத்துநர் ஒருவர் பேருந்தில் தன் 10 ரூபாய் சேஷ்டையினை அரங்கேற்றி உள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணம் செய்த தனியார் பேருந்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; நேற்று காலை வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணம்செய்த தனியார் பேருந்தில் கிளிநொச்சியை சேர்ந்த இளம்பாடசாலை ஆசிரியையும் அவர் தாயாரும் யாழ்ப்பாணம் நோக்கி செல்வதற்காக ஏறியுள்ளனர். இருவருக்கும் 95 ரூபாய்படி 190 ரூபாய் பணம் பயணக் கட்டணமாக கூறப்பட 200 ரூபாய் ஆசிரியரால் கொடுக்கப்பட்டது. மிகுதி பத்து ரூபா பணத்தை நடத்துநர் உடனடியாக கொடுக்கவும் உள்ளார்.

குறித்த ஆசிரியையும் தாயாரும் யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கும்போது வேறொரு பத்து ரூபாய் நாணயத்தாளில் தனது தொலைபேசி இலக்கத்தினை எழுதி தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு வற்புறுத்தி அந்த இளம் ஆசிரியையிடம் நடத்துநர் கொடுத்துள்ளார்.

இதனால் திகைப்படைந்த ஆசிரியை இது தொடர்பில் தனது தாயாரிடம் தெரிவிக்க, தாயாரும் பேருந்து பயணிகளும் சேர்ந்து குறித்த நடத்துநரை சம்பவம் தொடர்பில் எச்சரித்து விட்டுள்ளனர்.

நாணய தாள்களில் இவ்வாறு பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை எழுதுவது சட்டப்படி குற்றசெயலாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-254)

# இலங்கைக்கு எதிரான...

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22 -வது கூட்டத்தொடரில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மீது மற்றொரு தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப்போவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூர் கொழும்பில் வைத்து கடந்த 28 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

அத்துடன்இலங்கை மீதான இந்தப் புதிய தீர்மானத்திற்கு இந்தியாவும் ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22 -வது கூட்டத் தொடரில் இலங்கை மீது கொண்டுவரப்படவுள்ள புதிய தீர்மானத்துக்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என அந்நாட்டின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய பணியக அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் கடந்த ஆண்டு இடம் பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19வது கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கியிருந்த பிரித்தானியா ;இப்போதும் ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூறப்பட்ட வேண்டும் என அமெரிக்கா,பிரித்தானியா, கனடா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளும், சர்வதேச மனித வுரிமை அமைப்புக்களும் தொடர்ந்து வலி யுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(மேலும் ஒரு செய்தி உள்ளே)

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்...

செல்வி ரி.நிஷாந்தி (யா/வட்டு இந்துக் கல்லூரி- நவோதயா), செல்வி கே.கலைவாணி (யா/வட்டு. இந்துக் கல்லூரி-நவோதயா), செல்வி ஏ. மதினி(யா/வட்டு. இந்துக் கல்லூரி-நவோதயா), திருமதி பி.முகுந்தன் (யா/விக்டோரியா கல்லூரி), திருமதி பி.சுதர்சினி (யா/விக்டோரியா கல்லூரி), திருமதி எஸ்.ஜெகதீஸ்வரி (யா/ விக்டோரியா கல்லூரி), செல்வி வி. ராதிகா (யா/ விக்டோரியா கல்லூரி), செல்வி எஸ்.மைதிலி (யா/ விக்டோரியா கல்லூரி), எம்.பரமேஸ்வரன் (யா/ அராலி இந்துக் கல்லூரி), திருமதி எஸ். கிருபாகரன் (யா/ அராலி இந்துக் கல்லூரி), திருமதி எஸ்.சந்திரகுமார் (யா/ அராலி இந்துக் கல்லூரி), திருமதி ஏ.ஆனந்தவாசன் (யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), என்.செல்வகுமார் (யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்),

திருமதி ஜே.சந்திரனிபா (யா/ சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), திருமதி ஜி.தினேஷ்குமார் (யா/ சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), திருமதி எஸ்.மேனகை (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), திருமதி ஜே.ஜீவமலர் (யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), எஸ்.றோகீசன் (யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்),திருமதி எஸ். லிங்கேஸ்வரன் (யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), என்.சுஜீவன் (யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்),

திருமதி எஸ்.சுபேசன் (யா/ வட்டு. மத்திய கல்லூரி), திருமதி ரி.தேவிகா (யா/ வட்டு. மத்திய கல்லூரி), செல்வி பி.சுரேஜினி (யா/ வட்டு. மத்திய கல்லூரி), திருமதி ரி.துஷ்யந்தி (யா/ சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை), செல்வி என்.மஞ்சுளா (யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம்), எம்.ஏ.முருகதாசன் (யா/தொல்புரம் அ.மி.த.க.பா), திருமதி கே.பிரதீபன் (யா/ தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), திருமதி ரி.அகிலன் (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), திருமதி கே. கிருஷ்ணலிங்கம் (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), திருமதி வி.பாலசுப்பிரமணியம் (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), செல்வி என்.அருள்வாணி (யா/பண்டத்தரிப்பு றோ.க.த.க.பா),

திருமதி கே.அருள்ராஜ் ( யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை), திருமதி என்.கிருஷ்ணவேணி (யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித் தியாசாலை), திருமதி ஜே. அமிர்தநிரஞ்சன் (யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), செல்வி எஸ்.சசிகலா (யா/இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), செல்வி ரி.துராஜினி (யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), திருமதி எஸ்.ஜெயஜனனி (யா/இள வாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியா லயம்), எஸ். பிரதீபன் (யா/சென். ஹென்றீஸ் கல்லூரி), திருமதி எஸ். திருநிறைச்செல்வன் (யா/சென்.ஹென்றீஸ் கல்லூரி), திருமதி வி. சித்ரூபினி (யா/ சென். ஹென்றீஸ் கல்லூரி), திருமதி ஏ.ஜோய் அன்ரன்வேணி (யா/மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்),

ஜே.அனுஸ்டாதாஸ் (யா/மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்), பி.ரமணாகரன் (யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்), செல்வி வி.கோடீஸ்வரி (யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்), என்.மாதவன் (யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்), திருமதி எஸ்.சுதாகரன் (யா/மாதகல் நுனசை வித்தியாலயம்), திருமதி எஸ்.நாராயணி (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி),எம்.ஸ்ரீதங்கராஜா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை),

திருமதி ஜி.டொமினிக் ஜீவா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), செல்வி என்.சுதாஜனி (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), செல்வி எஸ்.வாணிமலர்(யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), திருமதி ஐ.பார்த்தீபன் (யா/ நவாலி மகா வித்தியாலயம்), திருமதி ஏ.டி.கலேந்திரன் (யா/ நவாலி மகா வித்தியாலயம்),சி.சுதாகரன் (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி ஜி.சிவசங்கர சர்மா (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

திருமதி ஏ.எம்.டி. உதயகுமார் (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி எஸ்.யோகேஸ்வரி (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),செல்வி பி.சுகந்தினி (யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), ரி.றொபேட் ஆனந்தராஜா (யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை),திருமதி வி.சத்தியரூபன் (யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை) திருமதி ஆர்.செல்வெஸ்டர் (யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்),

திருமதி ஐ.ஜெயசித்ரா (யா/நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலை), எஸ்.சிவசுதன் (யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை), எஸ்.சிவஹரன் (யா/மகாஜனக் கல்லூரி), செல்வி வி.பிரியா( யா/மகாஜனக் கல்லூரி), திருமதி சி.ஜெயமனோன் (யா/ யூனியன் கல்லூரி), எம்.ஜே.கலிஸ்ரஸ் (யா/ யூனியன் கல்லூரி), வி.துஷ்யந்தன் (யா/ யூனியன் கல்லூரி), என்.ஆனந்தகுமார் (யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்), திருமதி எஸ்.ஜெயகாந்தன் (யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்), திருமதி ஆர். பத்ம ராஜ்குமார் (யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்),

செல்வி எஸ்.சுகிர்தா (யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), திருமதி வி.கிசிதா விக்னேஸ்வரன் (யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), செல்வி காயத்திரி (யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), திருமதி கே. விமலதாசன் (யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம்), திருமதி எல்.கமலேஸ்வரன் (யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்),

திருமதி ஜி. விஜயபாஸ்கர் (யா/ அளவெட்டி சதானந்த வித்தியாலயம்), திருமதி ஜெ. கருணானந்தன் யா/ அளவெட்டி சதானந்த வித்தியாலயம்), திருமதி ஏ.ஸ்ரீஜெயந்தி (யா/ குளமங்கால் றோ.க. வித்தியாலயம்), வி.ஜே. திலீபன் (யா/பெரியவிளான் றோ.க.த.க.பா), ஜே.ஜெயஜீவன் (யா/குளமங்கால் றோ.க. வித்தி, வி.நகுலன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), கே.ஹம்சன் (யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியால யம்),ஆர். சசிகுமார் (யா/ இளவாலை றோ.க.த.ஆ. பாடசாலை), ஜே.ஜே.வி.மரியசெல்வம் (யா/ அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசரலை). (அ-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் பிரே...

கொள்வர். எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்துவதாக சர்வதேசத்திற்கு வலியுறுத்திக் கூறுவதே அழுத்தங்களைக் குறைப்பதற்கான வழி என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி பாராளு மன்ற தெரிவுக்குழுவை கூட்டி அரசியல் தீர்வை விரைவாக காண்பதன் மூலமே இந்தியாவின் ஆதரவை ஜெனிவாவில் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். ஜெனிவாவில் மார்ச் மாத 22ஆவது கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணை தொடர்பாக கருத்துத் தெரி விக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மார்ச் மாத ஜெனிவாக் கூட்டத் தொடரில் அமெரிக்கா மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப் போவ தாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க உதவிச் செயலர் கள் தெரிவித்திருந்தனர். ஜெனிவாவில் அமெரிக்கா மற்றுமொரு பிரேரணையைக் கொண்டுவரவுள்ளது என்ற விடயத்தை இலகுவாகக் கருதமுடியாது. காரணம் முதல் தடவை நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகள் அமுலாக்கம் மற்றும் பல்வேறு விடயங்களை வலியுறுத்தி அமெரிக்கா பிரேரணை கொண்டுவந்தது.

இம்முறை பிரேரணையின் உள்ளடக்கம் என்னவென்று தெரிய வில்லை. எவ்வாறெனினும் இதனை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது. அத்துடன் இதனை புலி ஆதரவு புலம்பெயர் மக்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்வர். அதேவேளை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இலங்கை தொடர்பில் தவறானதொரு அபிப்பிராயத்தைக் கூறமுயற்சிப்பார்கள். இது பாதகமானவிளைகளையே ஏற்படுத்தும்சாத்தியம்கொண்டநகர்வாக அமையும் இதன்மூலம் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு யோசனை முன்வைக்கும் சாத்தியம் இல்லை என்று கூறமுடியாது.

எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரை வாக அமுல்படுத்துவதாக சர்வதேசத்திற்கு வலியுறுத்திக் கூறுவதே அழுத் தங்களைக் குறைப்பதற்கான ஒரே வழியாக அமையும் என்பதனை குறிப்பிட வேண்டி உள்ளது. இதேவேளை அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா எந்தவிதமான சமிக்ஞையை வெளிப்படுத்தும் என்று கூற முடி யாதுள்ளது.

ஆனால் 13-வது சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி பாராளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டி அரசியல் தீர்வை விரைந்து காண்பதன் மூலமே இந்தியாவின் ஆதரவை ஜெனிவாவில் பெறமுடியும். அதனை விடுத்து 13ஆவது திருத்தச்சட்டம் ரத்துச் செய்யப்படும் என்று கூறிக் கொண்டி ருந்தால் இந்தியாவின் நம்பிக்கையை வெல்ல முடியாமல் போய் விடும் என்றார். (செ-11)

# வீடமைப்பு திட்ட...

இத்திட்டம் மூலம் கட்டப்படும் வீடுகளை பெறுகின்ற பயனாளிகள் பாதிக்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டும். அரசியல் வாதிகளின் நோக்கங்களை முன்னிறுத்தி நடைமுறையாகி இறுதியில் இந்த உதவித் திட்டம் இனங்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தும் உபத்திர மாக முடிந்துவிடக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டம் நடைமுறையாவதை கண்காணிக்கும் அதிகாரத்தை நிதி உதவி செய்யும் இந்திய அரசு கேட்டுப் பெறவேண்டும். நல்லது செய்ய வந்து இந்தியா கஷ்டத்தில் விழுந்து விடக் கூடாது. இது இந்தியாவுக்கு நாம் சொல்லும் நல்லெண்ண எச்சரிக்கை எனவும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இந்திய அரசின் வீடமைப்பு திட்டம் நடைமுறையாகும் முறைமை குறித்து எழுந்துள்ள பதற்ற நிலைமைகள் பற்றி மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்த முறைப் பாடுகளை அடுத்து, இது தொடர்பில் கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் அசோக் கே காந்தாவுக்கு தான் நேற்றுக் காலை அறிவித்துள்ளதாக கூறிய மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய அரசின் இந்த வீடமைப்பு திட்டத்தில் கட்டப்படும் வீடுகளை தமது அதிகாரத் தைக் கொண்டு ஒரு பிரிவினர் துஷ்பிரயோகம் செய் வதாக பரவலாக முறைப்பாடுகள் மக்கள் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெரும் ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்ட இந்திய அரசின் வீடமைப்புத்திட்டம் நீண்ட காலமாக முடிபின்றி தொடர் கிறது.

இந்த திட்டத்தின் பயனாளிகளை தெரிவு செய்யும் முறைமையும், பயனாளிகளின் பெயர்களும் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளார்களார்களா என்பது பற்றி கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்.

இதை தமது அரசியல் நோக்கங்களுக்காக எவராவது பயன் படுத்து கிறார்களா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு நிதி உதவி செய்யும் இந்திய அரசுக்கு இருக்கிறது. இந்த பொறுப்பை இந்திய அரசு உதா சீனம் செய்யக் கூடாது.

உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களை பயனாளிகளாக முறைப்படி அடையாளம் கண்டு அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படா விட்டால், இனங்கள் மத்தியில் விரிசல் ஏற்படலாம். அதற்கான பதற்றம் இன்று சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் நிலவுகிறது. இது விரும்பத்தக்கது அல்ல.

எனவே இந்திய அரசு தாம் நிதி உதவி செய்யும் இந்த வீடமைப்பு திட்ட வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதை கண்காணிக்க வேண்டும். இது முறைப்படி நடை பெறாவிட்டால், தவறுகளுக்கு இந் திய அரசும் பொறுப்பு ஏற்கவேண்டிவரும்.

யுத்தத்தில் அழிந்த வீடுகளை தமது குடிமக்களுக்கு கட்டிக்கொடுப் பது சிறிலங்கா அரசாங்கத்தின் பொறுப்பு. இதையே இன்று இந்திய அரசு முன்வந்து செய் கிறது. எனவே, இந்திய அரசுக்கு கண்காணிப்பு அதிகாரம் வழங்கப்படா மலும் மறுபுறம் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அநீ தியும் இழைக்கப்படு மானால் இந்தத்திட்டத்தில் இந்திய அரசு சம்பந்தப் பட்டு என்ன பயன் என மனோகணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். (செ-1)


## சுற்றுலாத்துறையியல் கற்கை நெறிகள்



யாழ் நகரில்
09 ம் திகதி ஆரம்பம்
அதிக வருமானத்தை பெற்றுதரும் கற்கை நெறிகள் தமிழ் மொழியில்
NATION TOURISM EDUCATION
Mobile 0718 486 160 Tel 0114651199

## பதவி வெற்றிடம்

One World in Inovage
Grand Opening World Wide Company
With Over Branches expanding in Srilanka We have 05 Different Positions
- Training Marketing executive
- Sales Supervisor
- Sales Managers (With 6 Month Training)

க.பொ.த சாதாரண/ உயர்தர பரீட்சையில் சித்தி 30 வயதிற்கு உட்பட்டவர்கள்
(அனுபவம் அவசியமற்றது)
More Details Contact: 0775566224, 0770771377,021 7200867

## Genius Institute

Spoken English With Grammar and IELTS, Courses are Condueted by Colombo famed Lecturers
G.C.E (O.L) மாணவர்களுக்கு விசேட கவனிப்புடன்
Syllabus, Past paper உடன் பூரணப்படுத்தப்படும்
184, A, Navalar Rd, Jaffna. Tel: 0713106279, 021 320 6656

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 06.02.2013 மு.ப. 9.00 (புதன்)
ஆசிரியர் குழு: Eco - S. வரதன்
Com - B.S. பசில்
Acc - B. புஸ்பாகரன்
ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 5 மணித்தியாலங்கள் நடைபெறும்.
- நிர்வாகி
(1645)

## யாழ் மண்ணில்

A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in...
- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Pshycology



Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

10% பெப்ரவரி 10ஆந் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விஷேட விலைக் கழிவு

மேலதிக விபரங்களுக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk
Macro Ads

## DAY CLASS

(கலை, வணிகப் பிரிவுகள்)
ஆரம்பம்
பெப்ரவரி 6 (புதன்) காலை 9 மணி
DMI
JAFFNA

## கணனிகள் விற்பனைக்கு

டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய, பழைய கணனிகள் விற்பனைக்கு உண்டு.
மொத்த விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
(சி-2325)
IISEEES NALLUR CAMPUS
762 Point Pedro Road, Nallur. 0212224728/ 0777 444 225

## A/L தமிழ் Day Class

ஆரம்பம் - 03.02.2013 8.00 மணி
திரு.K.சந்திரலிங்கம்
DCM யாழ்.நகர்

## வீடு விற்பனைக்கு

துரை வீதி, இணுவில்
மேற்கில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0772871200
(1602)

## A/L Day Class

கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 04.02.2013 திங்கள் 8.00 மணி
வழமையான ஆசிரியர் குழாம்
NEW ECONOMICS COLLEGE
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர் (பெருமாள் கோவில் அருகில்)
(C-2319)

## Computer Repair

உங்களிடத்திற்கு வந்து Computer Repairs, Formating, Software Installation, Networking செய்து தரப்படும்.
075 2414146
(1642)

## வீடு வாடகைக்கு உண்டு

மாவத்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு மானிப்பாயில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770426196
(1644)

## இன்று அழைப்பு நாளை தொடக்கம்

இலங்கையிலுள்ள சர்வதேச நிறுவனத்தின் 55 கிளைகளுக்கு புதிய வெற்றிடங்கள் ஆறுமாத கால இலவச பயிற்சியுடன் நிரந்தர வேலை வாய்ப்பும் வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டு. பயிற்சிக் காலத்தில் (10,000- 15,000) பெறமுடியும். இதில் ஆண், பெண் இருபாலாருக்கும் வாய்ப்பு உண்டு. O/L, A/L மேல் படித்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு: 021 720 1521, 0778920777, 0777009820, 0770308484


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org